www.onlineuthayan.com

பக்கங்கள் : 38

# உதயன்

சுடர் 27
கதிர் 200

வள்ளுவர் ஆண்டு 2043 | வைகாசி 31 புதன்கிழமை (13/06/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

## கடத்தப்பட்ட சிறுமி கை, கால் கட்டப்பட்ட நிலையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13
கந்தரோடைப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட சிறுமி அன்றைய தினமே கைகள், கால்கள் கட்டப்பட்டுக் கைவிடப்பட்ட நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் 04

## உடுப்பிட்டியில் பற்றைக்குள் முதியவரின் சடலம்

வல்வெட்டித்துறை, ஜூன் 13
உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக பகுதிக்கு அருகில் உள்ள பனை வளவு ஒன்றுக்குள் முதியவர் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கரணவாய் தெற்கைச் சேர்ந்த வீரகத்தி சுப்பிரமணியம் (வயது-63) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பொலிஸாரால் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-16-253)

## ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ந்தது

கொழும்பு, ஜூன் 13
அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 133.60 ரூபாவாக நேற்று செவ்வாய்க்கிழமை வீழ்ச்சியடைந்துள்ளது. டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மிகக் குறைந்த பெறுமதி இதுவாகும். நேற்று அதிக பட்சமாக 133.60 ரூபா வீதம் விற்பனை இடம்பெற்றது.

இந்த விடயத்தில் மத்திய வங்கியோ, ஏனைய அரச வங்கிகளோ தலையிட்டதாக நாம் காணவில்லை. அநேகமாக, சர்வதேச நாணய 04

# வட பகுதியில் ஆபத்தை எதிர்கொள்ளும் குடும்பங்களின் பாதுகாப்பு கேள்விக்குறி

### சுட்டிக்காட்டுகிறது ஐ.நா. அமைப்பு

ஜெனிவா, ஜூன் 13
இலங்கையில் பாதுகாப்பு நிலைமை ஸ்திரம் அடைந்துள்ளது. அது விரைந்து மீட்சி பெற்று வருகிறது. இருப்பினும் வடக்கில் வாழ்கின்ற இலகுவில் ஆபத்துக்கு உட்படும் நிலையிலுள்ள குடும்பங்களுக்கான ஆதரவு இன்னும் சவாலாகவே உள்ளது என ஐக்கிய நாடுகளின் பிரதம அதிகாரியின் சிறுவர் மற்றும் ஆயுதப் போராட்டம் பற்றிய வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்தல் மற்றும் அவர்களைப் பயன்படுத்துவதை முடிவுக்கு கொண்டுவருவதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையால் முன்வைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதால் வெட்கப்படவேண்டிய நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

சிறுவர்களைக் கொலை செய்தல், ஊனமாக்குதல், பாலியல் வன்முறையில் ஈடுபடுதல், பாடசாலைகள் வைத்தியசாலைகளை தாக்குதல் என்பவற்றில் ஈடுபடும் தரப்பினர் பட்டியல் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இதுவே வெட்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் ஆகும்.

இந்த அறிக்கையில் மேலும் 04

# அவசரமாக கொழும்பு வருகிறார் சிவ்சங்கர்

## தமிழர் தாயகப் பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்பு குறித்து இந்தியாவின் அதிருப்தியை ஜனாதிபதியிடம் தெரிவிப்பார்



கொழும்பு, ஜூன் 13
இலங்கைக்கான அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு வருகிறார்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இலங்கைப் படைகளினால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு மற்றும் திருகோணமலையிலுள்ள இந்திய எண்ணெய்க் குதங்களை இலங்கை மீளப்பெறவுள்ளமை தொடர்பில் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள இந்தச் சம்பவங்கள் குறித்து இந்திய அரசின் அதிருப்தியையும் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கில் இலங்கைப் படைகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்பு தற்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. குறிப்பாக வடக்கில் அரச காணிகள், தனியார் காணிகள் என்பனவற்றைக் கையகப்படுத்துவதில் படையினர் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர். 04

## வடக்கு தேர்தலை நடத்துமாறு இலங்கைக்கு ஹிலாரி அழுத்தம்



கொழும்பு, ஜூன் 13
வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை உடனடியாக நடத்துமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன், இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்தமாதம் வாஷிங்டனில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துப் பேசிய போது, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டியதன் அவசியத்தை ஹிலாரி கிளின்ரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா தீவிரமான அக்கறை கொண்டுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.(த)

## காணிகளை அபகரிப்பதில் ஆளுநர் தொடர்ந்து தீவிரம்

### பிரதேச செயலர்களுடன் நாளை ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்.மாவட்டத்தில் தனியார் மற்றும் அரச காணிகளை இராணுவ முகாம்கள் அமைப்பதற்காகச் சுவீகரிக்கும் திட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தொடர்ந்து தீவிரமாக உள்ளார். இது குறித்து அவர் நாளை பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்.மாவட்டத்தில் 04

## ஜெனிவா கூட்டத்துக்கு இந்தமுறை உயர்குழுவை அனுப்பாது இலங்கை

கொழும்பு,ஜூன் 13
எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20ஆவது கூட்டத் தொடருக்கான தயார்ப்படுத்தல்களை ஜெனிவாவில் உள்ள இலங்கையின் பிரதிநிரந்தரவ்திவிடப் பிரதிநிதி மனிசா குணசேகரவே 04

## தமிழர் தாயகத்தை அடிமைகளின் பிரதேசமாக மாற்ற அரசு முயற்சி

### விக்கிரமபாகு கருணாரட்ண குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13
தமிழர் தாயக பூமியான வடக்குப் பிரதேசத்தை அடிமைகள் வாழும் பிரதேசமாக மாற்றியமைப்பதற்கே இந்தக் கொடுங்கோல் அரசு இராணுவத்தை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ள நவசமசமாஜக்கட்சி, தமிழர்களின் பொறுமையை இந்தப் பேரினவாத அரசு சோதிக்குமானால் விளைவுகள் விபரீதமாகும் என்றும் எச்சரித் 04

## பண்டத்தரிப்பு, விளானில் காணிகளை படைகளுக்கு வழங்க பிரதேச சபை மறுப்பு

பண்டத்தரிப்பு, ஜூன் 13
வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு மற்றும் பெரியவிளான் பகுதியில் உள்ள காணிகளைப் படையினர் தமக்கு வழங்குமாறு கோரியிருந்த நிலையில், அவற்றை வழங்க முடியாது என்று வலி. தென்மேற்குப் பிரதேச சபை இராணுவத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஜே/146 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பண்டத் 04

## அமெரிக்க தடைகளிலிருந்து இலங்கைக்கு விலக்களிப்பு

வாஷிங்டன், ஜூன் 13
ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதைக் குறைத்துக் கொண்ட இலங்கை உள்ளிட்ட 7 நாடுகளுக்கு நிதித் தடைகளில் இருந்து விலக்களிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

ஈரான் மீதான எண்ணெய் ஏற்றுமதித் தடைகளுக்கு அமைய 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 'பிரமிட்' திட்டங்களில் முதலிட வேண்டாம்

## பாதிக்கப்பட்டோர் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஜூன்13

தடைசெய்யப்பட்ட 'பிரமிட்' திட்டங்களில் மக்கள் பணத்தை முதலிட வேண்டாம். அத்துடன் இவ்வாறான திட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்துக்கு அறியத்தருமாறு வங்கியின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

**சட்டவிரோத 'பிரமிட்' திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டுநடத்தல், நிதியிடல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்கிகளில் கடன்களைப் பெற்றும், நகைகளை அடகு வைத்தும் இவ்வாறான சட்டவிரோத 'பிரமிட்' திட்டங்களில் பணத்தை முதலிட்டமை வேதனைக்குரிய விடயமாகும் எனவும் அவர் கூறினார்.

தடை செய்யப்பட்ட திட்டங்கள் பற்றிய அறியாமை, திட்டத்தில் இணைவதால் ஏற்படுகின்ற சட்டரீதியான பாதிப்புகள், நீதிசார் சட்டங்கள் போன்றவை பற்றிய தெளிவின்மை மற்றும் பணம் சம்பாதிப்பதற்கான பேராசை போன்றவையே பொதுமக்கள் இவற்றில் இணைவதற்கான பிரதான காரணங்களாகும்.

* பொருள்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தை முதலீடு செய்யுமாறு வேண்டப்படுதல்.
* நுழைவுக் கட்டணமானது வழங்கப்படும் பொருளின் விலையில் பல மடங்காக இருத்தல்.
* நிதி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வது கட்டாயமானதாக இருத்தல்.
* பொதுவாகத் திட்டம் பற்றிய தகவல்கள் பூரணமாக வெளிப்படுத்தப்படாதிருத்தல்.

போன்றவற்றின் மூலம் தடை செய்யப்பட்ட திட்டங்களை இனங்காண முடியும்.

இவ்வாறான சட்டவிரோத 'பிரமிட்' திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டுநடத்தல், நிதியிடல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

எனவே இத்தகைய திட்டங்களில் பொதுமக்கள் பணத்தை முதலிடாமல் இருப்பதுடன், இதனால் பாதிக்கப்பட்டவர்கள், இல. 105, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய கிளையுடன் தொடர்பு கொள்ள முடியும் - என்றார். (த-5)

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான நபருக்கு 6 மாத சிறை

வவுனியா,ஜூன் 13

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியான நபருக்கு ஆறுமாத காலச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

மன்னார் பிரதேசத்தில் பயங்கரவாதச் செயல் பற்றி அறிந்திருந்தும் தகவல் கொடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதன்படி 01. 01. 2006 ற்கும் 22. 09. 2009 க்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள் புலிகளின் உறுப்பினர்கள் வெடிபொருள்களை ஏற்றிச் சென்று சேதத்தை விளைவிப்பதற்கு ஆயத்தமாகின்றார்கள் எனத் தெரிந்திருந்தும்,அல்லது அது குறித்த நியாயமான காரணங்களிருந்தும்அதனைப்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அறிவிக்கத் தவறினார் என்றும் சந்தேக நபர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (த)

## இரு தமிழ்ப் பெண்களிடம் கப்பம் கோரிய இருவர் கைது

பம்பலப்பிட்டியில் வசித்துவந்த தமிழ்ப் பெண்கள் இருவரிடம் கப்பம் பெறமுயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களை குற்றப் புலனாய்வு அதிகாரிகள் என அறிமுகப்படுத்தி 25,000 ஸ்ரேலின் பவுண்ஸ்களை கப்பமாக கேட்டுள்ளனர். சந்கே நபர்கள் நேற்று முன்தினம் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்களை நேற்றுப் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (த)

## கொக்குவிலில் ஆலய வாகனங்கள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பல்வேறு வாகனங்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

குதிரை, எருது, ஆடு, காமதேனு ஆகிய நான்கு வாகனங்களும் சூரனது மூன்று தலைகளும் இதன் போது திருடப்பட்டுள்ளன. மரத்தாலான இந்த ஆலய வாகனங்கள் ஒவ்வொன்றும் சுமார் ஐந்து அடி உயரம் கொண்டவை எனக் கூறப்படுகிறது.

ஆலயத்தின் பிரதான நுழைவாயில் கதவை உடைத்தே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருட்டில் ஈடுபட்டவர்கள் ஹைஏஸ் போன்ற வாகனத்தில் வந்தே ஆலய வாகனங்களை எடுத்துச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ங-3)

## சுகாதார அமைச்சின் தலையீட்டால் வைத்தியர் இடமாற்றம் நிறுத்தம்

### மருத்துவர் மீண்டும் போதனா வைத்தியசாலையில் பணியில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வைத்தியர், வைத்தியசாலைப் பணிப்பாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து வைத்தியசாலை வைத்தியர்கள் இன்று தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்தனர்.

இதனால் குறித்த வைத்தியரின் இடமாற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்தது.

அமைச்சின் அறிவிப்பை அடுத்து தாம் பணிப்புறக்கணிப்பை கைவிடுவதாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவுக்குப் பொறுப்பாகப் பணியாற்றிய வைத்தியர் கதிரமலை ராஜசேகரம் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதி ராஜாவினால் கொழும்புக்குச் செல்லுமாறு இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டது.

5 வருடத்துக்கு ஒரு தடவை வைத்தியர்களை இடமாற்றம் செய்வது பொதுவானதொன்று. வடக்குக் கிழக்கு நிலைமை காரணமாக அதை முற்று முழுதாக இங்கு நடைமுறைப்படுத்துவதில்லை. அவ்வாறு இடமாற்றம் வழங்குவதாக இருந்தாலும் வடக்கில் ஏதாவது ஒரு வைத்தியசாலைக்கு இடமாற்றம் வழங்கியிருக்கலாம். அதைவிடுத்து வழமைக்கு முரணாக இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அவர் இருந்த இடத்துக்கு பிறிதொரு வைத்தியர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தத் திடீர் இடமாற்றத்தைக் கண்டித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளையினர் கொழும்பிலுள்ள தாய்ச்சங்கத்துக்கும் அறிவித்தனர்.

அத்துடன் நேற்றுக் காலை வைத்தியர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி அதில் வைத்தியரின் இடமாற்றத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் இல்லாதுவிடில் இன்று தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாகத் தீர்மானித்தனர். அது பற்றி பணிப்பாளருக்கும் கொழும்புக்கும் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உடனடியாகத் தலையிட்ட சுகாதார அமைச்சு உயர் அதிகாரி குறித்த வைத்தியரின் இடமாற்றக் கடிதத்தைச் செல்லுபடி அற்றது என நிராகரித்து, அவர் தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்ற முடியும் எனத் தெரிவித்து பணிப்பாளரின் இடமாற்றத்துக்கு இடைக்காலத்தடை விதித்தார்.

வைத்தியசாலையில் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படும் மோசடிகளைத் தட்டிக் கேட்டதனால் பழிவாங்கும் நோக்கிலேயே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படுவதாக வைத்தியர் சங்கத்தினர் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-4)

## மகசின் சிறைச்சாலை கைதிகளுக்கு பரிசோதனை செய்யுமாறு உத்தரவு

கொழும்பு,ஜூன் 13

கொழும்பு, மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 220 கைதிகளுக்கும் இரத்தப் பரிசோதனைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுச் சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், குறித்த சிறைச்சாலையைச் சேர்ந்த கைதியொருவர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இந்த நிலையிலேயே கோட்டை நீதவான் பிரபர்ஷா ரணசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை மேற்படி உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த சிறைக்கைதி ஒருவரே எயிஸ்ட் நோய் காரணமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## கப்பம் கோரிய அமைச்சரின் செயலாளருக்குப் பிணை

கொழும்பு,ஜூன் 13

கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஒருவர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தின் மூலமாக இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சரின் செயலாளர் என குறிப்பிடப்பட்ட டொனல்ட் ரஞ்ஜித் என்பவர் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.இவர் 26 இலட்சம் ரூபா கப்பம் கோரியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் இரண்டு 10 இலட்சம் ரூபா தனிநபர்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.இதேவேளை இந்த வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (த)

## காரைநகர் மாணவர்களுக்கு கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

காரைநகர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் ஐயனார் தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் டாக்டர் எஸ்.குகதாசன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

எனவே மாணவர்கள் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16)

## இரணைமடு நீர் விநியோகம் தாமதம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரைக் கொண்டு வரும் இரணைமடு நீர் விநியோகத் திட்டத்தின் தாமதங்கள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இரணைமடு நீர் விநியோகம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் கிளிநொச்சியில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு நீரைக் கொண்டு வரும்போது குறிப்பிட்ட இடங்களில் தண்ணீர்த் தாங்கிகள் அமைப்பதற்கு இனம் காணப்பட்டிருந்தது. இந்தத் தாங்கிகள் சில தனியார் காணிகள், அரச காணிகளில் அமைக்கப்பட இனங் காணப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இனங் காணப்பட்ட காணிகளை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்குவது தொடர்பிலும் இதில் ஏற்படும் இடர்பாடுகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்பின்னர் இரணைமடு வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது. இரணைமடு அணைக்கட்டு உயர்த்தப்பட்டு, சில இடங்களில் நீர்க்குழாய்கள் புதைக்கப்படுவது தொடர்பிலான முன்னேற்றங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் மழை நீரைச் சேகரிக்க வேண்டும் என்றும், இதற்குரிய வகையில் குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும், மேலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் இதில் வலியுறுத்தப்பட்டது.

இதில் பிரதேச செயலர்கள், திட்டப் பணிப்பாளர்கள், எந்திரி தி.பாரதிதாஸன், வடமாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி என்.சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்திறங்கிய ஜெனரேற்றர் மூலம் நயினாதீவுக்கு தொடர் மின்சாரம்

## இன்னும் சில தினங்களில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

*நயினாதீவுக்கு எடுத்துவரப்பட்டுள்ள புதிய ஜெனரேற்றர் மூலம் இன்னும் சில தினங்களில் 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது. இதனால் நயினாதீவு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.*

*காங்கேசன்துறையில் இருந்து கடற்படையினரின் விசேட கப்பல் மூலம் நயினாதீவுக்குக் கொண்டு செல்லப்பட்ட 500 கே.வி. புதிய ஜெனரேற்றர் நேற்றுக் காலை நயினாதீவு வங்களாவடி இறங்கு துறையில் பொதுமக்களின் உதவியுடன் இறக்கப்பட்டது.*

நேற்றுமுன்தினம் விசேட கப்பலில் ஜெனரேற்றர் நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அதனை அங்கு இறக்க முடியவில்லை. இதனால் நேற்று அதிகாலை இறக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. பின்னர் பாதுகாப்பாக அங்கு இறக்கப்பட்டது.

இதனையடுத்து இன்னும் சில தினங்களில் நயினாதீவுப் பிரதேசத்துக்கான 24 மணிநேர மின்சாரம் கிடைக்கும் என வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

எதிர்வரும் 19ஆம் திகதி நயினாதீவு நாகபூஷணியம்மன் ஆலயத் திருவிழா ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜெனரேற்றர் மூலம் மின் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இதுவரை காலமும் நயினாதீவில் மின் வழங்கி வந்த ஜெனரேற்றர்களை மண்டைதீவுப் பிரதேசத்திற்கு வழங்கி அங்கு மின் வழங்கும் பணியை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை வடக்கு பிரதிப் பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரியவருகிறது.

(த-41-17)

# தொலைபேசி வயர்களால் போக்குவரத்தில் இடையூறு



யாழ்ப்பாணம், ஜூன் 13

*யாழ்.கஸ்தூரியார் வீதியில் தொலைபேசிக் கம்பங்கள் ஊடாகச் செல்லும் தொலைபேசி இணைப்பு வயர்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதுடன் அடிக்கடி இந்தப் பகுதியில் விபத்துக்களும் ஏற்படுகின்றன.*

*நேற்று முன்தினம் லொறி ஒன்று இந்த வீதியூடாகச் சென்ற பொழுது தொலைபேசி வயர்களில் சிக்குண்டமையால் தொலைபேசிக் கம்பம் முறிந்ததுடன் போக்குவரத்தில் பலரும் இடையூறுகளை எதிர்கொண்டிருந்தனர்.*

*நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.*

*மதுபானவகைகளை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்றே தொலைபேசி வயர்களில் சிக்குண்டமையால் கம்பம் முறிந்தது. ஒரே கம்பத்தில் பெரும் தொகையான தொலைபேசி வயர்கள் பொருத்தப்பட்டமையாலேயே பாரம் தாங்காமல் அது முறிந்ததாகக் கூறப்படுகிறது.*

*கீழே பதிந்து தொங்கிய நிலையிலேயே அநேகமான வீதிகளில் இந்த வயர்களைக் காணமுடிகிறது. இதனால் லொறிகள் சில நேரங்களில் சிறிது தாமதத்துக்குப் பின்பே பயணிக்க வேண்டிய நிலையும் தொடர்கிறது.*

*இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனவே இதனைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.* *(த-4)*

# கல்விப் பணிப்பாளர் இடமாற்றம்

தென்மராட்சி, ஜூன் 13

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்துக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIஐச் சேர்ந்த கே.இளங்கோ நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றமும் நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. (த-9)

# பல்கலை மாணவருக்கு தனியார் பஸ் சேவை

## இந்த வாரம் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான தனியார் பஸ் சேவை மத்திய பஸ் நிலையத்துக்கும் யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தமக்கான பஸ் சேவையொன்றை தனியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து யாழ். பல்கலைக்கழக பதிவாளர், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துக்கும் யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தலைவருக்கும் மாணவர்களின் கோரிக்கையை தெளிவுபடுத்தியிருந்தார்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி பல்கலைக்கழகப் பதிவாளரால் மாணவர்களின் கோரிக்கை தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

பஸ்ஸில் பயணம் செய்யும் பல்கலைக்கழக மாணவர்கள் தினமும் விரிவுரைகளுக்கு உரிய நேரத்தில் சமுகமளிப்பதிலும் விரிவுரைகள் முடிந்து வீடு செல்வதிலும் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களின் பயண வசதியை மேம்படுத்தும் விதமாக யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து பரமேஸ்வராச் சந்தி வரை பஸ் சேவையை நடத்த வேண்டுமெனப் பதிவாளர் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தனியார் பஸ் சேவை தினமும் காலை 8 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியை அடையும் வகையில் யாழ்.மத்திய நிலையத்தில் இருந்து இடம்பெறவுள்ளது. அதேபோல் மாலை 5.05 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் இருந்து மத்திய பஸ் நிலையம் நோக்கி பஸ் புறப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான இந்தச் சேவை இந்த வாரம் ஆரம்பிக்கப்படும் என யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையம் தெரிவித்தது. (த-3)

# குறைந்த வாடகையில் மாணவருக்கு சைக்கிள்

தென்மராட்சி, ஜூன்13

தூர இடத்திலிருந்து நடந்து வரும் மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள நான்கு பாடசாலைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் தலா 14 சைக்கிள்கள் 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் அண்மையில் அந்தந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி ம.வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தூர இடங்களிலிருந்து நடந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு வழங்கி மாதாந்தம் குறைந்த வாடகை அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நான்கு பாடசாலைகளுக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினரால் சைக்கிள் வழங்கும் நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தனும் கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# உப உணவுச் செய்கை வரணியில்

வரணி இடைக்குறிச்சி மாவில் வயல் வெளியில் நெல் அறுவடையின் பின்பு விவசாயிகள் பலர் உப உணவுச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள குளம் ஒன்றில் இருந்து பயிர்ச்செய்கைக்கான பாசன நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் ஒரு சில விவசாயிகளே இந்தச் செய்கையில் ஈடுபட்டு இருந்தனர். தற்சமயம் விவசாயிகள் பலர் இந்தச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-122)

# நகரசபைக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் அடாவடி

வல்வெட்டித்துறை மீன்சந்தை குத்தகைப் பணத்தை மூன்றில் ஒன்றாகக் குறைப்பதாகக் கூறி இன்றுவரை குறைக்கவில்லை. அதனைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் ஏற்கனவே இது தொடர்பாக தீர்மானிக்கப்படும் எந்த வித நடவடிக்கைகளும் இல்லையே என ஆவேசத்துடன் கேட்டார் சிவாஜிலிங்கம்.

வடமராட்சி, ஜூன் 13

வல்வெட்டித்துறை நகரசபைக் கூட்டத்தில் நேற்று கடும் ஆவேசத்துடன் ரகளையில் ஈடுபட்ட ஆளும் தரப்பு உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மேசைமீதிருந்த தண்ணீர்ப் போத்தல், பதிவேடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு சபையை விட்டு வெளியேறினார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் 10ஆவது சபைக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில், சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

கூட்டத்தில் ஆளும் தரப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 7பேரும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

சுமுகமான கூட்டம் ஆரம்பமாகிச்சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் பேசிய ஆளும் தரப்பு உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை மீன் சந்தை குத்தகைப் பணத்தை மூன்றில் ஒன்றாகக் குறைப்பதாகக் கூறி இன்றுவரை குறைக்கவில்லை. அதனைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் ஏற்கனவே இது தொடர்பாக தீர்மானிக்கப்படும் எந்தவித நடவடிக்கைகளும் இல்லையே என ஆவேசத்துடன் கேட்டார் சிவாஜிலிங்கம்.

அதனைக் குறைக்க இடமில்லை என சபைத் தலைவர் கூறிய போது உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆவேசத்துடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அவரது மேசையிலிருந்த தண்ணீர்ப் போத்தல், சக உறுப்பினர்களின் பதிவேட்டுப் புத்தகங்களை வீசி விட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

சிவாஜிலிங்கம் வெளியேறிய போதும் சபையின் கூட்டம் சுமுகமாகத் தொடர்ந்து பல மணிநேரம் நடைபெற்றதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(10-8)

# யாழ்.நலன்புரி நிலையங்களின் நிலைமைகளை ஆராய்கிறது குழு

யாழ்ப்பாணம், ஜூன்13

யாழ்.மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை யாழ்.செயலக உயர் அதிகாரிகள் குழு பார்வையிட்டு வருகின்றது.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களின் நிலைமை தொடர்பில் அறிந்து கொள்வதற்காகவே இந்தக் குழு நலன்புரி நிலையங்களைப் பார்வையிடுகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணங்கள் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டதுடன் அவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வந்த உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்பவர்களில் பலர் பெரும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருவதை இந்த உயர் அதிகாரிகள் குழு அவதானித்துள்ளது.

நலன்புரி முகாம்களில் தொடர்ந்து கஷ்டப்படுவோர் குறித்துக் கவனம் செலுத்தப் [illegible] அதிகாரி ஒருவர் கூறினார்.

(த-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டத்தரிப்பு....

01↘ தரிப்புப் பகுதியில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான 49 பரப்புக் காணியையும், ஜே/153 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான 7 பரப்புக் காணியையும் தருமாறு இராணுவத்தின் 14 ஆவது கெமுனுவோச் படைப்பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

14ஆவது கெமுனுவோச் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி எம்.ஜி.ஜி.டபிள்யூ. ஹேரகன என்பவர் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதத்தின் மூலமாகவே பிரதேச சபையிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. எனினும் இந்தக் காணியை வழங்க முடியாது என்று பிரதேச சபையினால் இராணுவத்துக்கு எழுத்துமூலமாகப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

மக்களின் சொத்துக்கள் மக்களின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர இராணுவத்தினரின் தேவைக்காகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்பதே பிரதேச சபையின் நிலைப்பாடு. எதிர்வரும் காலங்களில் மேலும் அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுக் காணியை இராணுவம் அபகரிப்பதைத் தடுக்கும் நோக்கில் காணி இருக்கும் இடங்களில் பொது நோக்கு மண்டபம், கிணறு, நீர்த் தாங்கி அமைத்து மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கெனத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் - என்றார்.

இதில் பண்டத்தரிப்பில் உள்ள 49 பரப்புக் காணியைப் பிரதேச சபையினர் சில நாள்களுக்கு முன்னரே துப்புரவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-130)

## கடத்தப்பட்ட....

01↘ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை கந்தரோடைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

சம்பவ தினத்தன்று காலை வீட்டின் முன்பகுதியில் நின்றுகொண்டு பல்துலக்கிக் கொண்டிருந்த குறித்த சிறுமியை வானில் வந்த இனந் தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

பின்னர் வீட்டுக்கு அருகில் உள்ள அருளானந்தப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக அவர் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் அன்றைய தினமே அயலவர்களால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

9 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு கடத்தப்பட்டுப் பின்னர் அயலவர்களால் மீட்கப்பட்டுள்ளார். இது குறித்துச் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

சிறுமியின் காதில் இருந்த தோடுகள் அபகரிக்கப்பட்டுள்ளன. சுன்னாகம் பொலிஸார் சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.இதுதொடர்பான விசாரணைகளைப் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-16-86)

## அமெரிக்க...

01↘ இந்தியா, மலேசியா, தென்கொரியா, தென்னாபிரிக்கா, இலங்கை, துருக்கி, தாய்வான் ஆகிய நாடுகள் ஈரானிடம் இருந்த எண்ணெய் கொள்வனவு செய்வதைக் கணிசமாகக் குறைத்துக் கொண்டுள்ளதை உறுதி செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா கொண்டு வந்த எண்ணெய் ஏற்றுமதி தடையை ஜப்பான், மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த நாடுகளின் பட்டியலில், ஈரானின் நெருங்கிய நட்பு நாடான இலங்கையையும், அமெரிக்கா இணைய வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

## காணிகளை....

01↘ இராணுவத்தினர் தாம் நிலைகொண்டுள்ள காணிகளைத் தமக்கு வழங்குமாறு கோரி கடந்த வருட இறுதிப் பகுதியில், அந்தந்தப் பிரதேச செயலர்களுக்குக் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இந்தக் கடிதங்களுக்குப் பிரதேச செயலர்கள் உரிய பதில் வழங்காததை அடுத்து, வடமாகாண ஆளுநர் கடந்த மாத இறுதியில் யாழ்.மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரைத் தனது அலுவலகத்துக்கு அழைத்திருந்தார்.

இதில் இராணுவத்தினர் கோரிய காணிகளை அவர்களுக்கு வழங்க என்ன தடை இருக்கிறது என்று பிரதேச செயலர்களிடம் அவர் கேட்டதுடன், கடந்த 8 ஆம் திகதிக்கு முன்னர் இராணுவத்தினர் கோரிய காணிகளின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதன் பின்னர் படையினர் மீண்டும், அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்குத் தாம் கோரிய காணிகளின் விவரத்தைச் சமர்ப்பித்தும் அவற்றை வழங்குவதற்குப் பிரதேச செயலர்கள் முன்வராத நிலையிலேயே வடமாகாண ஆளுநர் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், அரச காணிகள் யார் யாருக்கு வழங்கப்பட்டன, யாரால் அந்தக் காணிகள் கேட்கப்பட்டுள்ளன என்ற விவரங்களுடன் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குத் தனது அலுவலகத்துக்கு வருமாறு வடமாகாண ஆளுநர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மத்திய அரசின் கீழ் இயங்கும் தம்மை மாகாண சபையின் வடமாகாண ஆளுநர் இவ்வாறு கூட்டங்களுக்கு அழைப்பது தொடர்பில் தமது விசனத்தை வெளியிட்டுள்ளனர். (த-5)

## அவசரமாக...

01↘ படையினரின் இந்த நடவடிக்கைக்கு தமிழ் மக்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பும் கண்டனமும் எழுந்துள்ள நிலையில் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொழும்பு வருகிறார். இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் இந்த நில அபகரிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கும் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ள நிலையில் கொழும்பு வரும் மேனன் இது குறித்து அரசுடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இதர அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுடன் சிவ்சங்கர் மேனன் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார்.

சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணமானது முன்கூட்டியே திட்டமிடப்பட்டதொன்றல்ல என்றும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பில் முக்கிய பேச்சுகளை நடத்தவே அவர் அவசரமாக வருகிறார் எனவும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று மாலை 'உதய'னிடம் தெரிவித்தன. தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக் குறித்து மேனன் ஜனாதிபதி மஹிந்தவுடன் பேச்சு நடத்துவாரா என அந்த வட்டாரங்களிடம் வினவியபோது ''அதுபற்றி இப்போது எதுவும் கூறமுடியாது. அவர் இங்கு வந்து பேசிய பின்பே அது குறித்துத் தெரியவரும்'' என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

முன்னதாக, திருகோணமலையில் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள 99 எண்ணெய்க் குதங்களையும் இலங்கை அரசு மீளப்பெற உத்தேசித்து வருகின்றது என கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

கடந்த 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில், பெற்றோலிய வள அமைச்சு இந்தக் குதங்களை 33 ஆண்டுகள் குத்தகைக்கு லங்கா - இந்தியன் எண்ணெய் நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது. இவ்வாறு செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டில் குறைபாடுகள் இருக்கின்றன எனவும், ஆனால், அவற்றைக் கருத்திற்கொண்டு இந்தக் குதங்களை மீளப்பெற அரசு ஆராய்ந்து வருகிறது என்றும் கடந்த வாரம் வெளிவந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியின் கீழ் அவசர அவசரமாகக் கொழும்புவரும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்த விவகாரம் தொடர்பிலும் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார் என அறியமுடிகின்றது. (த-சி)

## ரூபாவின்...

01↘ நிதியத்துடனான பேச்சுக்கள் காரணமாக அவர்களின் கைகள் கட்டப்பட்டிருக்கலாம்'' என நாணய பரிமாற்றுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

133.60 வீதம் டொலர் விற்கப்பட்டதை நான்கு முகவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.இதற்குமுன் அதிக பட்சமாக, ஏப்ரல் 25 ஆம் திகதி டொலரின் பெறுமதி 133.00 ஆக இருந்தது.நாணயப் பரிமாற்று வீதத்தில் நெகிழ்வுத்தன்மையைக் கடைப்பிடிக்குமாறு மத்திய வங்கிக்கு சர்வதேச நாணய நிதியம் நீண்டகாலமாக அழுத்தம் கொடுத்து வந்தது.

இந்த நிலையில் 420 மில்லியன் டொலர் கடனின் கடைசித் தொகுதியை வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் மத்திய வங்கி மற்றும் இலங்கை அரச அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஜெனிவா.....

01↘ மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான நகர்வுகள் ஏதும் இந்தக் கூட்டத்தொடரில் இடம்பெற வாய்ப்பில்லை என்பதால், இவரே இம்முறை இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்று கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடுமையான விவாதங்கள் இடம்பெற்று வந்ததால், ஜனாதிபதியின் மனிதஉரிமை விவகார ஆலோசகரான அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவே பங்கேற்று வந்தது.

ஆனால், இம்முறை மகிந்த சமரசிங்கவோ, சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளோ ஜெனிவா செல்ல மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

அதேவேளை ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி தாமரா குணநாயகம் தன்னை இந்தக் கூட்டத்தொடருக்கான தயாரிப்புகளில் இருந்து இலங்கை வெளிவிவகார அமைச்சு ஒதுக்கி வைத்துள்ளதாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

ஜெனிவாவுக்கான தூதுவர் பதவி முடிவடைவதுடன் தான் இராஜதந்திர சேவையில் இருந்து விலகுவதாக தாமரா குணநாயகம் அறிவித்துள்ளார்.அவர் தனக்கு ஜுன் 10 தொடக்கம் ஜுன் 30 வரை விடுமுறை கோரியிருந்தார். அந்த விடுமுறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர் தொடங்குகின்றது என்பதைத் தெரிந்து கொண்டே, அவர் விடுமுறை கோரியிருந்தார்.எனவே அவரது விடுமுறைக்கு அனுமதி அளித்து விட்டோம். என்று கூறியுள்ளார். (த)

## வட பகுதியில் ....

01↘ கூறப்பட்டுள்ளதாவது:-இலங்கையில் பாதுகாப்பு நிலைமை ஸ்திரம் அடைந்துள்ளது. அது விரைந்து மீட்சி பெற்று வருகிறது. இருப்பினும் வடக்கில் வாழ்கின்ற இலகுவில் ஆபத்துக்கு உட்படும் நிலையிலுள்ள குடும்பங்களுக்கான ஆதரவு இன்னும் சவாலாகவே உள்ளது.

அங்கு பெருமளவு இராணுவப் பிரசன்னம் காணப்படுகிறது. சிவில் நிர்வாகம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அரசு இவற்றை முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்போவதாகக் கூறியுள்ளது.

இதனுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தும்போது யுத்தத்துக்குப் பின்னரான முயற்சிகளுக்கு அது வலு சேர்ப்பதாக அமையும்.

ஒக்ரோபர் 2009இன் பின் சிறுவர்களை ஆயுதக் குழுக்களில் இணைத்த சம்பவங்கள் பற்றி அறியப்படவில்லை. இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் படையில் சேர்க்கப்பட்ட 6905 பிள்ளைகளின் 1373 பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது.

இனியபாரதியின் படையில் சேர்க்கப்பட்டதாக அறியப்பட்ட மூன்று சிறுவர்கள் உட்பட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினால் படையில் சேர்க்கப்பட்ட 5 சிறுவர்கள் எங்குள்ளனர் என்பதும் தெரியாதுள்ளது.

2008ஆம் ஆண்டிலிருந்து மூன்று புனர்வாழ்வு நிலையங்கள் இயங்குகின்றன. இங்கு தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், இனியபாரதி ஆகியோருடன் இணைந்திருந்த பிள்ளைகளுக்குக் கல்வி, அரவணைப்பு, ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் குடும்பத்துடன் இணைந்ததற்கான உதவி என்பன வழங்கப்படுகின்றன.

இதுவரையில் 364 ஆண்கள், 230 பெண்கள் அடங்கலாக 12 -18 வயதுக்கு உட்பட்ட 594 பிள்ளைகள் தமது புனர்வாழ்வு திட்டத்தைப் பூர்த்திசெய்து தமது குடும்பத்துடன் சேர்ந்துள்ளனர்.

இருப்பினும், முன்னர் ஆயுதக் குழுக்களுடன் இணைந்திருந்த பல பிள்ளைகள் இந்த ஒன்றிணைப்புத் திட்டத்தில் இணையவில்லை என தெரியவந்துள்ளது. இப்படியான சிறுவர்களைக் கண்டுபிடிப்பதில் கண்காணிப்பு படையினர் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

2009இல் வவுனியா அரச் அதிபரும் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் ஆணையாளரும் இணைந்து தனித்துப் போன சிறுவர்களுக்கெனக் குடும்பத்தை கண்டுபிடிக்கும் அலகொன்றை யுனிசெப் ஆதரவுடன் நிறுவினர். இதை எழுதும்போது குடும்பத்தை அல்லது பிள்ளையை தேடிப் பிடித்து தரும்படி 736 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இணைக்கப்பட்டவர்கள். இன்று வரை 139 சிறுவர்கள் கிடைத்த தரவுடன் ஒத்துப்போக காணப்பட்டு உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு இந்த அலகுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 42பேர் தமது குடும்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்-என்றுள்ளது. (த)

## தமிழர் தாயகத்தை அடிமைகளின்....

01↘ துள்ளது. மயான பூமியையும் ஆக்கிரமித்து, அங்கு பௌத்த கொடியை நிலைநாட்டி சிங்கள தேசம் என்ற இனவாத மந்திரத்தை ஓதி நாட்டை சிங்களமயமாக்குவதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தங்களின் உரிமைகளைக் கோரிப் பேராடிய தமிழர்களைக் கொன்று குவித்த இந்த அரசு, தமிழினத்தின் தனித்துவ சின்னங்களையும் இன்று அழித்து வருகின்றது எனவும் நவசமசமாஜக் கட்சி குறிப்பிடுகின்றது.

யாழ். குடாநாட்டில் இராணுவம் திட்டமிட்ட அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமது உரிமைகளை ஜனநாயக விழுமியங்களுக்கமையப் பெற்றுக்கொள்ள முடியாத - அதனை இன்னுமொரு தரப்பு தருவதற்கு மறுக்கும் சந்தர்ப்பத்தில் வன்முறைகளில் ஈடுபட்டே உரிமைகளைப் பெற வேண்டும் என்ற நிலைமை தோன்றுகின்றது. அதுதான் பிற்காலத்தில் தீவிரவாதமாக உருவெடுக்கும்.

தமிழர்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சாத்வீக வழியில் போராடினர்; காந்திய வழியைப் பின்பற்றினர். ஆனால், சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழர்களை அடக்குவதற்கு முயற்சித்ததே தவிர, உரிமைகளை வழங்குவதற்கு முன்வரவில்லை.

அதன் பின்னர் ஏற்பட்ட - உருவான ஆயுதப் போராட்டத்தால் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தில் தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டனர். இரத்த வெள்ளத்தில் சடலங்கள் மிதந்தன. பிணம் தின்னும் மிருகங்களாக அப்போது அரசு செயற்பட்டது. அரசியல் நலன்களுக்காக விலைமதிக்கமுடியாத உயிர்களைக் கூட சர்வதேச சமூகம் கருத்திற்கொள்ளவில்லை.

இவ்வாறு பல இன்னல்களைச் சந்தித்த பின்னரும் கூட தமிழர்களின் துயரங்கள் - அவல நிலைமைகள் தீரவில்லை. மாறாக, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கையிலேயே அரசு ஈடுபட்டுள்ளது.

அனைத்தையும் இழந்து நடைப்பிணங்களாய் வாழும் வடக்கு மக்களுக்கு தற்போது இருக்கும் ஒரே சொத்து அவர்களது காணிகளாகும். அதைக்கூட இராணுவம் பறிப்பதற்கு முயற்சிக்கின்றது.

தமிழீழம் என்றொரு நாட்டைக் கைப்பற்றிவிட்டோம் என்ற ஆணவப் போக்கிலேயே அரசு செயற்படுகின்றது. ஒரு நாட்டை இன்னுமொரு நாட்டின் இராணுவம் கைப்பற்றிய பின்னர் அந்த நாட்டின் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துக்கொள்ளும். அதைத்தான் தற்போது இலங்கை இராணுவம் வடக்கில் செய்கின்றது; இனியும் செய்யப்போகின்றது.

தமிழர்கள் இனியும் இல்லையென்ற அளவு பொறுமை காத்து வருகின்றனர். ஆனால், இந்தப் பேரினவாத அரசு அவர்களை சீண்டிவிட்டுப் போராட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றது. வடக்கு மண்ணை தெற்கின் அடி[illegible] அரசின் சிந்தனையாகும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாட்டின் தேசியக் கொடியை ஏற்றும் மனோநிலை வருமா?

தேசியக்கொடி விவகாரத்தை மீண்டும் பிரச்சினையாக்குவதற்கு சிலர் முயற்சி செய்வது தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டு மேதினக் கூட்டத்தின் போது ஐ.தே.க.தலைவரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் சேர்ந்து தேசியக் கொடியான சிங்கக் கொடியை உயர்த்திப் பிடித்திருந்தார்.

இந்த நிகழ்வு இரு கட்சிகளினதும்-இரு சமூகங்களினதும் எதிர்கால ஒற்றுமையை-ஒருமைப்பாட்டை எதிர்வுகூறும் ஒரு சமிக்ஞையாக பெரும் தன்மையுடன் பார்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சில கட்சிகளும் தலைவர்களும் அந்த சம்பவத்தைக் குறைகூறியது ஒரு புறமிருக்க கேலியும், கிண்டலும் செய்வதிலும் பின்நிற்கவில்லை.

பொது நிகழ்வொன்றில் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதென்பது ஒருவர் சொல்லி இன்னொருவர் செய்வதன்று. சொல்பவரின் நோக்கம் என்ன, சொல்லப்படுபவரின் நோக்கம் அல்லது மனோநிலை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பொறுத்தும் அது அமைவதாகும்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த சமூகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா அங்கு வருகை தந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை தேசியக் கொடியை ஏற்றிவைக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும் அதனை நாடாளுமன்ற உறுப்பினர் மறுத்துவிட்டதாகவும் செய்தி வந்திருந்தது. இதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதுவித முகாந்திரமும் இன்றி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறிக்கை விட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

உண்மையில் அரச நிகழ்வு என்பதால் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் வருகைதந்திருந்ததை வரவேற்றிருக்க வேண்டுமே தவிர தேசியக் கொடியை ஏற்றிவைக்கும்படி அவரைக் கேட்டிருக்க வேண்டியதில்லை. அதுபற்றி முன்கூட்டியே அவருடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும். இரு சாராருக்குமே தர்மசங்கடமான ஒரு நிலை ஏற்படவே அது பயன்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சம்பந்தன் கொடியை உயர்த்திய சந்தர்ப்பம் வேறு, விநாயகமூர்த்தி கொடியை ஏற்றிவைக்கும்படி கேட்கப்பட்ட சூழ்நிலை வேறு.அது மட்டுமல்ல அது சட்டபூர்வமானதொன்றுமல்ல.

அப்படி ஒரு சட்டத்தை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வேண்டுமானால் தாம் அரசமைக்கும் போது புதிதாக இயற்றிக் கொள்ளலாம். அந்த அமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தியை விசாரணைக்குட்படுத்தும்படி கேட்டிருப்பது வேடிக்கையாகவுள்ளது.

பொது நிகழ்வொன்றில் அழைப்பின் பேரில் வந்துள்ள எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தேசியக் கொடியை ஏற்றி வைக்கும்படி அமைச்சர் ஒருவர் கேட்டுக் கொள்வது அல்லது கட்டளையிடுவது என்பதும் அதனை அப்படியே தலைமேல் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி வைப்பதென்பதும் சட்டபூர்வமானதொன்றல்ல.

அன்றைய நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தேசியக்கீதத்தை பாடும்படி கேட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்?

தேசிய கீதம் இயற்றப்பட்ட காலத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு பொது நிகழ்வுகளில் ஒரே மெட்டில் இரண்டுமொழிகளிலும் பாடப்பட்டு வந்துள்ளது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அரசு பதவிக்கு வந்த பிறகுதான் சிங்களத்தில் மட்டும் பாடவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட்டது. இது பற்றி ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் நல்லிணக்க ஆணைக்குழுவும் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதை அனுமதிக்கும்படி பரிந்துரைத்துள்ளது.

தேசியக் கொடியை ஏற்றும் மனோ நிலையில் தமிழ் மக்கள் இல்லை. அதே நிலையில் தாமும் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி விளக்கம் அளித்திருக்கிறார். தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் நியாயமான முறையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தீர்க்கப்படுமானால் இந்த மனோநிலை மாறுவது சாத்தியமாகலாம். அதைத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கோடிகாட்டியிருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும் அரசும் அதன் ஆதரவுக் கட்சிகளும் தேசியக் கொடியையும் சிறுபான்மை மக்கள் முழுமனதுடன் எவரதும் தூண்டுதல் இல்லாமல் பெருமையுடன் ஏற்றிப் போற்றுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும். அதை விடுத்து பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் பிரமுகர்களை சங்கடத்துக்குள்ளாக்கி தாமும் சங்கடத்துக்குள்ளாகாத நிலைமை இருக்கவேண்டும் என்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# வைத்தியர்களின் தொலைபேசி கொடுப்பனவுகள் அதிகரிப்பு

### நோயாளருக்குப் பயன் கிட்டுமா?

யாழ்ப்பாணம்,ஜூன் 13

நோயாளர்களின் நலனில் அக்கறை கொள்ளும் விதத்தில் வைத்திய அதிகாரிகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள தொலைபேசிக் கொடுப்பனவு கட்டண முறையை வைத்திய அதிகாரிகள் உரிய முறையில் பயன்படுத்துவார்களா? இதனால் நோயாளிகளுக்குப் பயன் கிட்டுமா? என மக்கள் கேட்டுள்ளனர்.

நோயாளர் தொடர்பாக மேலதிக சிகிச்சை முறையினை மேற்கொள்வதற்காக மேலதிகாரிகளுடன் பெறப்படும் அவசர அழைப்புகளுக்கும், கடமை நிமித்தம் வேறு இடங்களுக்குச் செல்லும் வைத்திய நிபுணர்களுடன் தொடர்புகொள்வதற்கும், வைத்திய சிகிச்சை தொடர்பாக மேலதிக அறிவைப் பெறுவதற்கு இணையத் தளங்களைப் பாவிப்பதற்குமென வைத்திய அதிகாரிகளுக்குச் சுகாதார அமைச்சினால் தொலைபேசிக்கான கொடுப்பனவுக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பயன்படுத்தும் தொலைபேசியின் மாதாந்தப் பட்டியல் சமர்ப்பிக்காமல் ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றில் இரண்டு பங்கினையும் அலுவலக தொலைபேசி பயன்படுத்தினால் மூன்றிலொரு பங்கினையும் வேதனத்துடன் பெறலாம் எனவும் குறித்த கட்டணங்களுக்கு மேலுள்ளவற்றுக்கான மீதித் தொகையை சிட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மே முதலாம் திகதி தொடக்கம் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் 24 மணிநேர தொலைபேசிப் பயன்பாட்டுக்கென விசேட தர வைத்திய நிபுணர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபாவும், நிர்வாகக் கடமையில் உள்ள வைத்திய அதிகாரிகளுக்கு 8 ஆயிரம் ரூபாவும் ஏனையதர வைத்திய அதிகாரிகளுக்கு 7 ஆயிரம் ரூபா வரையும் தொலைபேசிக் கட்டணம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு வைத்திய சேவையை வைத்திய அதிகாரிகள் துரித கதியில் வழங்குவதற்கென வழங்கப்படும் தொலைபேசிக் கொடுப்பனவுக் கட்டணச் சேவையை உரிய முறையில் பயன்படுத்தி யாழ்.மாவட்ட மக்களுக்கு வைத்தியர்கள் சிறந்த வைத்திய சேவையை வழங்கவேண்டுமெனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-9)

## மாற்றுத் திறனாளிகளுக்காக ஜெய்ப்பூர் நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம் , ஜூன் 13

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப்படும் போட்டி, நிகழ்வுகளில் வன்னி உட்பட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பங்குபற்றுவதற்குரிய தகவல்கள் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக உரியவர்களைச் சென்றடைய வேண்டும் என்று யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் ஜெ. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருடா வருடம் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் மாற்றுத் திறனாளிகளுக்காக போட்டிகளை நடத்தி அவர்களின் திறன்களை சமுதாயத்தின் மத்தியில் வெளிப்படுத்தி வருகின்றது.

எனினும் இந்த வருடம் வெள்ளி விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி, ஏனைய ஆக்கத்திறன் போட்டிகள் நடத்தப்படவுள்ள நிலையில் உரிய மாற்றுத் திறனாளிகளை எம்மால் இனங்கண்டு தகவல்கள் தெரியப்படுத்த முடியாது உள்ளது. இதனால் அதிகளவான மாற்றுத் திறனாளிகள் போட்டிகளில் பங்குபெற முடியாமல் உள்ளனர்.

எனவே இது தொடர்பாக கிராம சேவையாளர் பிரதேச செயலர்கள் தமது பகுதியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளை இனங்கண்டு இவ்வாறான போட்டிகளில் பங்குபெறுமாறு அறிவுறுத்தி உரிய தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு நேரடியாகச் வருகை தந்து போட்டிகளில் பங்குபெறுவதற்கான விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.- என்றார்.

(த-4)

## மாதாந்த உதவிப் பணம் பெறுவதில் பலர் அசமந்தம்

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்று வருபவர்களின் இந்த மாதத்திற்குரிய கொடுப் பனவுகள் தபாலகங்களுக்கு பிரதேச செயலகங்களினால் அனுப்பி வைக்கப் பட்டும் இவற்றைப் பெறுவதற்குப் பலர் முன் வரவில்லையென்று தெரிய வந்துள்ளது.

இந்த மாதாந்த உதவிப் பணம் நீண்ட பல காலமாக ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வழங்கப்பட்டு வந்தன. தற்போது சமூக சேவைப் பகுதியினால் இக் கொடுப்பனவு ஜூன் மாதத்திலிருந்து 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை ஒவ்வொரு மாதமும் இனிமேல் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலகங்கள் கொடுப்பனவுக்கான வவுச்சர்களை தபாலகங்களுக்கு அனுப்பி வைத்தும் பலர் இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன் வரவில்லை.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று தமது கொடுப்பனவுகளை உடனே பெற்றுக் கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் நல்லையா புரட்சிதாசன் அறிவித்துள்ளார்.

(த-100)

# நல்லைக் கந்தனுக்கு இன்று கற்பூரத்திருவிழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுக்கு இன்று மஹா கும்பாபிஷேக தின மணவாளக்கோல நன்னாளில், கற்பூரத் திருவிழா நடைபெறுகின்றது. வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்மைகளையும், இடுக்கண்களையும் நீக்கியருளும் பொருட்டு, நல்லூரிலே முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கின்றான்.

அந்த அழகன் முருகனுக்கு இன்று பகல் 1008 சங்குகளால் ஆனந்த மயமான அபிஷேகம் நடைபெறும். இந்த சங்காபிஷேகத்தைக் காண அடியார்கள் திரண்டு வந்து கூடுவர்.

பக்திமயமான வேத பாராயணத்துடன் அந்தண சிவாச்சாரியார்கள் ஆறுமுகப்பெருமானுக்கு செய்கின்ற அபிஷேகம் உள்ளத்தை தொடுகின்ற ஓர் உன்னத அருள் நிறைவாகும். அலங்காரமான அழகு திருக்கோலத்திலே ஆறுமுகப் பெருமான் தனது அருள் சக்திகளான வள்ளி, தெய்வானை அருகிருக்க கற்பூர ஒளியிலே காட்சி தரும் பேரழகு காண்பதற்கு பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

எத்தனையோ முருக ஆலயங்கள் இருந்தும் நல்லூரில் மட்டும் அடியார்கள் முண்டியடித்துக் கொண்டு ஓடி ஓடி வழிபடுகின்றார்களே! இதற்குக் காரணம் என்ன?

இந்த நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் வேற்பெருமான் நம்பிக்கையோடு தன்னை நம்பி வரும் அடியார்களை ஒரு போதும் கைவிடுவதில்லை. வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈந்தருளும் ஈசன் திருமகனான வேலன் இந்த நல்லையம்பதியிலே அலங்காரக் கந்தனாக வீற்றிருந்து அருளை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கின்றான். அடியார்களின் நேர்த்திகள் யாவற்றையும் முறையாகப் பூர்த்தி செய்யும் முருகனின் திவ்ய பெருங்கருணைக்கு ஈடு இணையில்லை. தம்முடைய எண்ணங்கள் எல்லாம் சரியாக நிறைவேறுவதால் இந்த நல்லூர்க் கந்தனைத் தொழ அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் இங்கு திரள்கின்றார்கள்.

இதில் இன்னொரு விசேஷமும் இருக்கிறது. இன்று நல்லைக் கந்தனுக்கு திருக்கல்யாணமும் இடம்பெறுகின்றது. கல்யாண வயதை எட்டியும் கல்யாணம் நடைபெறாத கன்னியர்களும், இளைஞர்களும் இன்று நல்லூரில் நடக்கின்ற ஆறுமுகப்பெருமானின் கோலாகலக் கல்யாணத்தைக் கண்டால் அவர்களுக்கும் விரைவில் திருமணம் ஈடேறும் என்பது ஐதீகம்.

இச்சாசக்தியான வள்ளியம்மனை வலப்பக்கத்திலும், கிரியா சக்தியான தெய்வானையம்மனை இடப்பக்கத்திலும் அமர்த்தி ஷண்முகப் பெருமானுக்கு இன்று நடக்கும் திருக்கல்யாணத்தைக் காண்பதற்கு கண் கோடி வேண்டும்.

கற்பூர ஒளியிலே அற்புதக்காட்சி தரும் கந்தனின் திவ்ய திருவருள் வசப்பட்டுள்ள சைவ அடியார்கள் எல்லோரும் நல்லூருக்கு வாருங்கள். அழகன் முருகனின் அற்புதமான அலங்காரக் காட்சி கண்டு களித்து, எல்லையில்லாத பேரின்பப் பெருவாழ்வுக்கு நம்மை நாமே தயார் படுத்தி உய்யும் வழியில் செல்வோமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

## தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு புதிய அத்தியட்சகர்

அளவெட்டி, ஜூன் 13

தெல்லிப்பழைஆதார வைத்தியசாலைக்கு கடந்த முதலாம் திகதி முதல் புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்திய கலாநிதி.டாக்டர் என். உமாசங்கர் நியமனம் பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் பதில் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றிய உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் [illegible] சுகாதார வைத்திய அதிகாரியாக தொடர்ந்தும் கடமையாற்றி வருகிறார்.

(த-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைப்பாறிய அலுவலர்களுக்கு கௌரவம்

வவுனியா தோணிக்கல் கிராமத்தில் கடமையாற்றி இளைப்பாறிய அலுவலர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர் அ.முரளிதரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன், மேலதிக அரச அதிபர் ந.திருஞானசம்பந்தர், சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி மஹிந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தோணிக்கல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற குலதிலக ராஜா, ஓய்வுபெற்ற கிராம சேவகர்களான எஸ்.இளஞ்செழியன், எஸ்.பாலஸ்ரீ, எஸ்.தர்மகுலசிங்கம், சமுர்த்தி உத்தியோகத்தர் ந.வசந்தகுமாரி ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-402)

## கவனம் திரும்புமா?



புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கெருடமடு தீர்த்தக்கேணி கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. (500)

## வர்த்தகக் கண்காட்சி

வவுனியா, ஜூன் 13

சீரான வர்த்தகக் கல்வியின் ஊடாக சீரிய வாழ்க்கைத் தரம் எனும் தொனிப் பொருளில் வர்த்தகக் கண்காட்சி ஒன்றை எதிர்வரும் ஜூலை 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு வவுனியா தெற்குக் கல்வி வலயம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம், வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி ஆகியன ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளன.

இந்த வர்த்தகக் கண்காட்சியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-402)

# அடிப்படை வசதிகள் கிடைக்காத கெருடமடு, வசந்தபுரம் மக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 13

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கெருடமடு, வசந்தபுரம் மக்களின் அடிப்படை வசதிகள் சில நிவர்த்தி செய்யப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு மீளக்குடியமர்ந்த சிலருக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் பல வருடங்களாகக் குடியமர்ந்து வந்துள்ள போதிலும் அவர்களின் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமையால் உதவிகளைப் பெற முடியவில்லை எனவும் தெரிய வருகின்றது.

மேலும் தண்ணீர் பெறுவதற்கான வசதிகளும் இல்லை. இதனால் தண்ணீர் பெறுவதில் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தொண்டு நிறுவனம் ஒன்று ஏழு கிணறுகளை அமைக்க முன்வந்த போதிலும் அவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தாம் ஆண்டாண்டு காலமாக விவசாயத்தை மேற்கொள்வதற்குக் காணி எதுவும் இல்லாத நிலையில் கூலிவேலையையே மேற்கொள்வதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

**வசதிகளற்ற நிலையில் ஒரு காட்டுப் பிரதேசத்தை அண்டிய கிராமமாக இது உள்ளதால் தமக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

மேலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லாத நிலையில் அவசர சிகிச்சை பெறுவதற்கெனச் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய நிலையில் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உள்ளனர்.

மேலும் தமது பிள்ளைகள் கற்சிலைமடுப் பாடசாலைக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் சைக்கிள் கூட இல்லாத நிலையில் நடந்தே இவர்கள் செல்கின்றனர். சைக்கிள்கள் வழங்கப்பட்ட போதுகூடத் தேவையுடைய குடும்பங்களுக்கு இவை கிடைக்கவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர். தற்போது வசந்தபுரம் கிராமத்தில் 80 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

ஆனால் வசதிகளற்ற நிலையில் ஒரு காட்டுப் பிரதேசத்தை அண்டிய கிராமமாக இது உள்ளதால் தமக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## 'அந்த இடம்' இப்போதில்லை

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் மறைப்பாகக் காணப்பட்ட பகுதிகளை மன்னார் நகரசபையினர் அகற்றிவிட்டனர் என்று சபையின் தலைவரான எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இந்த மறைவான பகுதிகளைக் கொண்ட தரிப்பிடத்தினுள் பல்வேறு சமூகச் சீரழிவான குற்றச் செயல்கள் இடம்பெறுவதாக மன்னார் நகர சபைக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இதனையடுத்தே இவை அகற்றப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது. (க-12)

## தனியார் பஸ் பயணிகளிடம் அதிகரித்த கட்டணம் அறவீடு

வவுனியா, ஜூன் 13

வவுனியா-மன்னாருக்கான போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் பயணிகளிடம் அதிக பணம் அறவிடப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் வவுனியாவில் இருந்து மன்னார் சென்ற முதலாவது பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளிடம் நடத்துநர் அதிக பணம் அறவிட்டுள்ளார்.

வவுனியாவில் இருந்து மன்னாருக்கான கட்டணம் 107 ரூபாவாக இருந்த போதும், நடத்துநர் ஒவ்வொரு பயணியிடமும் 120 தொடக்கம் 125 ரூபா வரை பணம் அறவிட்டுள்ளார். இதனால் சீற்றம் கொண்ட பயணிகள், பஸ் நடத்துநருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், பணம் பெற்றமைக்கான பற்றுச்சீட்டை வழங்குமாறும் கோரினர்.

இதனைப் பொருட்படுத்தாத நடத்துநர் தமக்குத் தனியார் போக்குவரத்துச் சங்கத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகம் முடிவடைந்துவிட்டதால் பற்றுச்சீட்டு வழங்க முடியாது என்று மறுப்புத் தெரிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த பயணிகள் வேறு வழியின்றி நடத்துநரைத் திட்டித் தீர்த்துக்கொண்டு, தமது பயணத்தைத் தொடர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, மன்னாரில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கான பற்றுச்சீட்டு தமது சங்கத்தால் வழங்கப்படுவதில்லை எனவும், உரிமையாளர்களே பற்றுச்சீட்டுக்களை வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (க-400)

## கோணாவில் மத்தியை மையப்படுத்தி பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

அக்கராயன், ஜூன் 13

கிளிநொச்சி கோணாவில் மத்திய பகுதியை மையமாகக் கொண்டு பஸ் சேவையை நடத்துமாறு மக்கள் நீண்டகாலமாகவே கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 80 குடும்பங்களைக் கொண்ட இந்தக் கிராம அலுவலர் பிரிவில் இராஜன் குடியிருப்பு, காந்தி கிராமம், யூனியன்குளம் ஆகிய கிராமங்கள் அடங்கியுள்ளன. இந்தக் கிராமங்களின் எல்லை வழியாகப் பஸ் சேவை இடம்பெறுவதால் இரண்டு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தை மக்கள் நடந்து செல்வதைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில் கோணாவில் மத்திய பகுதி, இராஜன் குடியிருப்பு, யூனியன்குளம், அக்கராயன் பிள்ளையார் ஆலயச் சந்தி வழியாக மருத்துவமனைக்குச் செல்லும் வகையில் பஸ் சேவைகளை நடத்துமாறு இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# பூநகரி உவராகாமல் காப்பதாயின் நீண்ட தடுப்பணைகள் வேண்டும்

### ஆலோசனை கூறுகிறார் முன்னாள் அரச அதிபர்

அக்கராயன்,ஜூன் 13

பூநகரிப் பிரதேசம் முற்றாக உவரடையும் ஆபத்திலுள்ளதால், இதனைத் தடுப்பதற்கு நீண்ட தடுப்பணைகள் அமைக்கப்படுவதோடு, காடுகள் அழிக்கப்படுவதும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபரும், சமூக சேவையாளருமான தி.இராசநாயகம்.

பூநகரிப் பிரதேசத்தின் உவர் ஆபத்து தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 1877 ஆம் ஆண்டிலேயே பூநகரியின் தெற்குப் பகுதிக் கடல் குடிமனைக்குள் புகுந்து குடிமக்களுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. கடல் உட்புகுந்தமைக்கான முக்கிய காரணமாக மண் அணைகள் அழிவடைந்தமையே எனக் கூறப்படுகின்றது. ஆனால் பூநகரியில் பெருமளவில் மணல் அள்ளப்படுவதன் காரணமாக கடல் நீர் உட்புகுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது.

பூநகரியை உடனடியாகப் பாதுகாக்க வேண்டுமாயின் 19 கிலோ மீற்றர் நீளத்துக்கு உவர்த்தடுப்பணை அமைக்கப்பட வேண்டும். தற்போது அமைக்கப்பட்டு வரும் உவர் நீர்த் தடுப்பணையின் வேலைகள் விரைவாக இடம்பெறவில்லை என மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மேலும் பூநகரியை உவராபத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் பூநகரியின் 10 ஆம் கட்டைச் சந்தியிலிருந்து உவர்த் தடுப்பரண்கள் அமைக்கப்பட வேண்டும். சில இடங்களில் 25 மில்லியன் ரூபா வரையான நிதியில் உவர்த்தடுப்பணைகள் அமைக்கப்படுகின்றன. கறுக்காய்த்தீவு, ஞானிமடம், சித்தன்குறிச்சி, பரமன்கிராய் ஆகிய கிராமங்களில் உவர் [illegible] [illegible] மண் அணைகள் அமைக்கப்பட வேண்டும். செம்மங்குன்றில் அமைக்கப்பட்ட உவர் நீர்த் தடுப்பணை உடைந்து காணப்படுகின்றது.

**தற்போது 17 கிராமங்கள் வரை உவரடைந்துள்ளன. கறுக்காய்தீவு, சித்தன்குறிச்சி, ஞானிமடம், இராமன்களப்பு, செல்லியாதீவு, நல்லூர் ஆகிய முக்கியமான கிராமங்கள் உவரடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் உவரால் பாதிக்கப்பட்டுள்ளன.**

தற்போது 17 கிராமங்கள் வரை உவரடைந்துள்ளன. கறுக்காய்தீவு, சித்தன்குறிச்சி, ஞானிமடம், இராமன்களப்பு, செல்லியாதீவு, நல்லூர் ஆகிய முக்கியமான கிராமங்கள் உவரடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் உவரால் பாதிக்கப்பட்டுள்ளன. நீவில் 10 ஆம் கட்டைப் பகுதிகளில் உவர்ப் பாதிப்புகள் அதிகமாக உள்ளன.

எதிர்காலத்தில் பெரும் மரங்களை அழிக்கக் கூடாது. தற்போது மரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. பூநகரியின் கௌதாரி முனை, பேராறு என்று சொல்லப்படுகின்ற குடமுருட்டிப் பாலம், மானம்பூக்குளம் என்பவற்றின் ஊடாக உவர் நீர் பரவும் ஆபத்து உள்ளது.

பூநகரியை உவராபத்திலிருந்து காக்க வேண்டுமாயின் உவர்த் தடுப்பணையை முக்கியமாக அமைக்க வேண்டும் என்பதுடன் காடுகளையும் அழிவுகளிலிருந்து காக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கச் சங்கிலி திருட்டு வழக்கு; பெண்ணுக்கு கடூழியச் சிறை

## நேற்று யாழ். நீதிமன்றத்தில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தங்கச் சங்கிலியைத் திருடிய பெண்ணுக்கு நேற்று யாழ். நீதிமன்றம் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2011ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் திகதி இந்தத் திருட்டு இடம் பெற்றது.

பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த உதயகுமார் கோணேஸ்வரி என்பவரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு அது தொடர்பான வழக்கு இடம் பெற்று வந்தது.

வழக்கு விசாரணையில் பிரஸ்தாபப் பெண் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (10-4)


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 * 05 * 1960 | 13 * 06 * 2007 |

### அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

அம்மா நீங்கள் மறைந்து
ஆண்டு ஐந்து ஆகிறது
இன்பமாய் நாம் வாழ வழிகாட்டிய நீங்கள்
இன்று எம்மோடு இல்லையே!
நேற்று எம்மோடு கதை பேசி மகிழ்ந்தது போன்ற-உங்கள்
நினைவுகள் எம் முன்னே நிற்கிறதே!
அம்மா உங்களை தேடிக் கிடைப்பதில்லை என உணர்ந்த - பின்பும்
எங்கள் மனங்கள் உங்களைத் தேடுகின்றதே!
நாம் வாழ்ந்த வாழ்விற்கும் வாழும் வாழ்விற்கும்
பொருள் நீயே அம்மா!

இல. 162 A,
3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(19232) (6,14)


# வேம்படி மகளிர் பாடசாலை அதிபர் நியமனம் மாற்றமில்லை

## பாடசாலை குழப்பம் தொடர்பில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வேம்படி மகளிர் கல்லூரிக்கான புதிய அதிபர் நியமனம் மத்திய அரசின் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டதாகும். இதில் எந்தவித மாற்றமும் கிடையாது என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

கல்லூரிக்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபரான திருமதி வேணுகா சண்முகரட்ணம் பதவி ஏற்பது தொடர்பான இடையூறுகளும் அரசியல் தலையீடுகளும் ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுச் சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட இந்த நியமனத்தில் நாம் தலையிட முடியாது எனவும் அதிபர் நியமனத்தில் எந்த மாற்றமும் செய்ய முடியாது எனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி வேணுகா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தற்போது பதில் அதிபராகக் கடமையாற்றி வரும் திருமதி ஆர். முத்துக்குமாரனையே அந்தப் பதவியில் தொடரவிடுமாறும் கோரி வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்று மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது சிலரது தூண்டுதலின் பேரில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னரும் மாணவிகளை தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யுமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தியதாகவும் மாணவிகளின் பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றதாகவும் அறிய வந்தது. (10-03-05-13)


## தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

### நூற்றாண்டு விழாவையொட்டிய சிறுகதைப் போட்டி-2012

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் இவ்வருடம் தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது. அதனையொட்டி சிறுகதைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கையில் வாழும் படைப்பாளிகள் பங்கு கொள்ளமுடியும்./ குறித்த படைப்பு இதுவரை எந்தவொரு ஊடகத்திலும் வெளிவந்ததாக இருத்தலாகாது./ போட்டியாளர்கள் படைப்புக்களோடு தமது பெயர் விவரங்களை வேறாக இணைத்து அனுப்புதல் வேண்டும்./ பரிசில் பெறும் கதைகளோடு மேலும் தகுதியானவை நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறுகதைத் தொகுப்பு நூலிலும் சேர்த்துக் கொள்ளப்படும். / படைப்புக்களை 25.06.2012 இற்கு முன்னராக 'மலர்க்குழு', நூற்றாண்டு விழா, யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் என்ற முகவரிக்கோ அல்லது thondaimanaruvid@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கலாம்./நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு | :5000/= |
| 2ஆம் பரிசு | :3000/= |
| 3 ஆம் பரிசு | :2000/= |

மேலும் 5 படைப்புகளுக்கு
தலா 1000/= விதம் வழங்கப்படும்

(#/573) (6,14,10)



# அபான்ஸ் விலைத்தள்ளுபடி SALE



50% வரை விலைக்கழிவு

தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், ஹோம் தியட்டர், டீவிடீ ப்ளேயர்ஸ், மைக்ரோவேவ் அவன்கள், போத்தல் மற்றும் அதி குளிரூட்டிகள் இன்னும் பல



(C/594) (14,10)

யாழ்ப்பாணம் - இல.121/1, மின்சார நிலைய வீதி (பேருந்து நிலையத்துக்கு பின்புறமாக).

ஜூன் 12ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை

காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை

தொடர்புகளுக்கு: 0777684068

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Request for Expression of Interest (EOI)

**Research on Unemployment**

Under the Capacity Development of NGOs funded by Diakonia and implemented by the council of Non Governmental Organizations, jaffna District Expression of Interest (EOI) are invited from suitable organizations, academics and professionals to carry out a research on unemployment in jaffna District and submit and findings with appropriate analysis and recommendations that could be of reference material in long term planning and development of the District. Intrested parties are here by notified to apply giving the under mentioned minimum information.

* Name of Organization / individual
* previous proven record research and publications
* Organizational (or Individual Implementation) structure indicating technical staff capacity.

All completed EOIs should reach jaffnacngos@gmail.com before 2.00pm on june 2012.

**Council of Non Governmental Organization, jaffna District.**

(சி/590)

**யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றுக்கு பின்வரும் ஆளணியினர் வேண்டப்படுகின்றனர்**

வரவேற்பாளர் - ஆண் (வயதெல்லை 30-55 வரை)
**Room Boy**
**கணக்குப் பதிவாளர்** - கணினி மூலம் Quick Book Accounts package செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**
**இறுதிநாள் 17.06.2012**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**
**இல 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** (19180)

# மரண அறிவித்தல்கள்

## சொக்கலிங்கம் தங்கராசா
(மருதனாமடம் சந்தை)



வீமன் காமத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் தங்கராசா (11.06.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்-கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ராஜகரன் (லண்டன்), சுஜிதா, ஜீவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராசா (பிரான்ஸ்), சந்திரராசா (சீமெந்துக்கூட்டுத்தாபனம்), இந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், ஜெயறஞ்சன், ஜனா ஆகியோரின் மாமனும், சானுஜனின் பேரனும் நடேசபிள்ளை, பாலசுந்தரம் ஆகியோரின் மாமனும், கமலாதேவியின் பெறா மகனும், அதிசயவனிதா, மணிமேகலாதேவி, மல்லிகாதேவி, மாணிக்கவாசகர், ஞானாம்பிகை, சாந்தாதேவி, சிவதேவி, சிவகுமார், சிவரூபன் (K.R), சுஜதா, சிவதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கணேஸ்வரம்,**
**அளவெட்டி கிழக்கு,**
**அளவெட்டி** (சீ/595) (10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நடராசா லூயிஸ் வின்சன் (ராசகுமார்)



ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா லூயிஸ் வின்சன் கடந்த 07.06.2012 வியாழக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் நந்தினியின் அன்புக் கணவரும் ஆரோன், றெபேக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (13.06.2012) புதன்கிழமை மாலை சுவிஸ் சப்போசனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.27,ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (சி/596)

தகவல்
குடும்பத்தினர்.
ந.டோமினிக் (சகோதரன்)

## சிறார்களுக்கு போதைப் பொருள் விற்றவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கொக்குவில் பகுதியில் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைப் பொருள்களை விற்பனை செய்த 17 பேருக்கு நேற்று யாழ். நீதிமன்றம் 58 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

யாழ். மதுவரித் திணைக்களத்தால் இவர்கள் இனங் காணப்பட்டு இவர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையில் 17 பேரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 11 பேருக்கு 4 ஆயிரம் ரூபாவும், 4 பேருக்கு மூவாயிரம் ரூபாவும், ஒருவருக்கு 2,500 ரூபாவும் விதிக்கப்பட்டது.

தவிர குருநகரில் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் விதிக்கப்பட்டது.

(10-4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்கு**

யாழ். வைத்தீஸ்வரா சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டின் மாடிப்பகுதி சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு உள்ளது. காலை 6.00 - பி.ப 1.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 0771310416 (சி/597)

# மரண அறிவித்தல்

## கந்தர் துரைசிங்கம்
(சமாதான நீதவான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் துரைசிங்கம் நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - பார்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, கனகம்மா, சின்னத்தம்பி, இராசலிங்கம், பூமணி மற்றும் துரைச்சாமி, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அறிவழகன் (பிரான்ஸ்), அறிவழகி, அன்பழகன் (நைஜீரியா), அன்பழகி, இன்பழகி (டென்மார்க்), பேரழகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி (பிரான்ஸ்), செல்வராஜா (நியூ லங்கா பாம்), செல்வதயாளினி, குலசிங்கம், கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலன் (மருத்துவ பீடம், கொழும்பு), வேணுகா, அலன், நிவேதன், நிவேதா, அபிவர்ணா, அனுஷன், சர்மிலா, நிரோஜன், நிசாந்தன், சர்மில், பியர், இஷபல், ஜூலியட் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2012) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நியூ லங்கா பாம்,**
**கே.கே.எஸ். வீதி,**
**இணுவில்.**

**தகவல்:**
**S.K. செல்வராஜா (மருமகன்),**
**(நியூ லங்கா பாம்)**

(19231)

# மரண அறிவித்தல்

## சாமுவேல் அருளையா [சான்ஸன்]



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை (Fauerbacher strasse 22, Hauptfriedhof, 61169-Friedherg) வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல்அருளையா கடந்த 06.06.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல்- இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், அழகையா, அருளையா, அரூபிகா, காலஞ்சென்றவர்களான அம்பிகா, அன்பையா, ஆலிசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், ராதாதேவியின் அன்புக் கணவரும், ஜென்சி, றொக்சி, பிறவுண்சன், பிறவுண்சி, பிறின்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.06.2012) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு (இலங்கை நேரம் 2.30 மணிக்கு) ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**758, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.** (19230)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் தாமோதரம்பிள்ளை
(செல்லக்கண்டு)



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மணல்வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் தாமோதரம்பிள்ளை நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வாலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - நாயகம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிதம்பரநாதன் (நோர்வே), காலஞ்சென்ற சந்திரசேகரம் (இலங்கை வங்கி, சாவகச்சேரி), மற்றும் லோகேஸ்வரன் (திருவையாறு), தேவேஸ்வரன் (ஆசிரியர், மட்டுவில் மகா வித்தியாலயம்), மகேஸ்வரன் (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகாதேவி (நோர்வே), ஞானேஸ்வரி (உடுப்பிட்டி), சுசீலாதேவி, ஜெயமணி (அதிபர், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்), பிரியா, கந்தசாமி ஆகியோரின் மாமனும் கல்பனா, சுசிந்திரன் (நோர்வே), சசி, றெஜி (நோர்வே), தினேஷ்குமார், தட்சாயினி, அபிராமி, சிவரஞ்சன், சிவப்பிரியன், கௌசிகா, ஐங்கரன், தக்சயன், ஐஸ்வர்யா ஆகியோரின் பேரனும் மனோகரி, மஞ்சுளா, மல்லிகா, மதியழகன், ஜெயமணி (வவுனியா - ஆசிரியை) சுதன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணல் வீதி,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்**

(19739)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஆராய்ச்சி நிலையத்தை புனரமைப்பின் பின்னர் திறப்பு

## ஜூலை 13 இல் விழா

வடக்கில் பனை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்தப் பனை ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டது.

யாழ்ப்பாணம், ஜூன் 13

கைதடியில் மீளப் புனரமைக்கப்பட்டு வரும் பனை ஆராய்ச்சி நிலையத்தை இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் திறந்து வைக்கவுள்ளார்.

இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் இந்த ஆராய்ச்சி நிலையம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பனை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டட நிர்மாண வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளன. ஆளணி வளத்தைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பனை ஆராய்ச்சி நிலையம் இயங்க ஆரம்பித்ததும் பனை வளம் துறைசார் ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியும் எனப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

வடக்கில் பனை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்தப் பனை ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டது. இதற்கென இந்திய அரசு வழங்கிய நிதியுதவியின் மூலம் இந்தக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி நிலையத்துக்கான இயந்திரங்கள் மற்றும் ஏனைய வசதிகளும் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் இதற்கான ஆளணி வளமும் ஏற்படுத்தப்படவுள்ளது. ஏற்கனவே உத்தியோகத்தர்கள் சிலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இன்னும் சில மாதங்களில் ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடு முழுமையாக ஆரம்பித்துவிடும் எனப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மேலும் கூறினார். (த-3-17)

# போதையால் வந்த வினை பெண்ணுக்கு சிறைவாசம்

வடமராட்சி, ஜூன் 13

மதுபோதையில் அமைதிக்குப் பங்கம் விளைவித்து அசிங்கமாக நடத்துகொண்ட குற்றச்சாட்டின் பேரில் வயோதிபப் பெண் ஒருவருக்கும், இளைஞர் ஒருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா ஒரு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கிட்டினன் சரஸ்வதி என்ற வயோதிபப் பெண்ணும், சற்குணம் ஸ்ரீதரன் என்ற இளைஞனும் மதுபோதையில் அமைதிக்கு பங்கம் விளைவித்துக் கொண்டிருக்கையில் வெவ்வேறு இடங்களில் வைத்து தனித்தனியே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இருவர் மீதும் குறிப்பிட்ட குற்றம் சுமத்தப்பட்டு தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் தனித்தனியே முற்படுத்தப்பட்டனர். ஏற்கனவே இவ்விருவரும் குடிபோதையில் அட்டகாசம் புரிந்ததனால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனரெனப் பொலிஸாரினால் நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

வயோதிபப் பெண் தான், கள் அருந்தியதாகவும், இளைஞர் தான் மதுபானம் அருந்துவதாகவும் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இருவரையும் நீதிபதி எச்சரிக்கை செய்ததுடன், தலா ஒரு மாத கால சிறைத்தண்டனையும் விதித்தார். அத்துடன் இருவரையும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறு உத்தரவிட்டதுடன் அடுத்த மாதம் 16 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுமாறு இருவருக்கும் பணிப்பும் விடுக்கப்பட்டது. (த-8)

# போக்குவரத்து விதிகளை மீறிய இளைஞருக்கு ரூ.20,000 அபராதம்

வடமராட்சி, ஜூன் 13

போக்குவரத்து ஒழுங்குகளை மீறி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 5 குற்றச்சாட்டுகளின் பேரில் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொரலிஸ் பிரிவில் மதுபோதையில், சாரதி அனுமதிப்பத்திரம், வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், ஹெல்மட் என்பன இன்றி மோட்டார் சைக்கிளில் ஓடித்திரிந்ததாக இளைஞர் ஒருவர் மீது பருத்தித்துறை போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரால் 5 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தன் மீது சுமத்தப்பட்ட 5 குற்றச்சாட்டுகளையும் இளைஞர் ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து மதுபோதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டியமைக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம் இன்மைக்கு 3 ஆயிரம் ரூபாவும், வருமானவரிப்பத்திரம் இல்லாமைக்கு ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப்பத்திரம் இல்லாமைக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், தலைக்கவசம் இல்லாமைக்கு ஆயிரம் ரூபாவுமாக மொத்தமாக 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-8)

# வீடில்லாதோர் பட்டியல் கிராம சேவகர் பிரிவுகளில்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வீடில்லாதவர்களின் பட்டியல் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு ரீதியாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பெயர்ப்பட்டியல் தொடர்பில் ஏதாவது முறைப்பாடு தெரிவிக்க விரும்புவோர் பிரதேச செயலகத்துக்கு கடித மூலம் அந்த முறைப்பாட்டைச் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களில் பயனாளிகள் தெரிவின் போது மோசடிகள் இடம்பெறுவதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து எதிர்வரும் காலங்களில் சகல வீட்டுத் திட்டங்களும் மக்களைச் சென்றடைய செய்ய வேண்டும் என்ற நோக்குடன் புதிய முறை கையாளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும், அந்தப் பகுதி கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஊடாக வீடில்லாதவர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன. பின்னர் புள்ளியிடல் மூலமாக அவை தரப்படுத்தப்பட்டு பட்டியல்கள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் ஒட்டப்பட்டுள்ளன. இதில் தகுதி இல்லாத வர்களது பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலோ அல்லது தகுதியானவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தாலோ பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-5)

# குருநகர் கரையோரப் பகுதி நிலங்களும் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்12

தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள படையினர் யாழ்ப்பாணத்தின் கரையோரத்தில் யாழ். கடற்கரை வீதியில் அலுப்பாந்தி என்னும் இடத்தில் உள்ள பகுதியையும் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் ஒரு செயற்பாடாக முதலாம் குறுக்கு வீதியில் கடற்கரையோரமாக உள்ள இந்து ஆலயத்துக்கு அருகாமையில் பௌத்த விகாரை ஒன்றை அமைத்து வருகின்றனர் என்ற செய்தி உதயனில் வெளியானதை அடுத்த குறித்த விகாரை முன்பாக வேலியடைத்து கட்டடங்களை கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளை, தற்போது கடற்கரை வீதியில் யாழ்.சுங்க இலாகா முன்பாக உள்ள வெறுங்காணியில் கற்களைக் கொண்டு அடைத்து வருகின்றனர். இந்தப் பகுதியில் கடலில் குருநகர் மீனவர்கள் தமது படகுகளை நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்த இடத்தில் முன்னர் அரச களஞ்சியம் அமைந்திருந்தது. ரயில் சேவை இங்கு இடம்பெற்ற போது கொழும்பில் இருந்து புகையிரதம் மூலம் எடுத்துவரப்படும் அரச பொருள்களான மா, சீனி போன்றவை இங்கேயே களஞ்சியப்படுத்தப்பட்டு பின்னர் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. போர்க்காலங்களில் இந்தக் களஞ்சியம் முற்றாக சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-300)

# யாழ். நகர் கிழக்கு, மேற்கு பகுதிகளில் நலத்திட்டங்கள்

## சமுர்த்தி மகா சங்கம் ஊடாக

கொழும்புத்துறை, ஜூன் 13

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கத்தின் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் யாழ்.நகர் கிழக்கு, யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வலயங்களிலுள்ள மக்களிடமிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட கொடிதினநிதி அந்தப் பகுதிகளின் சமூக நலன் புரித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு கொடிதினங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தில் 7.5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை அந்தப் பகுதி சமுர்த்தி பயனாளிகளுக்குக் கல்வி, சுயதொழில் வேலை வாய்ப்பு போன்ற சமூக முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் மி.கியூமன் தெரிவித்தார்.

வறிய விதவைகளுக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களும் வறிய மாணவர்கள் 125 பேருக்கு 1 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும், சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வறிய விதவைக் குடும்பங்களுக்கு 2 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

வறிய மாணவர்கள் 125 பேருக்கு சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் தலா ஆயிரம் ரூபாவீதம் 1 லட்சத்து 25 ஆயிரம் சிறுவர் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 235 பேரை இணைத்து 1 லட்சத்து 79 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிலுள்ள 101 சிறார்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் 50 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றை விட டெங்கு ஒழிப்பு பிரசார, மகளிர் தின விழிப்புணர்வு நடவடிக்கைகளுடன் தென்னங்கன்றுகள் வழங்கலும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஆண்டு வரை கொடிதின நிதி சேகரிப்பாக யாழ்.பிரதேச மக்களிடமிருந்து 20 லட்சத்து 33 ஆயிரம் ரூபா சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-135)

## பாம்பினால் கடியுண்டார் குடும்பப் பெண்

தென்மராட்சி, ஜூன் 13

தென்மராட்சி தோட்டத்தில் தேங்காய் எடுக்கச் சென்ற பெண் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சாம்பசிவம் சசிகலா (வயது 55) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

## குழு மோதலில் நால்வர் காயம்

தென்மராட்சி, ஜூன் 13

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரு குடும்பத்தினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்தனர்.

இதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா தனபாக்கியம் (வயது 63) கங்காதரன் பெரிய தம்பி (வயது 30), நாகமணி கபிலன்(வயது 20), கபிலன் யசிந்தா (வயது 20) ஆகியோரே காயமடைந்தவர் [illegible] கச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-8)

# பருத்தித்துறை நகர வீதிகளுக்கு புதிய பெயர்கள் சூட்டச் சிபார்சு

பெயர்கள் பொதுமக்களால் பருத்தித்துறை நகர சபைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி, ஜூன் 13

பருதித்தித்துறை நகர சபை வீதிகளுக்கு பருத்தித்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவருமான சட்ட மேதை அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம், இதே தொகுதியில் நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அமரர் கே.துரைரத்தினம், பருத்தித்துறை நகரசபைத் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய அமரர் ந.நடராசா, பிரபல சமூக சேவையாளராகவும், பருத்தித்துறை நகரசபை உறுப்பினராகவும் இருந்த அமரர் மு.பொ.வீரபாகு ஆகியோர்களின் பெயர்களைச் சூட்டுமாறு பொது மக்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நகரில் வாழ்ந்த, நகருக்காக உழைத்த அரசியல்வாதிகள், சமூக சேவையாளர்கள், கல்விமான்களின் பெயர்களை பருத்தித்துறை நகர சபை வீதிகளுக்குச் சூட்ட இருப்பதால் எந்தெந்த வீதிக்கு அவரது பெயர்களைச் சூட்ட வேண்டும் எனப் பொது மக்களை பருத்தித்துறை நகர சபை கோரியிருந்தது.


இதற்கமைய மேலே குறிப்பிட்டவர்களின் பெயர்கள் பொதுமக்களால் பருத்தித்துறை நகர சபைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

வீதிகளுக்குப் பெயர் சூட்டப் பொது மக்கள் தரப்பால் பரிந்துரைக்கப்பட்ட ஏனையோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பன்மொழிவித்தகர் கலாநிதி தாவீது அடிகளார், பண்டிதர் சச்சிதானந்தன், ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபர் கே.பூரணம்பிள்ளை, பண்டிதர் கே.கிருஷ்ணபிள்ளை, வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் இராமநாத பிள்ளை ஆகிய கல்விமான்களின் பெயர்கள், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர்களான நவரத்தினசாமி, ஆழிக்குமரன், ஆனந்தன் ஆகியோரின் பெயர்களும் நகர சபை வீதிகளுக்குப் பெயர் சூட்டப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் 14 வீதிகளும், 24 ஒழுங்கைகளும் இருக்கின்றன. இந்த வீதிகள் ஒழுங்கைகளில் காலத்துக்கு ஒவ்வாத மக்கள் விரும்பாத பெயர்களைக் கொண்ட வீதிகள், ஒழுங்கைகளின் பெயர்கள் மாற்றப்படுவதோடு நகருடன் தொடர்புடைய சேவை புரிந்த அரசியல் தலைவர்கள் மற்றும் கல்விமான்கள், பல்துறை சார்ந்தவர்களின் பெயர்களைச் சூட்டுவதற்குப் பருத்தித்துறை நகர சபை தீர்மானித்து இதற்குப் பொது மக்களிடம் பரிந்துரை கேட்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாராஷ்டிர மாநிலம் பந்தர்பூர் சுவாமி விதால் கோயிலில் தரிசனம் மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் மற்றும் அவரது கணவர் தேவிசிங் ஷெகாவாத்.

# நடிகை ரஞ்சிதா உள்ளிட்ட 6 பேருக்கு அழைப்பாணை

மதுரை ஆதீனத்துள் சட்ட விரோதமான செயல்கள் நடப்பதாகக் கூறியிருந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி செல்வம், மதுரை பொலிஸ் ஆணை யர், பொலிஸ் அதிகாரி, ரஞ் சிதா உள்ளிட்ட 6 பேருக்கு அழைப் பாணை அளிக்க உத்தர விட்டுள்ளார்.

இந்து மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் சோலைக் கண்ணன், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் குறிப் பிடப்பட்டிருப்பதாவது:-

மதுரை ஆதீன மடத்தில் இளைய மடாதிபதியாக



நித்தியானந்தா பொறுப் பேற்றுக்கொண்டதிலிருந்து மதுரை ஆதீனத்துள் சட்ட விரோதமான செயல் கள் நடைபெறுகின்றன என்றும், தான் மதுரை ஆதீனத்துக் குச் சென்றிருந்தபோது, அங்கு ரஞ்சிதா உள்ளிட்டவர்கள் இருந்தனர் என்றும், குடிப்ப தற்கு ஏதோ பானம் கொடுக் கப்பட்ட பின், அங்கு சட்ட விரோத செயல்கள் நடக்கின் றன என்றும், புலித்தோல், யானைத் தந்தம் முதலி யவை பதுக்கி வைக்கப்பட் டிருக்கின் றன என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதை விசாரித்த நீதிபதி செல்வம், எதிர்வரும் 22 ஆம் திகதி பதில் மனுத் தாக்கல் செய்யவேண்டும் என்று, நடிகை ரஞ்சிதா, மதுரை பொலிஸ் ஆணை யர் உள்ளிட்ட 6 பேருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (வ)

# ஜம்முவில் நிலநடுக்கம் மக்கள் பீதி

ஜம்மு - காஷ்மீரில் நேற்றுமுன்தினம் காலை அடுத்தடுத்து இரண்டு முறை இலேசான நிலநடுக் கம் ஏற்பட்டது.

இதுரிச்டர் அளவு கோலில் 5.4, 5.9 ஆக பதிவாகி உள்ள தாகத் தகவல் வெளியாகி யுள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் இந்த நிலநடுக் கம் ஏற்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இதில் ஏற் பட்டுள்ள சேத விவரம் குறித்து இதுவரை ஏதும் தக வல் வெளியிடப்பட வில்லை.

காஷ்மீரில் நேற்று முன் தினம் கடையடைப்பு என் பதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியறவில்லை. இருப்பினும் நிலநடுக்கம் ஏற்பட்ட சில நிமிடங்கள் அச்சத்தில் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ் சமடைந்தனர்.

# ஈழத் தமிழர் மீதான கொடுமைகளை நீதிமன்றத்திலும் விவரிப்பேன்

## அடித்துக் கூறுகிறார் வைகோ

ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடு மைகளை நீதிமன்றத்தில் எடுத்துக் கூறுவேன் என்று ம.தி.மு.க. செயலர் வைகோ உறுதிபடத் தெரிவித்தார்.

'ஈழத்தில் நடப்பது என்ன?' என்ற தலைப்பில் சென்னை ராஜா அண்ணா மலை மன்றத்தில் 2008 ஆம் ஆண்டு கருத்தரங்கு நடை பெற்றது. இந்த கருத்தரங் கில் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கண் ணப்பன் ஆகியோர் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக கியூ பிரிவுப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதற்காக கைது செய்யப் பட்ட அவர்கள் பிணையில் வெளியே வந்தனர். பின்னர்



குற்றப்பத்திரிகையில் இருந்து கண்ணப்பன் பெயர் நீக்கப் பட்டது.

வைகோ மீதான வழக்கு சென்னை 3 ஆவது சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் 3ஆவது சிறப்பு சென்னை நீதிமன்ற நீதிபதி நிலவழகன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதையடுத்து வைகோ நேற்று முன்தினம் நீதிமன் றத்தில் முன்னிலையானார். வழக்கு மீதான விசாரணையை அடுத்த மாதம் 10 ஆம் திக திக்கு நீதிபதி ஒத்தி வைத் தார்.

நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த வைகோ,

''கருத்தரங்கில் நான் பேசியது உண்மைதான். வழக்கைச் சந்திக்கத் தயா ராக இருக்கிறேன். ஈழத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த கொடுமைகளை நீதி மன்றத் தில் எடுத்துக்கூறு வேன்''- என்றார். (வ)

# சதாம் ஹுசைனைப் போன்று பாதாள அறையில் நித்தியானந்தா

பெருந்துறை, ஜூன் 13

கர்நாடக அரசால் தேடப் பட்டு வரும் சுவாமி நித்தி யானந்தா தமிழகத்தின் பெருந் துறையில் பண்ணை வீடு ஒன்றில் பாதாள ரகசிய அறையில் சதாம் ஹுசை னைப் போல பதுங்கி இருப் பதாகத் தகவல்கள் வெளி யாகி உள்ளன.

பெருந்துறை அருகே உள்ள பல்லகவுண்டன் பாளையத்தில் நித்தியா னந்தாவின் முதன்மை சீடர்க ளில் ஒருவரது வீடு இருப்ப தாகத் தெரிவிக்கப்படுகி றது. அங்கு 3 கார்களில் சாமி யாரும் நீண்ட முடியுடன் கூடிய சீடர்களும் நேற்று முன்தினம் வந்திறங்கியதை பொதுமக்கள் பார்த்தும் உறுதி செய்தும் உள்ளனர். இந்தத்தகவல் பொலிஸுக் கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்ணை வீட்டில் உள்ள பாதாள ரகசிய அறையில் பதுங்கி இருந்தபடியே சட் டத்தரணிகள் மற்றும் சீடர்க ளுடன் எப்படித் தப்பிக் கொள்வது என்று குறித்து ஆலோசனை நடத்தி வருவ தாகக் கூறப்படுகிறது. நித்தி யானந்தாவுக்கு அமைக்கப் பட்டுள்ள பாதாள ரகசிய



3 கார்களில் சாமி யாரும் நீண்ட முடியுடன் கூடிய சீடர்களும் நேற்று முன்தினம் வந்திறங்கியதை பொதுமக்கள் பார்த்துள்ளனர்.

அறைகள், சதாம் ஹுசைன் எப்படி பதுங்கி இருந்தாரோ அதேபோல் உருவாக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது,

இந்தநிலையில் கர் நாடக காவல்துறையினர் கேட்டுக் கொண்டால்மட் டும் அவர்களுக்கு உதவ முடியும் என்று ஈரோடு பொலிஸ் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (வ)

# விபசார விடுதி சுற்றிவளைப்பில் சிக்கினார் காங்கிரஸ் பிரமுகர்

பஞ்சாப்பில் இடம் பெற்ற பொலிஸாரின் தேடு தலில் விபசார விடுதியில் வைத்து காங்கிரஸ் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார். இந்த சம்பவத்தை அடுத்து காங்கிரஸ் மேலி டம் அதிர்ச்சியில் உறைந் துள்ளது.

பஞ்சாப் மாநிலம் பெரோஸ் பூர் கன்டோன்மென்ட் பகுதி யில் உள்ள ஹோட்டல் களில் விபசாரம் நடப்பதாக பொலிஸுக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு பொலி ஸார் அதிரடிச் சோதனை நடத்தியபோது 5 விபசாரி கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர், பெரோபூர் பகுதியில் செல் வாக்கு மிக்க காங்கிரஸ் தலைவர் மல்கித் சிங் ஆவார். இந்தச் சம்பவம் பஞ்சாப்பிலும் காங்கிரஸ் தலைமையிலும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.


இவர், ஜலாலாபாத் சட்ட சபைத் தொகுதி தேர்தலில் சிரோன்மணி அகாலிதள தலைவர் சுக்பீர் சிங் பாதலை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்.

பொலிஸாரின் சோதனை நடந்தபோது இவருடன் குர் பசன் சிங் என்ற பொலிஸ் அதிகாரியும் சிக்கினார். இவர்களைப் கைது செய்த பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (வ)

# பிரணாப்புக்கு திரிணாமூல் காங்கிரஸ் ஆதரவு

டில்லி, ஜூன்13

ஜனாதிபதித் தேர்தலுக் கான வேட்பாளராக பிர ணாப்பை நிறுத்த காங்கிரஸ் கட்சி முடிவு எடுத்திருப்பதை அடுத்து, கூட்டணிக் கட்சியான திரிணாமூல் காங்கிரசும் அதற்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜியை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் நிலையில் காங்கிரஸ் கட்சி உள்ளது என்றும், காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை என்பதால் கூட்டணிக் கட்சியான திரிணா முல் காங்கிரஸ் கட்சியும் தனது ஆதரவைத் தெரிவிக்கும் என்று அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தநிலையில், ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு மம்தாவின் ஆதரவு மிகவும் முக்கியம் என்பதாலும், மம்தா தரப்பில் ஆதரவு தெரிவித்திருப்பதாலும் எவ்வித எதிர்ப்பும் இன்றி பிரணாப் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

# சாதனைப் புத்தகத்தில் மனவளர்ச்சி குன்றியவர்

பெங்களூர், ஜூன் 12

உடுப்பியைச் சேர்ந்த மனவளர்ச்சி குன்றிய நபர் 500 தொலைபேசி எண் களை நினைவில் வைத் துள்ளார். இதன்மூலம் இவர் 2013 லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற உள்ளார்.

இதுகுறித்து கர்நாடக மனவளர்ச்சிகுன்றிய குழந் தைகளின் பெற்றோர்கள் சங்கத் தலைவர் கே. ஆர்.வெங்கடேஷ், செய்தி யாளர்களிடம் தெரிவித்த தாவது:-

உடுப்பியைச் சேர்ந்த வர் சுரேஷ் நாயக் (வயது 40). இவர் பிறந்ததிலிருந்து மனவளர்ச்சி குன்றிக் காணப்பட்டார். 3ஆம் வகுப்பு வரை படித்த இவருக்கு வார்த்தைக ளைப் படிக்க முடியாது. இவர் ஆஷா நிலைய சிறப் புப் பள்ளியில் பயிற்சி பெற்றுள்ளார். தற்போது தனியார் நிறுவனம் ஒன் றில் தொலைபேசி இயக்கு நராக வேலை செய்து வருகிறார். இவர் 500 இற்கும் மேற்பட்ட உற வினர் மற்றும் நண்பர்க ளின் தொலைபேசி மற்றும் கைபேசி எண்களை குறிப் பேட்டில் எழுதி வைத் துள்ளார். அத்தனை எண் களுக்குச் சொந்தமானவர்க ளின் பெயர்களை நினை வில் வைத்துள்ளார். ஒரு வரின் பெயரைச் சொன் னால், அவர்களது தொலை பேசி எண்களைத் தெரி விக்கிறார். தொலைபேசி எண்களைச் சொன் னால், அதன் உரிமையாள ரின் பெயரைத் தெரிவிக்கி றார். இந்த செயல்முறையை கடந்த 7 ஆம் திகதி விஜய வாடாவில் செய்து காட்டி னார். இதை லிம்கா சாதனை புத்தகம் அங்கீகரித் துள் ளது. 2013இல் வெளிவர இருக்கும் லிம்கா சாதனை புத் தகத்தில் இவரின் பெயர் இடம் பெற உள்ளது-என்றார். (வ)

# இந்திய ரூபா வீழ்ச்சியால் மாணவர்களுக்குப் பாதிப்பு

அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பின் வீழ்ச்சியால் வெளி நாடுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

வர்த்தக ரீதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக இந்திய ரூபா மதிப்பில் ஏற்ற இறக் கங்கள் காணப்படுவது வழக் கமான ஒன்றாக இருந்த போதிலும் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு பயிலும் இந்திய மாணவர்களின் கல் விக் கட்டணம் அதிகரிப்பு காரண்மாக அவர்களின் கல்வியைப் பாதிக்கும் அபா யம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் கல்வி பயிலும் இந்திய மாணவர் களின் எண்ணிக்கை சுமார் 2.6 லட்சம் பேராகும். பெரும் பாலானோர் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்தி ரேலியா நாடுகளில் பயின்று வருகின்றனர்.

இந்தநிலையில் சிங்கப் பூர் டொலருக்கு எதிராக 18 சதவீதமும், கனடா டொலரு க்கு எதிராக 17 சதவீதம், பிரிட்டன் பவுண்ஸுக்கு எதி ராக 16 சதவீதமும் ஆஸ்தி ரேலியா டொலருக்கு எதி ராக 13 சதவீத அளவுக்கும் இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக நடுத் தர இந்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடந்தாண்டைக் [illegible] கூடு தல் கட்டணம் செலுத்த வேண்டிய கட்டாய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மரில் மதக் கலவரம்

## அவசரகாலநிலை அறிவிப்பு; 7 பேர் உயிரிழப்பு



யாங்கூன், ஜூன் 13

இரு மதப் பிரிவினரிடையே நடந்து வரும் கலவரங்களைத் தொடர்ந்து மியன்மாரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாநிலம் ஒன்றில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசரகால நிலைப் பிரகடன அறிவிப்பை மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்ன் வெளியிட்டார். மேற்கு மியன்மாரில், வங்கதேசத்துடன் ஒட்டிய எல்லைப் பகுதியில் இருக்கும் ராக்கின் மாநிலத்தில் கடந்த சில நாள்களாக முஸ்லிம்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையே இடை விடாத மோதல் நடந்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வன்முறையில் குறைந்தபட்சம் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான வீடுகள் தீக்கிரையாகின. நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அரசு அறிவித்த போதிலும், சனிக்கிழமையும் வன்முறை தொடர்ந்தது.

இதனைத் தொடர்ந்து ராக்கின் மாநிலத்தில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்வதாக ஜனாதிபதி ஞாயிற்றுக்கிழமை இரவு அறிவித்தார்.

தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி செய்ன், நிலைமை கட்டுக்குள் இல்லாமல் இது போன்ற வன்முறைகள் தொடருமானால், ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் மியன்மார் மீண்டும் பல துயர்களைச் சந்திக்க நேரிடும் என்று குறிப்பிட்டார்.

ராக்கின் மாநிலத்தில் இரு மதப் பிரிவினரிடையே நிலவி வரும் அதிருப்தி வன்முறையாக மாறி வெறுப்பும் பழி வாங்கும் நோக்கும் வளர்ந்து வருகிறது. இந்தப் பயங்கரமும் அராஜகமும் மேலும் தொடர்ந்தால் நாட்டின் பிற பகுதிகளுக்கும் இது பரவும் ஆபத்து இருக்கிறது. - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து செய்தி வெளியிட்ட அரசுத் தொலைக்காட்சி, மாங்டா, புதிடாங் நகர் பகுதிகளில் ஆயிரம் தீவிரவாதிகள் கலவரத்தில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டது.

இந்தப் பகுதியில் வசிக்கும் முஸ்லிம்களே அதிக வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் பௌத்த பெண் ஒருவர் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்டது பற்றிய துண்டுப் பிரசுரம் குறித்து ஜூன் 3இல், மூன்று முஸ்லிம்கள் விவாதித்துக் கொண்டிருந்தது பௌத்தர்களுக்கு ஆத்திரமூட்டியதாகக் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து 10 முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். இதில் 300 பௌத்தர்கள் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே கடந்த வெள்ளிக்கிழமை வன்முறைகள் நடைபெற்றன.

ராக்கின் மாநிலம் வங்கதேச எல்லைப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கிறது. இது கடலோர மாநிலமாகும்.

இங்கு வசிக்கும் முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்கள் வங்கதேசத்திலிருந்து சட்டத்துக்குப் புறம்பாக குடியேறியவர்கள் என்ற கசப்புணர்வு பௌத்தர்களிடையே நிலவுகிறது. மியன்மார் அரசு இந்தப் பகுதி முஸ்லிம்களுக்கு சட்டப்படி எந்த வித அங்கீகாரமும் அளிக்கவில்லை.

இங்கு பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சுமுகமான உறவு நிலை இல்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

## மலேசியாவில் தமிழ்ப் பொலிஸுக்கு சிறை

கோலாலம்பூர், ஜூன் 13

மலேசியாவில் திருட்டு வழக்கில் கைதான தமிழர் ஒருவர், பொலிஸ் காவலில் இறந்ததால், தமிழ் வம்சாவளி பொலிஸ்காரருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி, சொகுசுக் கார் திருட்டு வழக்கில் குகன், என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டு இரண்டு நாள்கள் கழித்துப் பொலிஸ் காவலில் இருந்த வேளை குகன் இறந்தார். இதற்கு மலேசிய இந்தியர்கள் பலர் கண்டனம் தெரிவித்தனர். இந்த வழக்கை செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி அஸ்லாம் சைனுதின் விசாரித்தார். பொலிஸ் துன்புறுத்தலால் குகன் இறந்தது நிரூபிக்கப்பட்டதால், அவரை துன்புறுத்தியதாக நவீந்திரன் என்ற தமிழ் பொலிஸ்காரர் கைது செய்யப்பட்டார். இவர் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குகன் இறப்புக்குக் காரணமான நவீந்திரனுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை அளிப்பதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆப்கனின் நட்பு....



ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நேட்டோ இராணுவத்தினனுடன் அந்த நாட்டு சிறுவர்கள் நட்புப் பாராட்டுகின்றனர்.

## அரசுக்கு எதிரானவர்களின் வீடுகளில் சோதனை

ரஷ்ய எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்களின் வீடுகளில் அந்த நாட்டுப் பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சிகள் இந்த வாரத்தின் நடுப்பகுதியிலிருந்து அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ள நிலையில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய பத்திரிகையில் ரஷ்ய முன்னாள் அதிபர் லெனின் தொடர்பில் வெளியான செய்தியின் தலைப்பு 88 வருடங்களுக்கு என்பதற்குப் பதில் 64 வருடங்கள் என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. வாசகர்களிடம் அதற்காக மன்னிப்புக் கோருகின்றோம். (ஆ-ர்)

## நெப்போலியனின் கடிதம் ரூபா 2 கோடிக்கு விற்பனை

லண்டன், ஜூன் 13

பிரான்ஸ் பேரரசர் நெப்போலியன் பொனாபார்ட் ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் பரிஸில் நடந்த ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. அந்தக் கடிதத்தை 4 லட்சம் அமெரிக்க டொலர்களை (சுமார் ரூ.2 கோடி) கொடுத்துப் பரிஸில் உள்ள கடிதங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளுக்கான அருங்காட்சியகம் ஒன்று விலைக்கு வாங்கியது.

எதிர்பார்த்ததைவிட 5 மடங்கு அதிக விலைக்கு கடிதம் விற்பனையானது எனப் பரிஸைச் சேர்ந்த ஏல நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

பிரெஞ்சு மொழியை தாய் மொழியாகக் கொண்ட நெப்போலியன், ஆங்கிலம் கற்கத் தொடங்கியதும் மொத்தம் 3 கடிதங்களை மட்டுமே எழுதியுள்ளார். அதில், 1816ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதியன்று எழுதப்பட்ட இந்தக் கடிதமும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

பிரிட்டனுடன் 1815ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் தோல்வியடைந்த பின், தெற்கு அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள செயின்ட் ஹெலினா தீவில் நெப்போலியன் சிறை வைக்கப்பட்டார்.

அப்போது பிரிட்டனைச் சேர்ந்த இம்மானுவேல் என்பவரிடம் நெப்போலியன் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். இந்தக் கடிதத்தையும் அவருக்குத்தான் நெப்போலியன் எழுதியுள்ளார்.

## சீனாவில் 3 லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிப்பு

பீஜிங், ஜூன் 13

சீனாவில் பல்வேறு பகுதிகளில் பெய்த பலத்த மழையால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். மூன்று லட்சம் பேர் இந்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் குய்ஷாய் மாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், பல மாவட்டங்கள் வெள்ளத்துள் மூழ்கியுள்ளன. ஆறு பேர் பலத்த மழைக்கு உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால், நான்கு நகரங்களில் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வேறிடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

விளைநிலங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்டை மாகாணமான ஹுனானில் 19 மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தின் காரணமாக 26 ஆயிரம் பேர் இந்த மாகாணத்தில் வெளியேறியுள்ளனர். கடும் மழையினால் 3 லட்சத்து 68 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பிரிட்டனின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், லண்டனின் பல பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. 42 இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளதால், பிரிட்டனின் தென் கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பலத்த மழைக்கான எச்சரிக்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் அன்று ஏற்படும் கவலை 60 வயதுக்கு மேல் உயிரைப் பறிக்கும்

பிறந்த நாள் அன்று ஏற்படும் கவலையினால், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு, மரணம் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம், கடந்த 40 ஆண்டுகளாக, 20 லட்சத்துக்கும் அதிகமானவர்களிடம், ஓர் ஆய்வு நடத்தியது.

பிறந்த நாள் அன்று ஏற்படும் கவலை மற்றும் மன அழுத்தத்தால், 60 வயதுக்கு அதிகமானவர்களுக்கு, மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படுகின்றன.

60 வயதுக்குக் குறைவானவர்களுக்கு, இது போன்ற பாதிப்புகள், குறிப்பிட்டு சொல்லும்படியாக இல்லை. 60 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு, பிறந்த நாள் வருத்தத்தின் போது, பக்கவாதம் ஏற்படுகிறது. பிறந்த நாளையொட்டி ஏற்படும் வருத்தம், பலரைத் தற்கொலைக்குத் தூண்டுகிறது. இன்னும் சிலருக்கு, புற்றுநோயையும் தோற்றுவிப்பதாக, இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.




# குருதிக் கொடுப்போம் உயிர் காப்போம்!

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா

காலம்: 2012 ஜூன் 16
சனிக்கிழமை
காலை 9 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம்.
யாழ்ப்பாணம்.

### இரத்ததானம்

- இரத்தம், உடல் இழையங்களுக்கு உணவு, ஒட்சிசன் போன்றவற்றை வழங்குவதற்கும், நோய்க் கிருமிகளுக்கு எதிராகப் போராடி அவற்றை அழிப்பதற்கும் அத்தியாவசியமானது.
- அதிகளவு இரத்தப்போக்கின் போதோ, இரத்தத்தின் வெவ்வேறு கூறுகள் குறைபாடாக உள்ள பொழுதோ இரத்தத்தை முழுமையாகவோ அல்லது அதன் கூறுகளாகவோ அந்தந்த நோயாளிகளுக்கு ஏற்றப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமமே புதைந்தது

## ஆப்கனில் பெரும் நில நடுக்கம்

காபூல், ஜூன் 13

ஆப்கானிஸ்தானில், நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில், பல வீடுகள் தரைமட்டமாயின. மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் இடிபாடுகளில் சிக்குண்டுள்ளனர். இதில் ஆப்கனில் பர்கா மாகாணத்தில் உள்ள முல்லா ஜோன் என்ற கிராமமே மூடுண்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில், நேற்று முன்தினம் 5.4 ரிச்டர் அளவுக்கு, முதலில் நில நடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, 25 நிமிடங்கள் கழித்து, 5.6 ரிச்டர் அளவுக்கு, இரண்டாவது நில நடுக்கம் ஏற்பட்டது. இதில், பர்கா மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களில், ஏராளமான மண் வீடுகள் தரைமட்டமாயின. முல்லா ஜோன் என்ற கிராமத்தில், இரண்டு பெண்கள் உட்பட, மூன்று பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்துள்ளனர். இஷ்காமிஷ் என்ற மாவட்டத்தில், 10 வீடுகள் தரைமட்டமாயின. ஜெல்கா, நெரின் ஆகிய மாவட்டங்களிலும், அதிகளவான வீடுகள் இடிந்துள்ளன எனத் தகவல் கிடைத்துள்ளது. இந்தப் பகுதிகளில், எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்ற விவரம் தெரியவில்லை.



**ஆப்கானிஸ்தானில், நேற்று முன்தினம் 5.4 ரிச்டர் அளவுக்கு, முதலில் நில நடுக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, 25 நிமிடங்கள் கழித்து, மீண்டும் 5.6 ரிச்டர் அளவுக்கு, இரண்டாவது நில நடுக்கம் ஏற்பட்டது.**

## சூட்கேஸில் வந்த காதலி



நியூயோர்க், ஜூன் 13

அமெரிக்காவின் ஓரேகான் மாநிலம், போர்ட்லாண்ட் நகரில் ஆண்களுக்கான விடுதியாக ஓர் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. அதில் வசிப்பவர் கர்டிஸ் லா. அவர் தினமும் பெரிய சூட்கேசுடன் சிரமப்பட்டு வந்து செல்வதை சிலர் கவனித்தனர். சூட்கேஸுக்குள் அசைவுகள் தெரியவே, பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் வந்து கர்டிசின் வீட்டில் சோதனை நடத்தினர். அப்போது அலுமாரி ஒன்றில் மறைந்திருந்த பெண்ணைக் கண்டுபிடித்தனர். அவர் பெயர் கோலா மெக்ரத். கர்டிசின் காதலியான அவர், ஆண்களின் குடியிருப்புக்குள் வந்து செல்ல வசதியாக சூட்கேஸில் பதுங்கியபடி பயணம் செய்தது தெரிய வந்தது. இதையடுத்து, கோலாவை பொலிஸார் கைது செய்தனர்.

## பஹ்ரைனில் சிறுவனுக்கு விடுதலை

பஹ்ரைனில் சாலை மறியலில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்ட, 11 வயதுச் சிறுவனை விடுவிக்கும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பஹ்ரைனில் ஷியா பிரிவு முஸ்லிம்கள், கடந்த ஒரு வருடகாலமாக, அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் 14ஆம் திகதி அலி ஹசன் என்ற, 11 வயதுப் பாடசாலை மாணவன் மனாமா பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டான்.

மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள் இதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தனர். சிறுவன் அலி ஹசன், மூன்று முறை இது போன்ற குற்றத்தில் ஈடுபட்டுள்ளார் என அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார். சிலர் சிறுவனுக்குப் பணம் கொடுத்து இதுபோன்ற செயலில் ஈடுபடுத்தியதாகவும் கூறினார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, சிறுவனை அவனது பெற்றோரிடம் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டார்.

## சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் இஸ்ரேலுக்கு ஆபத்தானவை

ஜெருசலேம், ஜூன் 13

சிரியாவிடம் உள்ள இரசாயன ஆயுதங்களை இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்தும் வாய்ப்பு அதிகம் இருக்கின்றது என இஸ்ரேலின் இராணுவத் துணைத் தளபதி யாயிர் நவே தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டு மக்களுக்கே சிரிய அரசு கொடுமை செய்து வருகிறது. இந்தநிலையில், வாய்ப்புக் கிடைத்தால் இரசாயன ஆயுதங்கள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெருசலேத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற, உயிர்நீத்த இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் உரையாற்றிய நவே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

உலகில் சிரியாவிடமே அதிக அளவிலான இரசாயன ஆயுதங்கள் கையிருப்பில் உள்ளன. ஆனால் தன்னிடம் உள்ள இரசாயன ஆயுதங்கள் குறித்து எந்தத் தகவலையும் அந்த நாடு இது வரை கூறவில்லை. எனவே அதனிடம் உள்ள ஆயுதங்களின் அளவு குறித்து எதுவும் தெரியாது.

சிரியாவில் இப்போது அரசுக்கும் அரசு எதிர்ப்பாளர்களுக்கும் இடையே போர் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், சிரிய அரசு நெருக்கடிக்கு உள்ளாகும்போது இதுபோன்ற ஆயுதங்கள் இஸ்ரேல் நாட்டுக்கு எதிரான தீவிரவாதிகளின் கைகளுக்குச் சென்றுவிடும் என்ற அச்சம் நிலவுகிறது என்றார் அவர்.

## ஒரு வேளை உணவுக்கு 20 கோடி

நட்சத்திர விடுதியில் ரூ.55,000க்கு முடிய வேண்டிய மதிய உணவுச் செலவு, அமெரிக்க கோடீஸ்வரர் வோரன் பப்பெட் சிறப்பு விருந்தினராக பங்கேற்றதால் ரூ.20 கோடியாக அதிகரித்தது. அமெரிக்காவைச் சேர்ந்த உலக பணக்காரர் வோரன் பப்பெட், பெர்க்ஷயர் ஹாத்வே என்ற முதலீட்டு நிறுவனத்தின் தலைவராவார். இவர் அறக்கட்டளை தொடங்கி சமூக நலத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறார். அறக்கட்டளைக்கு நிதி திரட்ட, தன்னுடன் மதிய உணவில் பங்கேற்பவர்களைத் தேர்வு செய்ய ஆண்டுதோறும் ஏலம் நடத்துகிறார்.

இந்த ஆண்டு வோரன் பப்பெட் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்கான ஏலம் கடந்த 5 நாள்களாக இடம்பெற்றது. அதில் 106 பேர் பங்கேற்றனர். அவர்களில் இறுதிச் சுற்றில் 10 பேர் நுழைந்தனர். அவர்களில் ஒருவர் ரூ.20 கோடிக்கு ஏலத்தில் வென்றார். அவரது சார்பில் பப்பெட்டுடன் 9 பேர் மதிய உணவில் கலந்து கொண்டனர். மன்ஹாட்டனில் உள்ள அந்த நட்சத்திரவிடுதியில் வழக்கமாக 9 பேருக்கு மதிய உணவு செலவு ரூ.55,000. ஆனால், அறக்கட்டளை நிதிக்கான ஏலம் எடுத்ததால் செலவு ரூ.20 கோடியானது.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை **செல்வி வசந்தா மகேந்திரன்** அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**புஸ்பராணி மகேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை,
நீர்வேலி.

ஆசிரியர்கழகம்

(சி/557)(6-8-9)

## மரண அறிவித்தல்

## கிருஸ்ணர் இராஜா

(Retired R.M.V & Asst . Commissioner National Housing Dept, All Island Justice of Peace)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 169/1, காலி வீதி, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் இராஜா நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்வராணி, சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (ராணி) அன்புக்கணவரும், சறோஜினி, ரஞ்சினி, பாலேந்திரா ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், இராஜசேகரம், சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுலன் (சேகர்), சியாமளா, நித்திகா, மதுசன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான குருசாமி, தம்பிராசா மற்றும் ராஜரட்ணம், செல்லத்துரை, பொன்னையா, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசம்மா காலஞ்சென்ற ராசமணி மற்றும் தவமணி, இந்திராணி, ராசமலர், ஜெயரட்ணம், ஜெயராணி, செல்வராணி, யோகராணி, திலகராணி, ஜெயமோகன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2012) வியாழக்கிழமை பொறல்ல ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

169/1, காலி வீதி,
பம்பலப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(19207) (45.6.9)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 220 6591, 077 726 0974

(18661)(6-9)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffina Phone: 021 2228093
E-mail: alliance jaffina@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(19208) (45-6-9)

## மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி மகேந்திரன்

(ஆச்சியக்கா)



பெரியபுலம், அச்செழு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி மகேந்திரன் (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் மகேந்திரனின் (ஓய்வுபெற்ற லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா-சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராசா (பொறியியலாளர்), புவனேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், சத்தியகுமார் (பொறியியலாளர், லண்டன்), வசந்தா (ஆசிரியை, நீர்வேலி றோ.த.க. பாடசாலை), காலஞ்சென்ற சாந்தி (ஆசிரியை), சசிக்குமார் (ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், வசந்தினியின் (லண்டன்) அன்பு மாமியும், அர்ஜூனின் (லண்டன்) அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2012) புதன் கிழமை பி.ப. 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியபுலம்,
அச்செழு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/576)(6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாய்ப்பு வரும் நேரம்

(03)

**ஐந்து டொலர்களில் பேராசிரியர் சார்ஜண்ட்**

ஹார்வேர்ட் பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர் பேராசிரியர் சார்ஜண்ட். அவர் பௌடீன் கல்லூரியில் சாதாரண மாணவராக இருந்தபோது, தனது வாழ்வின் சிறந்த பணிக்கென தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தார். அப்போது, சரியான வாய்ப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணமே அவரது மனதில் பிரதான இடத்தைப் பெற்றிருந்தது.

அவர் அதைப் பற்றி விவரித்துக் கூறினார். ''முதல் வருடத்தில் உடற்பயிற்சிப் பிரிவின் பணிகளைக் கவனித்துக்




கொள்வதுடன் வாயிற்காப்போனாகவும் வேலை செய்து கொண்டு, கல்லூரியில் சேர்வதற்கும் தயார் செய்து கொண்டிருந்தேன். பௌடீன் கல்லூரியில் புதிய மாணவனாக *1871* இல் சேர்ந்தேன். இரண்டு வருடங்கள் கழித்து உடற்பயிற்சிப் பள்ளியில் வேலை செய்வதைத் தொடர்ந்தேன். நான் *1875* இல் பட்டம் பெற்றேன். அங்குதான் புதியதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் முதன் முதலாகத் தோன்றியது.

அங்கு ஒரு புதிய உபகரணம் அவசியமாக தேவைப்பட்டது. நான் அதை மறுவடிவமைப்பு செய்தும், பழைய பாகங்களை மாற்றி அமைத்தும் புதியவற்றைக் கண்டு பிடித்தேன். உடற்பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து ஒரு வருடம் முடிவதற்கு முன்பு, ஒரு கண்காட்சி நடத்தினோம். அது பலரது கவனத்தைக் கவர்ந்தது. காட்சியில் வைக்கப்பட்டிருந்த புதிய உபகரணங்கள் பார்வையாளர்கள் அறிந்துள்ளவற்றை விடவும் மிகச் சிறந்ததாக இருந்தன. உடனடியாக என் சம்பளம் உயர்த்தப்பட்டது. நான் பௌடீன் கல்லூரியில் செய்து கொண்டிருந்த பணிகளின் அடிப்படையில், வாரத்துக்கு 60 டொலர் சம்பளத்தில் வேலை செய்ய 'யேல் பல்கலைக் கழகத்துக்கு அழைக்கப்பட்டேன்.''

இதை விவரித்த பேராசிரியர், சம்பளம் குறைவானதாகவும், போதாததாகவும் காணப்பட்டாலும் கூட, வருகின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானதாகும் எனச் சொன்னார். ''மக்கள் தங்களது சேவையின் மதிப்பைப் பார்க்கக் கூடாது. ஆனால், அவர்கள் பெறும் வாய்ப்பைப் பார்க்க வேண்டும். இளைஞர்களில் பலர் வாரத்துக்கு ஐந்து டொலர் சம்பளத்துக்கு வேலை செய்த சூழ்நிலையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்த வேலை அதிக சம்பளம் பெறத் தகுதி உடையதென வேலை செய்த சூழ்நிலையை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்கள். ஆனால், பௌடீன் கல்லூரியும் ஐந்து டொலர் வாரச் சம்பளமும் தான் எனக்கு யேல் பல்கலைக் கழகத்தையும் வாரத்துக்கு 60 டொலர் ஊதியம் கிடைக்கும் வேலையைப் பெறும் வழியையும் திறந்து காட்டின.'' *1872* இல் பேராசிரியர் சார்ஜண்ட் யேல் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். அடுத்த மூன்று வருடங்களுக்கு யேல் பல்கலைக்கழகத்திலும் பௌடீன் கல்லூரியிலும் உடற்பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஏற்றார்.பிறகு, அவர் யேல் பல்கலைக்கழக உடற்பயிற்சிப் பணிகளின் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றத்துடன், ஹார்வேர்டு உடற்பயிற்சித் துறையின் இயக்குநராகவும் பதவி உயர்வு பெற்றார். அவர் திறமைமிகுந்த உடற்பயிற்சி அளிப்பவர் என நாடு முழுவதும் அவரை அங்கீகரித்துள்ளது.

**இரண்டு டொலர்களும் ஒரு நல்ல வாய்ப்பும்**

இளைஞர்கள் வாழ்வில் வாய்ப்புகளைப் பெறுவதற்கு தங்களைத் தகுதி உடையவர்களாக்கிக் கொள்வது பற்றி மற்றுமொரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். நான் இதை ஜான் கிராண்ட்டின் 'யூத்' ஸ் கம்பேனியன் புத்தகத்திலிருந்து அறிந்து கொண்டேன். ஜான் கிராண்ட் ஓர் இரும்புப் பொருள் விற்பனை நிலையத்தில் வாரத்துக்கு இரண்டு டொலர் சம்பளத்தில் வேலை செய்து வந்தவர். அவர் வேலையில் சேர்ந்தவுடன் விற்பனை நிலைய உரிமையாளர்கள் அவரிடம் சொன்னது: ''நீ இந்த வியாபாரத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் நன்றாக அறிந்து கொண்டு உன்னைப் பயனளிப்பவனாக்கிக் கொள். நீ எத்தனை விரைவாக உன் திறமையை நிரூபித்துக் காட்டுகிறாயோ அத்தனை விரைவாக நாங்கள் உன் சேவையை நல்லவிதத்தில் அங்கீகரிப்போம்.''

கிராண்ட் விற்பனை நிலையத்தில் நடப்பவற்றைப் பல வாரங்களுக்கு தொடர்ந்து உன்னிப்புடன் கவனித்து வந்தான். அவனது முதலாளிகள் எப்போதும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலைப்பட்டியல்களைச் சரிபார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

-கண்ணதாசன்

(தொடரும்)

# மது மற்றும் புகையிலை பாவனையாலேயே அதிக எண்ணிக்கையானோர் இறக்கின்றனர்

## வடமராட்சி தெற்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூன் 13

நாட்டில் நாளாந்தம் இறப்போரில் மது மற்றும் புகையிலை பாவனையால்தான் அதிக எண்ணிக்கையானோர் இறக்கின்றார்கள். இந்த வகையான இறப்புக்களைத் தவிர்க்க மது, புகையிலை பாவனையை முற்றாக நிறுத்த நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என கரவெட்டி, வடமராட்சி தெற்குப் பிரிவு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

கரவெட்டி சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் புகையிலை, மதுபாவனை எதிர்ப்பு பேரணி அண்மையில் நெல்லியடியில் நடைபெற்றது. எதிர்ப்பு பேரணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே வரதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

நாள் தோறும் மக்கள் பல விதத்திலும் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இறப்புக்களில் மது, புகையிலை பாவனையின் தாக்கங்களினால் இறப்போரின் எண்ணிக்கையே அதிகமாகும். இவற்றில் 50 வீதமான இறப்புக்கள் இருதய நோயினாலும், 40 வீதமான இறப்புக்கள் புற்றுநோயினாலும் நிகழ்கின்றன என்று சுகாதாரத் திணைக்கள புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

**இருதயநோய், புற்றுநோய் என்பன புகையிலை, மது போன்ற போதைப் பொருள் பாவனையால் ஏற்படுகின்றன. இவற்றின் பாவனையைப் படிப்படியாக குறைத்து, முற்று முழுதாக நிறுத்த வேண்டும். போதைப் பொருள் பாவனையைக் கைவிட்டால் நாம் நீண்டகாலம் வாழமுடியும்.**

இருதயநோய், புற்றுநோய்கள் புகையிலை, மது போன்ற போதைப் பொருள் பாவனையால் ஏற்படுகின்றன. இவற்றின் பாவனையைப் படிப்படியாக விரைவாகக் குறைத்து, முற்று முழுதாக நிறுத்த வேண்டும். போதைப் பொருள் பாவனையைக் கைவிட்டால் நாம் நீண்டகாலம் வாழமுடியும்.

போதைப் பொருள் பாவனையை முற்றாக எமது சமூகத்திலிருந்து ஒழிப்பதற்காக, விழிப்புணர்வுகளைப் பல வழிகளிலும் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த விழிப்புணர்வு, வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. போதைப் பொருள் பாவனையை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் நாம் சிறந்த சமூகமாக தலைநிமிர்ந்து வாழலாம் - என்றார். (எ-8)



கூட்டுறவாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுறவாளர் அமரர் சு.சிவசுப்பிரமணியத்தின் 6 ஆம் மாத நினைவு தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் உரையாற்றுகிறார். நிகழ்வுக்கு வந்தவர்களும் காணப்படுகின்றனர். (எ-16)

# அலைபாயும் மனதை ஒரு நிலைப்படுத்த ஆலயம் சென்று வழிபடுவதே சிறந்தது

## பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 13

அலைபாய்ந்து திரியும் மனதை ஒருநிலைப்படுத்துவதற்காக ஆலயம் சென்று வழிபடுவது சிறந்ததாகும். இதற்காகவே ஆலயங்களில் வருடந்தோறும் பெருந்திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

ஆலய வழிபாடு மனித வாழ்வை இன்பமுடையதாக மாற்றியமைக்கக்கூடிய சக்தி பொருந்தியது என்று யாழ்.சின்மயாமிஷன் நிலையத்தைச் சேர்ந்த பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

இந்துக்களுடைய வாழ்க்கையின் மையப் பொருளாக இறைவன் உள்ளார். அந்த இறைவனை நாம் தேடிச்சென்று வழிபடும் இடமே ஆலயம் ஆகும். வாழ்க்கையை இனிதாக அமைத்துக்கொள்ள ஆலய வழிபாடு மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாக உள்ளது.

ஆலயங்களில் வருடந்தோறும் நடைபெறும் மஹோற்சவ காலங்களில் நடத்தப்படும் விசேட பூசை வழிபாடுகள், யாகங்கள் என்பன அலைபாய்ந்து திரியும் மனதைக் கட்டுப்படுத்த வழிசமைத்துக் கொடுக்கும்.

**மனிதனுடைய 5 புலன்களையும் கட்டுப்படுத்தும் திறமை மஹோற்சவ காலங்களில் இடம்பெறும் சிறப்புப் பூசை வழிபாடுகளுக்கு உண்டு.**

மனிதனுடைய 5 புலன்களையும் கட்டுப்படுத்தும் திறமை மஹோற்சவ காலங்களில் இடம்பெறும் சிறப்புப் பூசை வழிபாடுகளுக்கு உண்டு.

கண்கள் இறைவனைப் பார்ப்பதற்கும், காதுகள் அமைதியான ஒலியைக் கேட்பதற்கும், மூக்கு வாசனைத் திரவியங்களை மணந்து கொண்டு சுத்தமான சுவாசத்தை வெளிவிடுவதற்கும், நாக்கு உணவு மறந்து இறைவன் நாமத்தை உச்சரிப்பதற்கும் என முற்று முழுதாக இறை சிந்தனையுடன் அன்றைய பொழுதைக் கழிப்பதால் தீய சிந்தனைகளைக் கடந்து நற் சிந்தனை கொண்ட மனிதநேயத்தை உருவாக்குகிறது.

இந்துக்களின் புண்ணிய தலம் எனப் போற்றப்படும் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாடுகளில் நாம் பங்குபற்றி நல்ல சிந்தனைமிக்க மனிதர்களாக எம்மை மாற்ற வேண்டும்-என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மற்றொருமுறை தமிழரின் முதுகில் குத்திய இந்தியா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கை விவகாரம் தொடர்பில் நியமிக்கப்படும் குழு நாட்டுக்குள் வருவது தொடர்பில் சிக்கல்கள் தொடர்கின்றன.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கொழும்பை வலியுறுத்திய அந்தத் தீர்மானம், அடுத்த வருடம் மார்ச் மாதம் நடக்கவுள்ள கூட்டத் தொடரில் அது தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நவி பிள்ளையையும் பணித்துள்ளது.

மனித உரிமைகள் விவகாரங்களில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கி அதனடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே நவிப் பிள்ளைக்கு இடப்பட்ட பணி.

இந்த இடத்தில்தான் இந்தியா தலையிட்டு ஈழத் தமிழர்களின் முதுகில் மீண்டும் ஒரு முறை குத்தியது.

மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணையில் ''பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வழங்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனை ''பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கை அரசுடன் கலந்துரையாடி அதன் அனுமதி பெற்று வழங்கவேண்டும்'' என்பதாக இந்தியா மாற்றியமைத்தது.

இலங்கையின் இறைமையை ஐ.நா. மீறிவிடாமல் இருப்பதற்காக இந்த மாற்றம் செய்யப்பட்டதாக புதுடில்லி பின்னர் விளக்கம் வேறு அளித்தது.

இப்போது நவிப் பிள்ளையின் குழுவினர் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ள முடியாமல் திண்டாடுவதற்கான முழு முதற்காரணம் இந்தியாவின் திருத்தமே.

புதுடில்லியின் திருத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு நவிப் பிள்ளையின் அனைத்து முயற்சிகளுக்கும் கொழும்பு இப்போது முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது. அவர்கள் நாட்டுக்குள் நுழைந்து உண்மை நிலையை அறிந்து கொள்ளாமல் இருப்பதை உறுதிப் படுத்தும் விதத்தில் செயற்பட அது முயற்சிக்கிறது.

இது எதிர்காலத்தில் வேறு வகையில் இலங்கை அரசைப் பாதிக்கக்கூடும் என்கிறபோதும், இறுதிப் போர் தொடர்பிலான உண்மைகள் வெளிவராமல் தொடர்ந்தும் இருள் நிலையைப் பேண இந்தியாவின் திருத்தத்தால் இலங்கைக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஆதரிப்பதாக இந்தியா காட்டிக் கொண்டாலும் அதன் உயிராக இருந்த விடயத்தை இலங்கை அரசுக்கு சார்பாக மாற்றி விட்டதன் மூலம் போர்க் குற்றங்களில் இருந்து இலங்கை அரசு தப்புவதற்கான உதவியைக் கச்சிதமாகச் செய்து முடித்துள்ளது. அதன் மூலம் தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடிய பல நன்மைகளையும் தடுத்துள்ளது.

# பத்து விரல்களுமே, உன் படையப்பா!!

■ செந்தூரி

நால் வகை யுக்திகளுள் இறுதியான தண்டம் தவிர ஏனைய மூன்றையும் பிரயோகித்த அகவலி அதிகமாற்றும் ''வேலையற்ற'' பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கான வலி நிவாரணியாகத் தரப்பட்டுள்ளது பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள். நாடளாவிய ரீதியில் பட்டம் பெற்ற இளைஞர்களை, அரச துறைக்குள் உள்ளீர்ப்பதற்காகப் பயிற்சிக் காலம் ஒன்றை பூர்த்தி செய்யும் தேவையுடைய குறித்த பதவிகளுக்குள் தம்மையும் தூக்கிப் போட்டுவிடுவதற்காய் ஒவ்வொருவரும் எடுத்த அவதாரங்கள் எண்ணற்றவை. இளைஞர்கள் என்கின்ற பதம் தம்மை விட்டுக் கடந்து போன, கடந்து போகின்ற பின்னரும் பொருளாதார ரீதியில் செட்டில் ஆக முடியாமல் இருப்பதன் ஆக்ரோஷம், பல இடங்களில் குனியவும், சில இடங்களில் குமுறவும் செய்யும் பல்மெய் வெளிப்பாடுகளை எம் இளைஞர்களுக்கு கற்றுக்கொடுத்திருந்தது.

குரோத அரசியல், பழிவாங்கல் வகைக்குரிய இன ரீதியான புறந்தள்ளல், கட்சி சார்பான நியமனங்கள், தகுதியற்றோரின் மிகைநிரப்பல் போன்ற இன்னபிற புறச்சூழலுக்குரியதும், சிக்கல்களை மேலும் இறுக்கமடையச் செய்வதில் முதன்மைக்குரியதுமான காரணங்களைக் கொஞ்சம் தள்ளிவைப்போம்.

கல்வித் தகுதிகளை வெற்றுப் பத்திரங்களாக சுருளுக்குள் கொண்டிருக்கும் ஒவ்வொரு வாலிபங்களினதும் அயலில் அமர்ந்திருந்து இன்றைய அசாதாரண வேலைவாய்ப்பின்மையின் கொடூர சமூகச் சிக்கல் கொண்டுவரப்பட்டதில் அவர்களே தம்மை அறிந்தும் அறியாமல் ஆற்றியுள்ள பின்புலச் செல்வாக்கினை மஞ்சள் கடலை முடியும்வரை கொஞ்சம் பேசலாம் இந்த வாரம்.

உண்மைகள் இளநீர் விடாத பாகற்காய் பிரட்டலைவிட கசப்பானவை என்கின்ற அடிப்படைக் குசுனித் தத்துவத்தை அடிக்கடி நினைவூட்டியபடி, கற்தெறிக்கும் கரடான பாதைகளில் கொஞ்சம் காலாற நடப்போம் தோழர்களே. எம்மை நாமே விமர்சிப்பதும், அந்த விமர்சனத்தின் இறுதியில் எம்மால் தவறவிடப்பட்டனவற்றை தெரிந்து கொள்வதுமே ''இவர்களால் தானே இப்படியானோம்'' என்கின்ற எம் புலம்பல்களைக் கதவுக்கும், காதுகளுக்கும் வெளியே மட்டும் வைத்திருப்பவர்களைத் தண்டிக்க முடியாதிருக்கும் எம் இயலாமையின் இன்றைய வடிகால்கள்

''நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான இந்தப் பதவியில் இத்தனையாம் திகதி முதல் நியமிக்கப்படுகின்றீர்கள்.'' இந்த வாக்கியம் ஒன்றே பெரும்பாலும் அரச துறைக்கான நியமனக் கடிதங்களைத் தனியாரின் நியமனக் கடிதங்களிலிருந்து எட்டாத உயரத்திலும், இலகுவில் விட்டுக் கொடுக்காத பேர் ஆசைக்குள்ளும் வைத்திருக்கிறது. அரச பணி, அரச சம்பளம், பதவியின் நிரந்தரம், ஓய்வூதியம், பணியிடர் குறைவு போன்ற சில பதங்களுக்காக நாம் இழந்தவைகளும், கற்க மறந்தவைகளும் தரவேற்ற மறுத்தவைகளும் ஏராளம்; ஏராளம்! கா.பொ.த. உயர்தரம் முடித்த பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்தடுத்த நாள்களிலேயே தனியார் வங்கிகளில் வெறும் எட்டாயிரம் ரூபா உதவிப் பணத்தில் வேலைக்கு சேர்ந்த இன்றைய இருபத்தைந்து வயது இளைஞனின் தற்போதைய ஈட்டங்கள் எவை எவை? ஆறு வருட வங்கித் துறை அனுபவம் இரண்டு கணக்கியல் துறை சார்ந்த தேசிய டிப்ளோமாக்கள் உள்ளிட்ட நான்கிற்குக் குறையாத சான்றி[illegible] [illegible] நெருங்கும் சம்பளத் தொகை தங்குமிடம், வாகனம், தொலைபேசி, இணையம் உள்ளிட்ட வசதிகள், அடுத்த பதவியுயர்வினை இன்னொரு வங்கியின் பதவியுடன் ஒப்பிட்டு பேரம் பேசும் தன்னாண்மை, தன்னைச் சார்ந்த சிலருக்கான கீழ்நிலை பதவிகளை சிபாரிசு செய்யும் மெல்லிய மிடுக்கு'', போன்ற இன்னும் பல. சமவயதினாய் அதேவகுப்பறையில் பாடசாலை கல்வியில் ஒன்றாய் அமர்ந்து பல்கலைக் கழகம் சென்ற இன்னொருவரின் பட்டமளிப்பு விழா போன மாதம்தான் கடந்து போனது. சங்கத்தில் சேர்வதா?, விண்ணப்பங்களை நிரப்பிப் போடுவதா? ஓரிருமுறை ''அகில இலங்கை சேவைத் தரப்பரீட்சைகளுக்காக'' படிப்பதா? என்பதை இனித்தான் முடிவு செய்ய வேண்டும்!

ஆறு அல்லது ஏழு வருடங்களை விழுங்கிய தொழில் வெறுமைக்கு மேலதிகமாக அவன் பெற்றவைகளும், இவன் இழந்தவைகளும் அனுபவ உலகில் அளப்பெரும் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டு நிற்பதில் பின்னவனின் பங்கு மிகச் சொற்பமே! பல்கலைக்கழகப் பாடத்துறைகளில் கொண்டுவரவேண்டிய முக்கிய மாற்றங்களாக தொழிற்கல்வி, தனியார் பட்டப்படிப்புகள் பற்றியெல்லாம் இன்றைய நாளின் முக்கிய விவாதங்களுக்காக உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, கல்விக் கொள்கையாளர்கள், தொழில் வழங்குநர்கள், அரச திறைசேரி என்போர் 'கடிபட்டுக்' கொண்டிருக்கும் நிலையை அன்றைக்கே, எதிர்வுகூறத் தவறிய அந்த மாணவன் எங்ஙனம் குற்றவாளியாகி விட முடியும்?

உயர்தரப் பரீட்சை முடிவுகளின் வெட்டுப்புள்ளிகள் வெளியான நாள் முதல், முதற்படிவம் கையில் கிடைத்த நாள்வரை தான் பெறாது பெற்ற பேறாக பட்டப்படிப்பின் கனவுகளைச் சுமந்து திரியும் 19 வயது 'ரீன்' எண்ணமுடையவர்களையும், பெற்றோர்களையும், உறவினர்களையும் எப்படி விரல் நீட்டி வினவமுடியும்? பல்கலைக்கழக விடுதி அறை ஒன்றில் பகிடி வதைக் கலக்கத்தில் உறைந்திருந்த நாள் முதலாய், மேடை ஏறி ''கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ச் சிரிப்பும்'' தாங்கி பட்டம் பெற்று புகைப்படம் எடுத்து வீடு திரும்பும் நாள் ஈறாய், வேலை வாய்ப்புலகின் அருமைத் தன்மையை மருந்துக்குக்கூட கண்ணில் காட்டாத கற்கைநெறிகளை என்னவென்று சொல்ல?

பட்டச் சான்றிதழில் மொழி மூலப் பகுதியில் ''ஆங்கிலத்தை'' தாங்கி வெளிவருபவர்கள் பல்தேசியக் கம்பனி ஒன்றில் நேர்முகத் தேர்வில் விறைத்த மனிதர்களின் வேகமான அந்நிய மொழிக் கேள்விகளுக்கு விடை தெரிந்தபோதும் வெளிப்படுத்த முடியாமல் தடுக்கும் படபடப்பு, சரளமின்மை, பயன்படுத்தாமை போன்றவை அடுத்த நாள்களில் அவன் ஏறி இறங்க வேண்டிய வாசல்களை துரிதமாக முடிவெடுத்து வெளியனுப்பி விடுகின்றனர்.

தாய்மொழிச் சூழலிலான வசிப்பிடம், சாதாரண உரையாடல்களில் தாய்மொழியில் தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் பரீட்சைக்காக மட்டும் அன்னிய மொழியை உருப்போடும் அன்றன்றாட தேவைகள் போன்றன மொழியொன்றினைப் பயில்வதனை மட்டுமன்றி பயன்படுத்தி சரளமாவதன் முக்கியத்துவத்தினை அவர்களிடமிருந்து எப்பொழுதும் தொலைவிலேயே வைத்திருந்தது. தனியார் ஆங்கிலப் பயில்நெறிகள் எனும் பெயரில் பலரையும் முட்டாளாக்க சிலருக்கு சந்தர்ப்பங்களை [illegible] தேடித் தந்தது! பத்திரிகைகளுக்கு விளம்பரங்களையும் தந்தது!!

இளங்கலைப் பட்டதாரி ஒருவரை, அடுத்த நாளே, அவரின் தெரிவுப் பாடத்துக்கான ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமிப்பதற்கும்கூட நிதானித்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது கல்வியியற் கல்லூரி போன்றவற்றை தொழிற்கல்விக்கான தயார்ப்படுத்தும் இயந்திரங்களாக வைத்திருக்கும் அரசே 'றிஸ்க்' எடுக்கத் தயங்கும் நிலையில், கணக்கியல் பட்டதாரி ஒருவரை வங்கியின் கருமபீடத்தில் உட்கார வைக்கவும், தகவல் தொழில் நுட்பப்பட்டதாரி ஒருவரைத் தமது செயற்திட்ட பகுதி உழைப்பாளர் பதவியில் அமர்த்தவும் அந்த நிறுவனங்கள் இவர்களது தொழில்சார் துறை வல்லமையினை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை எப்படி எழுந்தமானமாகக் குற்றம் சாட்டிவிடமுடியும்?

ஆக, ''பயிற்சியின் பின்னர்தான், குறித்த ஒரு தமது பூரண வெளியீட்டைத் தன்னால் தொழில் வழங்கப்படுபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்'' என்கின்ற ஏகோபித்த மனநிலையைக் கொண்டுள்ள தொழில் தருநர்கள், தமது விரைவாக்கத்திற்கும், இலகு தன்மைக்குமாகப் பயிலுனர் பதவிக்குத் தெரிவு செய்வோரின் வயதெல்லையை 23 அல்லது 24இற்கு உள்ளாகவே பேணுவது சாதாரண வங்கிகள், தனியார் நிறுவனங்களின் இன்றைய நடைமுறை.

அல்பேர்ட் ஐன்ஸ்ரீனும், ஐசாக் நியூட்டனும் வந்து விரிவுரைத்தாலும்கூட இலங்கையின் பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டம் பெற்றவன் எனும் பெயர் உடன் 24 வயதினுள் ஒரு நெல்மணி கூட வெளியில் வந்து விழப்போவதில்லை என்கின்ற பேருண்மை அவர்களது மேற்போன்ற முடிவுகளுக்கு பெரிதும் உதவுகின்றது.

இத்தகைய இடர்களையும் மேலாண்மை செய்து, தமது சுயவிவரக் கோவையில் நிரந்தர, தற்போதைய முகவரியாக கொழும்பில் உள்ள உறவினரைத் தயார்ப்படுத்தி அச்சிட்டவர்களும், தொலைபேசி இலக்கங்களுக்காக கைபேசி இலக்கங்களை மட்டும் கொடுத்து வசிப்பிடங்களை வெளியிடாதவர்களும் பெற்ற 'டிப்ளோமாவையோ', 'டிகிறி'யையோ மறைத்து உயர்தர சித்தியினைக் கல்வித் தராதரமாகக் குறிப்பிட்டவர்களுமாக 'மாத்தி யோசித்த' எம்மவர்களில் பலர் இன்றைய வெள்ளி வீடு வந்து திங்கள் திரும்பும் தலைநகரின் தனியார் துறை ஊழியர்களாக நன்கு காலூன்றினார்கள் என்பது கொஞ்சம் பழங்கதைகள்.

தொழில் வழங்குநர்களுக்கு எது தேவையோ, எதை எம்மிடம் எதிர்பார்க்கிறார்களோ என்பதை அறியாமலும், அது எம்மிடம் இருந்த போதிலும் அதைத் தெரிவிக்காமலும் இருப்பது எமது தவறே அன்றி வேறில்லை!

சேலைக்கு மாற்றீடாக சுடிதாரரை கலாசார உடையாக அனுமதிக்கும் அளவு காலத்தரவேற்றத்தினை மாற்றம் கொண்டுணரத் தெரிந்த நாங்கள் 'கவர்மென்ட் கஜானா'க்களிடம் தான் கையேந்துவோம் என்று அழுது அடம்பிடிப்பதும், பட்டங்களின் பின் எந்தத் தொழில் கல்வியானாலும் படிக்கமாட்டோம் என்று நூல் விடுவதும் உடம்புக்கு நல்லதில்லை அன்பர்களே!

ஆரம்பத்தில் சொன்ன பாவற்காயுக்கும், பட்ட உண்மைகளுக்குமான பொதுப்பண்பாக ''கசப்பினை'' கடுமையாக உணர்வதன் மூலம், விடியப் போகின்ற இன்னொரு நாள் உங்களில் ஏதும் உறுதியான மாற்றத்தைக் கொண்டுவந்தால் நாம் தோழர்களே! 'சியர்ஸ்'!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் அநாதையாகும் இலங்கை

■ சுழியன்

இலங்கை என்ற இந்தத் தேசத்தை ஆட்சி புரியும் அரசு தனி வழியிலான அரசியல் பாதையை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றது. செங்கோல் ஆட்சிக்குப் பதிலாக கொடுங்கோல் ஆட்சிமுறைமையையே அது பின்பற்றி வருகின்றது.

இவ்வாறு தொடர்ந்தும் தவறுகளை இழைத்துக்கொண்டு தவறான வழியில் பயணிக்கும் இலங்கை அரசுக்கு நல்வழியைக் காண்பிப்பதற்கு சர்வதேச சமூகம் முயற்சிக்கும்போது இறையாண்மை, சுயாதீனம் போன்ற கேடயங்களைப் பயன்படுத்தி சர்வதேசத்தின் ஆலோசனைகளை அரசு புறந்தள்ளிவிடுகின்றது.

அதாவது, "என்னசெய்ய வேண்டும் என்பது எமக்கு நன்கு தெரியும். எனவே, எவரின் உபதேசமும் எமக்குத் தேவையில்லை. உங்களின் வேலையை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்." - என்ற ஆணவப் போக்கையே இலங்கை அரசு இன்று அரசியல் கொள்கையாகக் கடைப்பிடிக்கின்றது.

அத்துடன், சர்வதேசக் கூண்டில் தான் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதை ஏற்கமறுத்து தான் நிரபராதி தான் என்ற கோதாவில் இலங்கை தேசத்தை ஆள்பவர்கள் செயற்படுகின்றமையானது, நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. உலக வல்லுநர்களும் இந்த விடயத்தையே சுட்டிக்காட்டுகின்றனர்.

சர்வதேசத்திடம் இனி இல்லை என்றளவு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் இந்த அரசு, சர்வதேசத்தின் கோரிக்கைகளை - ஆலோசனைகளை புறக்கணித்துவருவதால் இனிவரும் காலங்களில் சர்வதேசத்தின் உதவிகளை இழந்து, உலக அரங்கில் அநாதையாய் வலம் வரவேண்டியதொரு நிலைமை இலங்கைக்கு ஏற்படும்.

குறிப்பிட்டதொரு எல்லைக்கு மேல் குற்றவாளியை எவராலும் காப்பாற்ற முடியாது. அவ்வாறு காப்பாற்ற முனைந்தால் தானும் குற்றவாளியாக மாறும் நிலை ஏற்படும். எனவே, அடங்காப்பிடாரிபோல் தொடர்ந்தும் இலங்கை அரசு செயற்படுமானால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு பக்கபலமாக இருந்துவரும் சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகள்கூட முழுமையாக கைவிட்டுவிட்டு பறந்து செல்லும் நிலைமை உருவாகலாம்.

அதற்கான சூழல் சர்வதேச அரங்கில் தற்போது உருவாகி வருகின்றது. தம்மிடம் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசு நிறைவேற்றும் வரையில் அந்த நாட்டுடன் பேச்சுகளை நடத்தமாட்டோம் என்ற இந்தியாவின் அறிவிப்பும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துமாறு ரஷ்யா பிரயோகித்துவரும் அழுத்தங்களையும் இதற்கு சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம்.

வாழ்வா சாவா என்ற இக்கட்டான நிலையில் தற்போது இருக்கும் மஹிந்த அரசு, ஆணவக்போக்கை கைவிட்டுவிட்டு ஜனநாயக பாதையில் பயணிக்கத்தவறின் இனி வரும் காலங்களில் சனி அதி உச்சத்தில் இருந்து ஆட்டிப்படைக்கும் என்ற கருத்தில் மறுதலிப்பதற்கு ஒன்றும் இருக்காது என்றே சொல்லவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற போர் வெற்றி விழாவின்போது இலங்கை பாதுகாப்புப்படை தமது ஆயுதபலத்தை வெளிப்படுத்தியது. அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, இஸ்ரேல், ரஷ்யா ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களே பெரும்பாலும் காட்சிப்படுத்தப்பட்டன. இதன்மூலம் சர்வதேசத்தின் உதவியுடனேயே இலங்கை அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்தது என்ற விடயம் மீண்டுமொருமுறை அம்பலமாகின்றது.

எனவே,போர் காலத்தில் சர்வதேசத்திடம் தலையாட்டி பொம்மையாக செயற்பட்ட அரசு, தற்போது சர்வதேசத்தை எதிர்ப்பது ஏன் என்ற கேள்வியும் எம்முள் எழுகின்றது அல்லவா? அதற்கு பல காரணங்கள் உள்ளன.

உள்நாட்டுப் போரை முடிப்பதற்கு இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய சர்வதேச சமூகம் போர்முடிவடைந்த பின்னர் ஆரம்பத்தில் முக்கியமான சில விடயங்களை உள்நாட்டில் செய்து முடிக்குமாறு இலங்கை அரசுக்கு மிகவும் விநயமான முறையில் கோரிக்கைகளை விடுத்தன.

போர்க் காலத்தில் தமது கட்டுப்பாட்டில் இருந்த கொழும்பு அரசு, தாம் சொல்வதைச் செய்யும் என்றே சர்வதேசம் எதிர்ப்பார்த்திருந்தது. எனினும், சர்வதேசத்தின் நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கும் வகையில் கோரிக்கைகளை அடியோடு நிராகரித்தது இலங்கை.

இதனால் பொறுமையிழந்த சர்வதேச சமூகம் ஜெனிவாவில் தீர்மானமொன்றை நிறைவேற்றி 'நாங்கள் சொல்வதைச் செய்து முடி' எனக் கடுந்தொனியில் கட்டளைகளைப் பிறப்பித்தது.

அதாவது, புரையோடிப் போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை நடத்தி தீர்வைக்காணுங்கள், எனசர்வதேச சமூகம் தொடர்ச்சியாக இலங்கையை வலியுறுத்தி வருகின்றது. ஜெனிவாத் தீர்மானமும் இவற்றுக்கு இசைவாகவே இருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடவேண்டியதொரு விடயமாகும்.

ஆனால்,சர்வதேச சமூகம் கூறியவற்றுள் ஒன்றையேனும் செய்வதற்கு அரசு இன்னும் முன்வரவில்லை. மாறாக, காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தையே அது கையாள்கின்றது. அதுமட்டுமன்றி, கூட்டமைப்புடன்பேச்சுகளை முறித்துக்கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என அடம்பிடிப்பதுடன், சர்வதேசத்திலிருந்து அரசியல் தீர்வை இறக்குமதி செய்யமுடியாது என்றும் சர்வதேசத்தைக் கொதிப்படைய வைக்கும் வகையில் கருத்துகளை அள்ளி வீசுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விடயத்தை எடுத்துக்கொள்வோமானால், அந்தக் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு இன்னும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையேனும் முன்னெடுக்கவில்லை. முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஒன்றும் 'பைபிள்' அல்ல என்றே அது வீறாப்பு பேசிவருகின்றது.

அடுத்தபடியாக வடக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றி தமிழர் நிலங்களை அவர்களிடம் ஒப்படையுங்கள் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், "எந்தக்கொம்பன் சொன்னாலும் வடக்கில் இருந்து படைமுகாம்களை அகற்றமாட்டோம்" என நாட்டின் ஜனாதிபதியே கடுந்தொனியில் முழக்கமிடுகின்றார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு பல அர்த்தங்கள் உள்ளன. தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்கமாட்டோம்; இராணுவத்தை வைத்து முழு நாட்டையும் ஆட்டிப்படைப்போம்- ஆகியவிடயங்களை இவ்வாறான கருத்துகள் மூலம் அவர் மறைமுகமாகக் கூற முற்படுகின்றார்.

இன்றைய நவீன உலகில் இனவாதம் பேசுவதாலேயோ அல்லது ஒரு இனத்துக்கு எதிராகக் கடும்போக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாலேயோ பிரச்சினைகள் தீரப்போவதில்லை. சர்வதேசத்தின் கோரிக்கைகளுக்கு அமைய தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டும்; இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது இலங்கை அரசு தொடர்ந்தும் பிடிவாதப்போக்கில் செயற்படுமானால் சர்வதேச சமூகம் இலங்கையைத் தனிமைப்படுத்தலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமானால் ஆசியாவின் அதிசய நாடாக மாற்றம் பெறவேண்டும் என்ற கனவைக் கொண்ட இலங்கை தேசம் ஆசியாவின் 'அநாதை' நாடாகவே மாற்றம் பெறும். ஆசியாவின் ஆச்சர்யமா? அநாதையா? இவை இரண்டுமே ஆட்சியாளர்களின் கைகளில்தான்.



# அருகிச்செல்லும் பாரம்பரியக் கலைகள்

■ இ.சுரேஸ்கரன்
எம்.ஆர்.ரி.சி

யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலை மண்வாசனையுடன் வெளிப்படுத்துவதில் பாரம்பரியக் கலைகளும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. மக்களின் வாழ்வியலில் இடம்பிடித்த பாரம்பரியக் கலைகளிலே நாட்டுக் கூத்து, காத்தவராயன் கூத்து, சிந்து நடைக்கூத்து, பப்பிரவான் கூத்து போன்ற கூத்துக்களும் கிராமியக் கலைகளும் காணப்படுகின்றன. இந்தக் கலை வடிவங்கள் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் அந்த ஊரைச் சேர்ந்த கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டு வந்தது. இந்தக் கலைகளனைவை ஒரேபெயரில் அழைக்கப்பட்டாலும் நிகழ்த்துகை முறைகள், நிகழ்த்துகைக் காலங்கள், நிகழ்த்தப்படுவதற்கான காரணங்கள் என்பன பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டுள்ளன. முன்னர் இந்தப் பாரம் பரியக் கலையை எல்லா மக்களுமே விரும்பிப் பார்த்தனர். ஆனால் இப்பொழுது இந்தக் கலைகள் எல்லா மக்களாலும் விரும்பப்படுவதில்லை. இவை முன்னரைப் போன்று நிகழ்த்தப்படுவதில்லை. எல்லாக் கிராமங்களிலுமே அருகிச்செல்கின்றன. ஒரு சில கிராமங்களில் மட்டும் இன்னமும் இவை புத்துயிர் பெற்று நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய கிராமியக் கலையானது கிராமப்புற மக்களாலேயே அதிகம் மதிக்கப்பட்டும் விரும்பப்பட்டும் வந்தது. படித்த வர்க்கத்தினர் இதனை விரும்பாது, கூத்தாடுபவர்களையும் மதிக்காது, அவர்களை கூத்தாடிகள் என்று ஏளனப்படுத்தி அழைத்தார்கள். இருந்த போதிலும் அவை கிராமப் புறத்து மக்களிடம் பெரிதும் வளர்ந்து காணப்பட்டது. கலைஞர்களும் நிறைவாகவே இருந்தனர். ஆனால் இன்று ஒவ்வொரு கிராமங்களிலும் கலைஞர்களும் அருகி, கூத்துக்கள் நிகழ்த்துவதும் குறைந்துவிட்டன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. சினிமாவின்வருகை, கலைஞர்களின் வெளிநாட்டுப் பயணம், நிதிவளம் பற்றாக்குறை, பார்வையாளர்களின் ரசனை குறைந்தமை, படித்த வர்க்கத்தின் அதிகரிப்பு என இன்று கூத்துக்கள் அருகிச் செல்வதற்கு பல காரணங்கள் உள்ளன. இவ்வாறான காரணங்களினாலேயே பெரும்பாலான கிராமங்களில் இந்தப் பாரம்பரியக்கலைகள் அருகிப்போய்விட்டன. இருப்பினும் இன்று



வட்டுக்கோட்டை சிந்துபுர கிராமத்தில் இந்த நாட்டுக் கூத்து மற்றும் கிராமியக்கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன. கிராமிய கலைகள் இப்பொழுது வட்டுக் கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த சிந்துபுரக் கிராமத்தில் நாகப்பு கலைக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பாரம்பரிய கலைகள் அருகிப் போவதற்கான காரணங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள பாரம்பரிய கூத்துக் கலைக் கலைஞரான வட்டுக்கோட்டை சிந்துபுர கிராமத்தைச் சேர்ந்த க.நாகப்பு அவர்களிடம் கேட்டபோது, "கூத்துக்கள் ஆரம்ப காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் இருந்தது போன்று இன்று இல்லைத்தான். இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. போர், கூத்துக்களை ஒவ்வொரு இடங்களுக்கும் கொண்டு சென்று மேடையேற்றுவதற்குரிய போதிய நிதி பற்றாக்குறை, கலைஞர்கள் மற்றும் ரசிகர்கள் இல்லாமை, சினிமா, தொலைக்காட்சி நாடகங்களின் வருகை போன்ற பல காரணங்கள் உள்ளன. ஆனால் நாம் இன்னமும் இந்தக் கூத்துக்கலையை மறக்கவும் இல்லை. கைவிடவும் இல்லை. இப்பொழுதும் கூட நிகழ்த்தி வருகின்றோம். அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தினோம். எமது கலைஞர்களால் இந்தக் கூத்துக்களை விட கிராமியக்கலைகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பாரம்பரியக் கலைகளில் சில கலைகளை விட ஏனைய கலைகள் அழிந்து போகின்றன. இருப்பினும் அவை சில இடங்களில் இன்னமும் அழியாது உறங்கியபடியே இருக்கின்றன. ஆனால் எமது கிராமத்தில் இந்தக் கலைகள் இன்னமும் இருக்கின்றன. அவற்றை இப்பொழுதும் கூட பல இடங்களிலும் மேடைஏற்றிவருகிறோம்' என்றுகூறினார்.

மண் வாசனையையும், தமிழ் பாரம்பரியத்தையும் தொட்டு நின்ற எமது பாரம்பரியக்கலைகள் அருகிச்சென்றாலும் கூட இன்னமும் ஒரு சில இடங்களில் அது புத்துயிர் பெற்று வாழ்கின்றது என்றால் அது தமிழ் பாரம்பரியத்தையே நிலை நாட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசர் பெற்ற படிப்பினை

ஓர் ஊரில் மன்னர் ஒருவர் இருந்தார்.

அவருக்கு, பக்கத்தில் இருக்கும் நாட்டின் மீது படையெடுத்து அதையும் தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

'எப்போது படையெடுக்கலாம்?' என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார். இப்படி அவர் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார்.

அந்தப் பெரியவர் அடிக்கடி மன்னரிடம் வந்து நீண்டநேரம் பேசிக் கொண்டிருப்பார். இப்போதும் அவர் அப்படித்தான் வந்தார்.

''மன்னரே, தாங்கள் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவர் வினவினார். மன்னர் தன்னுடைய யோசனையைத் தெரிவித்தார்.

இந்தச் சமயத்தில் மன்னருக்குத் தாகம் எடுத்தது. அவருக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது.

உடனே மன்னர் அங்கே இருந்த அரண்மனைப் பணியாளர் ஒருவரைக் கூப்பிட்டு, ''போய் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அந்தப் பணியாளர் சென்று ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்து மன்னனிடம் நீட்டினார். அதை வாங்கி மன்னர் குடிப்பதற்காக வாய் அருகில் கொண்டு போனார்.

அந்த நேரம் பார்த்து, ''மன்னா.. கொஞ்சம் பொறுங்கள்'' என்றார் அந்தப் பெரியவர்.

ஆவலோடு தண்ணீர் குடிக்கப்போன மன்னர் அப்படியே நிறுத்திவிட்டு பெரியவரைப் பார்த்தார்.

அப்போது அந்தப் பெரியவர், ''மன்னரே! இப்போது உங்களை விட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்குத் தண்ணீர் கொடுக்க மறுத்துவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சக்தி உங்களைத் தண்ணீர் குடிக்கவிடாமல் தடுத்து விடுகிறது என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் இப்போது இந்த ஒரு குவளைத் தண்ணீரை என்ன விலை கொடுத்து நீங்கள் வாங்குவீர்கள்?'' என்று கேட்டார்.

''இப்போது எனக்கு இருக்கும் தாகத்துக்கு.. என்னுடைய அரசில் பாதியைக் கொடுத்தாவது இந்தத் தண்ணீரை வாங்கத் தயங்க மாட்டேன்''என்றார் மன்னர்.

''சரி அந்தத் தண்ணீரைக் குடியுங்கள்'' என்றார் பெரியவர். மன்னர் ஆவலோடு அந்தத் தண்ணீரைக் குடித்து முடித்தார்.

அதன் பின் மன்னர் சிறிது நேரம் தன்னுடைய படையெடுப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கடந்த பின் மீண்டும் இந்தப் பெரியவர் கேட்டார்.

''மன்னா, நீங்கள் ஒரு குவளை தண்ணீரைக் குடித்து முடித்து விட்டீர்கள்.. இப்போது அந்தத் தண்ணீர் உங்கள் உடம்பை விட்டு வெளியில் வரக்கூடிய பாதை அடைபட்டுப் போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்... அதை வெளியேற்றுவதற்கு நீங்கள் எவ்வளவு செலவழிப்பீர்கள்?'' என்று வினவினார்.

மன்னர் யோசித்தார். ''அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் என்னுடைய அரசு முழுவதையும் அதற்கு ஈடாகத் தரவும் நான் தயங்கமாட்டேன்'' என்றார்.

இப்போது அந்தப் பெரியவர், ''எந்த அரசின் மதிப்பும் ஒரு குவளைத் தண்ணீர் அளவுக்குக் கூட இல்லையே.. அந்த அரசை அடைய வேண்டும் என்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்களுடன் சண்டையிடுகிறார்களே.. அதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதில் தெளிவு ஏற்பட்டது. தன் மனதில் தோன்றிய போர் வெறியை அவர் விரட்டி அடித்துவிட்டார். அதன் பின்னர் நிம்மதியாக ஆட்சி புரிந்தார்.

உயிருக்கு என்ன விலை? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆனால் அது இப்போது எவ்வளவு மலிவாகிப் போய்விட்டது. அதையும் யோசித்துப் பாருங்கள்.



ஆசை-பேராசையாக மாறுகிறது. அதன் பின்னர் அது வெறியாக மாறுகிறது. அதன் பின்பு பைத்தியம் பிடிக்கிறது.

இந்தக் காலத்து மனிதர்களுக்கு பணம், அதிகாரம் என்று இரண்டு விதமான பைத்தியம் பிடித்திருக்கின்றது என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். இதெல்லாம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சாதனை படைத்து வரும் விளையாட்டு அணியை உருவாக்கிய கருகம்பன் கம்பன் ச.ச.நிலையம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



**கர்ணன்**

கருகம்பன் கம்பன் சனசமூக நிலையமானது கலை, கலாசார நிகழ்வுகள் என்ற ரீதியில் கழக ஆண்டு நிறைவு விழாவின் போது சங்கீதம், நடனம், நாடகம், மரபு வழிக்கூத்துக்கள், காவடியாட்டம் போன்றன நடத்தப்படுவது வழமையாகும். விளையாட்டுக்களையும் போட்டிகளையும் நடத்தக் கூடிய மைதானமோ, விளையாட்டு உபகரணமோ கம்பன் கழகத்திற்குச் சொந்தமாகக் கிடையாது. இருப்பினும் வெங்காயம், புகையிலை உற்பத்தி பருவகாலம் முடிவுற்றதும் இந்தக் கிராமத்தில் உள்ள தோட்ட நிலத்தில் ஆண்டு நிறைவு விழாவின் போது விளையாட்டுப் போட்டிகளும், சுவட்டு மைதான நிகழ்வுகளும் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கிராமத்தின் இளைஞர்களது உடல் உள வளர்ச்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே விளையாட்டுப் போட்டிகளும், சுவட்டு நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்வுகள் அண்மைய போர்க் காலத்தில் சில ஆண்டுகள் தடைப்பட்டதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். இருப்பினும் இதே சனசமூக நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்ட கருகம்பன் கம்பன் கழக அணி தொடர்ந்தும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

கம்பன் கழக விளையாட்டு அணி வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் வெளிக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு அந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றுச் சாதனைகள் படைத்துவருகின்றன.

கயிறு இழுத்தல் கிறிஸ் கம்பம் ஏறுதல், மரதன் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகள் ஏனைய கழகங்களால் நடத்தப்படும் போது அவற்றில் அணியாகப் பங்குபற்றி வெற்றி பெற்றுச் சாதனைகளைப் படைத்து வருகின்றன. குறிப்பாக புலோலி அறிவகம் சனசமூக நிலைய ஆண்டு விழாவை ஒட்டி நடத்தப்படுகின்ற வெளிக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முறையாக பங்கு பற்றி கயிறு இழுத்தல் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் உற்சாகமடைந்த கம்பன் கழக விளையாட்டு அணி தொடர்ந்தும் பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றிச் சாதனைகளை ஏற்படுத்தி வருகின்றது. வெளிக்களப் போட்டிகள் மூலம் வேறு பரிசில்களையும் இந்தக் கழகம் பெற்றுள்ளது.

> காலாதி காலமாக குடிசைகளில் வாழ்ந்து வந்த கருகம்பன் கம்பன் சனசமூக நிலைய கிராம மக்களுக்கு சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஜெர்மன் அரசின் உதவித்திட்டத்தின் கீழ்தான் முதன் முதலில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

கிராமத்தின் அபிவிருத்தி, சுயதொழில் வேலை வாய்ப்பு என்பனவற்றை நோக்கும் போது கம்பன் கழகம் நேரடியாகப் பணியாற்றத் தவறியிருந்தாலும் இந்தக் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஐக்கிய நாணய சங்கம், போரூட் நிறுவன அமைப்பு போன்றவற்றின் செயற்பாடுகள் மூலம் சனசமூக நிலையத்தை ஆதாரமாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

இந்தக் கிராம மக்களுக்கென வீட்டுக் கடன், மலசலகூடங்கள் அமைப்பதற்கான நிதி உதவி, விலங்குவளர்ப்பு போன்றவற்றுக்கான கடன்கள் சனசமூக நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் சனசமூக நிலையத்தின் உதவியுடன் குழாய்க்கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

காலாதி காலமாக குடிசைகளில் வாழ்ந்து வந்த கருகம்பன் சனசமூக நிலைய கிராம மக்களுக்கு சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஜெர்மன் அரசின் உதவித்திட்டத்தின் கீழ்தான் முதன் முதலில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. தொடர்ந்து இந்தக் கிராமத்தில் சின்னஞ்சிறிய கல் வீடுகள் உருவாகி குடிசை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு கடன் திட்டங்கள் மூலமும் வீடுகள் இந்தக் கிராமத்தில் உருவாகின.

இந்தக் கிராம மக்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பல்வேறு சுகாதாரக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதுடன் போலியோ தடுப்பு மருந்து வழங்கல், சுற்றுப்புற சுகாதாரத்தை மேற்கொள்ளுதல், குடிதண்ணீர் கிணறுகளுக்கு குளோரின் இடல் போன்ற பணிகள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

கம்பன் கழக சனசமூக நிலைய ஆண்டு விழாவை ஒட்டி நடத்தப்படுகின்ற ஆண்டு விழா, பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி என்பன ஆண்டு தோறும் ஆவணி மாதக் கடைசியில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கழகத்தின் கொடி மஞ்சள் நிறத்திலானது. மஞ்சள் நிறக் கொடியின் நடுவே கலைமகளின் கைகளில் தவழும் வீணை பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கம் தனது வங்கிக் கணக்கை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கருகம்பன் கம்பன் சனசமூக நிலையம் இது வரைகாலமும், தன்னாலான சேவைகளை கருகம்பன் கிராம மக்களுக்கு வழங்குவதற்கு பல தனியார் நிறுவனங்களும் தனி நபர்களும் பெரிதும் உதவி புரிந்துள்ளமை குறிப்பாக சனசமூகநிலையத்திற்கு தினசரிப் பத்திரிகைகள், வாராந்த சஞ்சிகைகளை தமது சொந்தச் செலவில் வழங்கியவர்களை இந்த நிறுவனம் நினைவு கூருகின்றது.

இந்தக் கிராமமக்களையும், சுகாதார வாரங்களின் போது கழக ரீதியான கருத்தரங்குகளையும், சுகாதார சேவைகளையும் வழங்கிய பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களையும் இந்தக் கட்டத்தில் நினைவு கூருகின்றது. அதே நேரம் இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்கும், மக்கள் வாழ்வியலின் முன்னேற்றத்துக்கும் பணி செய்த இந்தக் கிராம ஐக்கியநாணயசங்கம், போரூட் நிறுவனம் அகியவற்றின் பணிகளையும் சனசமூக நிலையம் பாராட்டுகின்றது.

இதே வேளை கருகம்பன் கிராமத்திற்கு முதன் முதலாக வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக் கொடுத்த, அந்தக் காலத்தில் மந்திகைப் பிரிவிற்கான கிராம சேவையாளராகப் பணியாற்றிய அமரர் செ.அ.ஞானச்சந்திரனையும், அவரைத் தொடர்ந்து பணி புரிந்த கிராம சேவையாளர்களையும், சனசமூக நிலையத்தை ஒரு நிரந்தரமான துன்னாலை வடக்கு அல்லையம்பதியைச் சேர்ந்தவரும் சொண்ட் நிறுவன இயக்குனருமான ச.செந்தூர்ராஜாவையும், ஏனைய உதவிகளை பருத்தித்துறைப் பிரதேசசபையையும் கருகம்பன் சனசமூக நிலையம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்கின்றது என கருகம்பன் கம்பன் சனசமூக நிலையம் தெரிவித்துள்ளது. *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரத்துடன் மோதியது வான்



எருவில்,ஜூன்13

அக்கரைப்பற்று, பொத்துவில் நெடுஞ்சாலையில் வான் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் சாரதி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நெடுஞ்சாலையில் சிமெந்து மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு வேகமாகப் பயணித்த இந்த வான் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த வானில் சாரதியைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-31)

## வைரஸ் காய்ச்சலினால் மூவர் வைத்தியசாலையில்

நுவரெலியா,ஜூன்13

நாவலப்பிட்டி நகரப் பகுதிக்குட்பட்ட பகுதியில் மூன்று சிறுவர்கள் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல் அசுத்தமாக இருந்தமையினால் இந்த வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. பாடசாலை சூழல் மற்றும் வீட்டுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு நாவலப்பிட்டி பொது சுகாதாரப் பிரிவினர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மக்கள் சுற்றுச்சூழலை சுத்தத்துடன் பேணுமாறும் அத்தனை மீறுவோருக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று நாவலப்பிட்டி நகர சபையினர் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

திருமலையில் வேலைவாய்ப்பு என்ற போர்வையில் ஏமாற்றா?

# 200 பெண்கள் கொழும்புக்கு ஏற்றும் முயற்சியில் சந்தேகம்

எருவில்,ஜூன்13

திருகோணமலைக்கு கொழும்பிலிருந்து வந்த சுகந்திர வர்த்தக மையத்தின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குழுவொன்று அங்குள்ள 200 இற்கும் மேற்பட்ட பெண்களை திருமலை நகராட்சி மன்றத்துக்கு அழைத்து தொழில் வாய்ப்பு தருவதாகக் கூறி கூட்டம் வைத்துள்ளனர். இவர்கள் மிக விரைவில் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர் எனவும் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் எங்கு அழைத்துச்செல்லப்போகின்றார்கள்? எதற்கு அழைத்துச் செல்லப்போகின்றார்கள்? என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். ''கொழும்பு வர்த்தக மையத்திலிருந்து வந்தவர்கள் ஆடைத்தொழிற்சாலை மற்றும் ஏனைய தொழில்களில் தங்களை ஈடுபடச் செய்யவுள்ளனர் எனப் பெண்கள் கூறுகின்றனர். தொழில் வாய்ப்பு இன்மையால் கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை வைத்துக் கொண்டு அவர்களை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களிடம் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்'' என்றுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வந்தவர்கள் யார்? இவர்கள் எதற்காக வந்திருக்கின்றார்கள்? என்பது கூட இதுவரைக்கும் தெரியாத நிலையிலேயே பெண்கள் ஏமாறுவதற்கு இருக்கின்றார்கள்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய காலகட்டத்தில் தொழில்வாய்ப்பென்பது கட்டாயமானதொன்றாகும். அதனைக் காரணம் காட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வந்த சுதந்திர வர்த்தக மையத்தின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குழுவொன்று திருகோணமலை நகராட்சி மண்டபத்துக்கு பெண்களை அழைத்து சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். இவர்கள் மிகவிரைவில் வேலைவாய்ப்பு என்ற பெயரில் கொழும்புக்கு அழைத்துச் செல்ல விருப்பதாக அறியமுடிந்தது.

எங்கு அழைத்துச்செல்லப்போகின்றார்கள்? எதற்கு அழைத்துச்செல்லப்போகின்றார்கள்? என்பது கூட தெரியாத நிலையில் கொழும்பு வர்த்தக மையத்திலிருந்து வந்தவர்கள் ஆடைத்தொழிற்சாலை மற்றும் ஏனைய தொழில்களில் தங்களை ஈடுபடச்செய்யவுள்ளனர் எனப் பெண்கள் கூறுகின்றனர்.

கொழும்பிலிருந்து வந்தவர்கள் யார்? இவர்கள் எதற்காக வந்திருக்கின்றார்கள்? என்பது கூட இதுவரைக்கும் தெரியாத நிலையிலேயே பெண்கள் ஏமாறுவதற்கு இருக்கின்றார்கள். கிழக்கில் உள்ள ஆண், பெண் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அவசியம் என்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உறுதியான நிலைப்பாடு இருக்கின்றது. அவ்வாறு வேலை கொடுப்பதாக இருந்தால் எந்த நிறுவனம்? அது எங்கிருந்து வருகின்றது? எவ்வாறு தொழில் கொடுப்பது? என்பது பற்றி தெளிவுபடுத்தவேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு தெளிவுபடுத்தாமல் பஸ்ஸில் பெண்களை ஏற்றி வேலைதருவதாகக் கூட்டிக்கொண்டு போவதென்பதை எந்தவகையில் ஏற்றுக்கள்ளமுடியும்?

தொழில் வாய்ப்பு இன்மையால் வடகிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை வைத்துக் கொண்டு அவர்களை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களிடம் அனைவரும் அவதானமாக இருக்கவேண்டும். இதற்கு முன்னரும் இப்படி ஏமாற்றப்பட்டவர்கள் அதிகம் பேர் உள்ளனர்.

எனவே, இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களில் அங்குள்ள பெற்றோர்கள், சமூகப்பெரியார்கள் மிகவும் அக்கறையுடன் இருந்து செயற்படவேண்டும்- என்றார். (ச-31)

## துண்டுப் பிரசுர விநியோகத்தை தடுக்க முற்பட்டவர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூன்13

அக்கரைப்பற்று பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஜூம்மா தொழுகையின் பின்னர் இடம்பெற்ற துண்டுப்பிரசுர விநியோகத்தைத் தடுக்க முற்பட்டவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துண்டுப்பிரசுர விநியோகத்தைத் தடுக்க முற்பட்டவரும் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளானவர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் சந்தேகநபரான அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான ஏ.எல்.தவம் என்பவரைக் கைதுசெய்து அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். அதன் போது குறித்த நபரை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா ஐம்பதாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்ட போது ஏற்பட்ட வாக்குவாதத்தால் துண்டுப் பிரசுரம் விநியோகித்தவரை தடுக்க முற்பட்டபோது மோதல் ஏற்பட்டு துண்டுப்பிரசுரம் விநியோகித்தவரும், துண்டுப் பிரசுர விநியோகத்தைத் தடுக்க முற்பட்டவரும் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். துண்டுப்பிரசுர விநியோகத்தைத் தடுக்க முற்பட்டு தாக்குதலுக்குள்ளானவர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ச)



விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட குடும்பிமலை பிரதேசத்தில் வரலாற்றுப் பூங்கா மற்றும் போரால் கொல்லப்பட்ட முப்படை மற்றும் பொலிஸாருக்கான நினைவு தூபி ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் தொடரும்

### கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

எருவில்,ஜூன்13

கிழக்குப் பல்கலைக்கழக பேரவையில் புதிதாக நியமிக்கப்பட்டவரை மாற்றுவதுடன், மீண்டும் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படும் வரை ஒருவார காலமாக நடைபெற்றுவரும் தமது விரிவுரைப் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடரும் என்று கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாணவர் ஒன்றியம் மேலும் தெரிவித்ததாவது:-

அருட்தந்தை சிறிதரன் சில்வஸ்ரர் மரணமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டவரது நியமனம் துணைவேந்தரின் பரிந்துரை எதுவும் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை ரத்துச் செய்து மீண்டும் சமூக அக்கறையும் செயற்பாட்டுத்திறனும் மிக்க பாதிரியார் சமூகத்தில் இருந்து ஒருவரை நியமிக்க வேண்டும்

எம்முடைய போராட்டத்தில் மட்டக்களப்பு நகரிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடம், கல்லடியிலுள்ள விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவன மாணவர்களும் இணைந்துள்ளதுடன், அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியமும் இணைந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றுகூடலில், கலந்துரையாடப்பட்ட பல்வேறு விடயங்களுக்கமைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டு விரிவுரைப் பகிஷ்கரிப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த விரிவுரைப் பகிஷ்கரிப்புக் காரணமாக, வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்கள், கல்லடியிலுள்ள விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் சௌக்கிய பராமரிப்பு பீடம் ஆகியவற்றின் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், போராட்டம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழக பேரவையின் இம் மாதத்துக்கான அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவித்துள்ளது.

30 வருட பாரம்பரியம் கொண்ட கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தற்போது நடைபெற்று வரும் இவ்வாறான பிரச்சினைகள் எதிர்காலத்திலும் சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ச-31)

## குடிதண்ணீரின்றி மக்கள் அவதி

நுவரெலியா,ஜூன்13

மலையகப் பகுதியில் தற்போது நிலவிவரும் கடுமையான வெப்பநிலை காரணமாக குடிதண்ணீர் இன்றி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தலவாக்கல, கொட்டகல பகுதியில் சுத்தமான குடிதண்ணீர் இல்லாது மக்கள் அவதிப்படுகின்றனர்.

என்றுமே இல்லாதவாறு வரட்சியான நிலை மலையகப் பகுதியில் தோன்றியுள்ளதால் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மத்திய மாகாண நீர்வடிகால் திணைக்கள முகாமையாளர் லக்ஷ்மன் அத்தநாயக்க தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க முற்படுவீர்கள். பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆட்படலாம். பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவுகளை மட்டுமின்றி, எதிர்பாராத பண வரவுகளையும் பெறலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமை அடைவீர்கள்.

**இடபம்:** இனம்புரியாத கவலைகள், வீண் பயம் மனதில் ஆள்கொள்ளும் தொழில் ரீதியான விடயத்தில் கண்டிப்பாக நடந்து கொள்வீர்கள். உங்களுக்கு உதவி செய்வதாக் கூறிய ஒருவர், கடைசி நேரத்தில் கை விரிக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சோர்வு ஆள்கொள்ளும்.

**மிதுனம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தாலும், ஏதாவது விமர்சனங்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் நிர்ப்பந்தம் காரணமாக, அரைகுறை மனதுடன் சில வேலைகளைச் செய்வீர்கள். ஒரு இடத்தில் நீண்டநேரம் காத்திருந்து முக்கியமான வேலைகளை முடிக்கலாம். தெய்வ வழிபாடுகள் மன நிறைவு தரும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். மனக் குழப்பங்களைத் தவிர்க்க, நண்பரிகளிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவது நல்லது. அலைச்சல் இருந்தாலும், சில வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். நீங்கள் எதிர்கொண்ட அனுபவம் ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** உடல் உபாதைகள் குறைந்து உற்சாகம் பெறுவீர்கள். பெற்றோர் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். நீங்கள் எதிர்பார்த்தபோது, கிடைக்காத பணவரவு ஒன்று, இன்று கிடைக்கலாம். தொழில் ரீதியாக, சிலர் உங்களை விமர்சித்தாலும், அதை ஆலோசனையாக ஏற்பீர்கள்.

**கன்னி:** நீண்டநாள்களாக மனதை வாட்டிக்கொண்டிருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். உங்களுக்காக, சிறுதொகையைச் செலவிட விரும்பாத நீங்கள், மற்றவர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். நண்பர்களின் செயற்பாடு யோசிக்க வைத்தபோதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். போட்டி, எதிர்ப்புகளால் மன அமைதி பாதிக்கலாம்.

**நாளை**

வைகாசி 32 வியாழக்கிழமை 14.06.2012
திதி: தசமி மு.ப.11.50வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப 12.56 வரை
சுபநேரம்: 07.23- 08.53 வரை
ராகு காலம்: 01.23- 02.53 வரை

**துலாம்:** பணவரவுகளை எதிர்பார்த்து செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். நீங்கள் நினைத்தபடி, சில வேலைகளை முடிக்க முடியாமல், மற்றவர்களால் தடை ஏற்படலாம். மனக்குறைகளால் உற்சாகம், தெம்பு குறையும். வேண்டாத விவகாரம் ஒன்றில் தலையிட்டு, மன உளைச்சலுக்கு ஆள்படலாம்.

**விருச்சிகம்:** வழக்கத்துக்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து, கவலை அடைவீர்கள். சில வேலைகளை முடிக்க, தீவிர முயற்சி மேற்கொண்டு முடியாமல் போகலாம். தொழில் ரீதியாக, சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**தனுசு:** சில வேலைகளை காலதாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் மூலம், உங்களின் வேலை ஒன்றை முடிப்பீர்கள். வரவேண்டிய கடன் மிகுதிகி ஒன்றைக், கேட்டு வாங்குவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** கடன் உதவி, நிதியுதவி மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். இல்லறத் துணையின் வார்த்தைகள் யோசிக்க வைத்தபோதும், வெளிகாட்டிக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்:** உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை, மற்றவர்களுக்காக விட்டுக் கொடுக்கலாம். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை சந்திக்கலாம்.

**மீனம்:** குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அதுமுடியாத அளவுக்கு, யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒருவர் மீதுள்ள கோபத்தையே, மற்றொருவரிடம் காட்டுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | | 4 | 6 | | | 1 | |
| | | 4 | | 7 | | | | |
| 7 | | 9 | 5 | | | | 8 | 6 |
| 9 | | 7 | 3 | | | | | |
| 2 | 8 | 1 | | | | 5 | 4 | 3 |
| | | | | | 5 | 9 | | 8 |
| 1 | 3 | | | | 4 | 8 | | 7 |
| | | | | 1 | | 6 | | |
| | 9 | | | 8 | 7 | | 3 | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 2 |
| 9 | 1 | 5 | 2 | 3 | 6 | 4 | 7 | 8 |
| 4 | 7 | 2 | 8 | 5 | 1 | 6 | 3 | 9 |
| 5 | 3 | 9 | 1 | 8 | 4 | 2 | 6 | 7 |
| 2 | 4 | 6 | 3 | 7 | 5 | 8 | 9 | 1 |
| 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 9 | 7 | 6 | 2 | 3 | 5 | 8 | 4 |
| 8 | 5 | 3 | 4 | 1 | 7 | 9 | 2 | 6 |
| 6 | 2 | 4 | 5 | 9 | 8 | 7 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# சரவணா ரெக்ஸ்

**வாடிக்கையாளருக்கான விசேட சலுகை**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில்
இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
Special OFFICE WARE பஞ்சாபிதுணிகள்
சாறிகள் இந்தியா விலைக்கே
விற்பனை செய்யப்பட்டுவருகின்றன என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சிய சாலை**
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்
(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

**கையிருப்பு முடியும்வரை**
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை
1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=

* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள் - 1500/=
* இந்தியன் பட்டுச் சாறிகள் - (Full work) 3000/=
* இந்தியன் கஸ்மீர் சாறிகள் - 1500/=
* இந்தியன் மைசூர் சில்க் சாறிகள் - 2500/=
* இந்தியன் சூங்குடி வோயில் சாறிகள் - 1000/=
* ஜப்பான் சில்க் சாறிகள்
* இந்தியன் பான்சி சாறிகள் மற்றும் பாகிஸ்தான் பஞ்சாபித்துணிகள், சில்க் பஞ்சாபித் துணிகள், கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் ரெடிமேற் பஞ்சாபிகள்
* பெண்களுக்கான ரொப் - 500/=
* இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி - 2000/=
* ஆண்களுக்கான சேட் - 500/=
* ஆண்களுக்கான ஜீன்ஸ் - 500/=

மற்றும் விதவிதமான சாறித் தெரிவுகள்
[சி/584] [2-6-9]


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1944
09
09



மறைவு
2008
05
29

திருமதி

## வள்ளிப்பிள்ளை வேல்முருகு

**ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகளின் நிழலில்தான்
இளைப்பாறுகின்றோம்.**

[illegible]ம்பரை,
அல்வாய் கிழக்கு.

மக்கள், மச்சாள்,
மருமகள், பேரன்.

(19209)(8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றி தே.அ.அட்டையைப் பெற முடியாது

## ஆள்பதிவு திணைக்கள பிரதி ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்13

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அவசியம். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாது என்று ஆள்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜி.ஏ.ஆர். தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஆனால், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை இழந் துள்ளார்கள்.

அங்கிருந்த அரச அலுவலகங்களும் போர் காலத்தில் தீ மூட்டப்பட்டும் மோதல்களிலும் அழிவடைந்துமுள்ளன.

இதனால் இந்த அலுவலகங்களிலிருந்து தமக்குரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், முடிந்தளவில் தொலைந்து போன பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆள்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

பாதுகாப்பு கெடுபிடிகளின் போது மக்களின் கைவசம் இருக்க வேண்டிய முக்கிய ஆவணமாக தேசிய அடையாள அட்டையே உள்ளது என்று அவர் கூறினார். (ச)




சிறுவர்களுக்கு நட்புணர்வுடன் கல்வி புகட்டுவதற்கான புதிய கையேடு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி றீஸா ஹொசைனி, கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரவி கருணாநாயக்க எம்.பி. வெளிநாடு செல்ல அனுமதி

கொழும்பு,ஜூன்13

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வெளிநாடு செல்வதற்கான அனுமதியை கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கியுள்ளது.

மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அடுத்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டியுள்ளதால் அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என்று ரவி கருணாநாயக்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வேண்டுகோள் விடுத்தார்.

**வழக்கு விசாரணைகள் காரணமாக ரவி கருணாநாயக்கவின் கடவுச் சீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்கா நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கோடீஸ்வர வர்த்தகரான ராஜ்ராஜரட்ணத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட சில மில்லியன் டொலர்களை அந்நிய செலாவணி சட்டத்தை மீறி, இலங்கையில் உள்ள வங்கி ஒன்றில் வைப்பிலிட உதவியதாக ரவி கருணாநாயக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் காரணமாக ரவி கருணாநாயக்கவின் கடவுச் சீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற அனுமதி இல்லாது ரவி கருணாநாயக்கவால் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனாலேயே நீதிமன்றத்திடம் வெளிநாடு செல்ல அனுமதி கோரப்பட்டது.

வெளிநாட்டுப் பயணங்களை முடித்துக் கொண்ட பின்னர் ரவி கருணாநாயக்க தனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மீண்டும் பிளாஸ்ரிக் கூடை; பயன்படுத்தாத 27 பேர் கைது

கொழும்பு,ஜூன்13

மரக்கறி மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தாத 27 பேர் நுகர்வோர் அதிகார சபை யினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மரக்கறி மற்றும் பழ வகைகளை கொண்டுசெல்வதற்கு பிளாஸ்ரிக் கூடைகளைப் பயன்படுத்தும் நடைமுறை நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் முன்னெடுப்பதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நடைமுறை தெரிவு செய்யப்பட்ட 11 மரக்கறி வகைகளுக்கும் 10 பழ வகைகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதற்கமைய தக்காளி, சுண்டக்காய், கரட், பாகற்காய், கோவா, பசளி, பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், குடை மிளகாய் ஆகிய மரக்கறி வகைகளைக் கொண்டு செல்லும் போது கூடைகளை உபயோகிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர தோடம்பழம், மங்குஸ்தான், பப்பாளிப்பழம், பியர்ஸ், ஸ்டோபரி, கொய்யாப்பழம், கொடித்தோடை போன்ற பழ வகைகளுக்கும் இந்த நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார். (ச)

# பண்டாவின் சிலைக்கும் வந்தது ஆபத்து

கொழும்பு,ஜூன்13

கொழும்பு, காலிமுகத்திடலிலுள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவச் சிலையை அகற்றுவதற்கான நில அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஹொங்கொங்கை தலைமையகமாக கொண்ட சங்கரிலா ஹோட்டல் நிர்மாண பணிக்காகவே குறித்த சிலை அகற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)



# மிருகக் காட்சிசாலை திருட்டு: கைதாகினர் இரண்டு பேர்

கொழும்பு,ஜூன்13

தெஹிவளையிலுள்ள தேசிய மிருகக் காட்சிசாலையின் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சிங்கம், மற்றும் சிறுத்தை ஆகியவற்றின் தலைகள் காணாமல் போனமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிருகக் காட்சிசாலையில் பணியாற்றிய பிரதம விலங்கியல் வைத்திய நிபுணர், விலங்கியல் வைத்திய பிரிவு உதவியாளர் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இதேவேளை, மிருகக் காட்சிசாலையின் விலங்கியல் வைத்திய பிரிவு உதவியாளரிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே பிரதம விலங்கியல் வைத்திய நிபுணர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின்போது பிரதான சந்தேகநபரின் அலுவலகத்திலிருந்து முதலைகளின் பற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இன்று தடைப்படும் பேராதனை-கண்டி ரயில் சேவை

கொழும்பு,ஜூன்13

அவசர திருத்தப் பணிகள் காரணமாக மலையக மார்க்கத்தின் பேராதனை மற்றும் கண்டிக்கு இடையிலான ரயில் போக்குவரத்து இன்று புதன்கிழமை தடைப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் மார்க்கத்திலுள்ள பாலம் ஒன்றின் புனரமைப்புப் பணிகள் காரணமாகவே ரயில் போக்குவரத்து தடைப்படுவதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர். ரத்நாயக்க தெரிவித்தார்.

காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் இரண்டு மணிவரை திருத்தப் பணிகளுக்காக குறித்த ரயில் மார்க்கம் மூடப்படும் என அவர் தெரிவித்தார்.

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை வரையும், கொழும்பு கோட்டை யிலிருந்து கண்டி வரையும் பயணிக்கும் ரயில் சேவை, பேராதனைவரை மட்டுப்படுத்தப்படும் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# அனுமதிப்பத்திரமற்ற கொல்களம் கிராண்பாஸில் சுற்றிவளைப்பு

## நால்வர் கைது; 16 மாடுகளும் மீட்பு

கொழும்பு,ஜூன்13

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஜீட் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி நடத்தப்பட்டு வந்த மாடுகளை இறைச்சிக்காக வெட்டும் கொல்களம் ஒன்று பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றிவளைக்கப்பட்ட இடத்திலிருந்த 110 கிலோ எடையுடைய மாட்டிறைச்சியும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயார் நிலையில் இருந்த 16 மாடுகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மாடுகள் வெரலவல பொலிஸ் நிலையத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளன. (ச)

# ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த பதினொரு பேர் புத்தளத்தில் கைது

கொழும்பு,ஜூன்13

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்வதற்கு முயற்சித்த 11 பேர் புத்தளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் மட்டக்களப்பையும் ஏனைய இருவரும் முல்லைத்தீவையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் வைத்தியசாலை யின் பின்புறமாக உள்ள இடம் ஒன்றில் வைத்து இவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்குக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் குறித்த இடத்துக்கு நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கு முயற்சித்த முகவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநபர்கள் படகு ஒன்றின் மூலம் ஆஸ்தி ரேலியா வுக்கு செல்ல தயாராகியுள்ளனர் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# நீர்கொழும்பில் நைஜீரிய வாசிகள் நால்வர் கைது

கொழும்பு,ஜூன்13

நைஜீரியாவைச் சேர்ந்த நான்கு பேர் நீர்கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். விசா இல் லாத நிலையில் சட்ட விரோ தமாக தங்கியிருந்த குற்றச்சாட்டின் காரணமாகவே இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இந்த நான்கு நபர்களுடன் பெண் ஒருவரும் சிறுமி ஒருவரும் இருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 300 கிராம் ஹெரோயின் மற்றும் கொக்கேன் போதைப் பொருள் 44கிராம் என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# EPSIBA BEAUTY CARE
## எப்சிபா அழகுக்கலையகம்

கோலாகலத் திறப்பு விழா

இடம் : 23 கண்டி வீதி, சாவகச்சேரி
காலம் : இன்று (13.06.2012) புதன்கிழமை மு.ப. 9.30

இலங்கையின் முன்னணி அனுபவமிக்க அழகுக்கலை நிபுணர்கள், தென்மராட்சி வாழ் யுவதிகள், இல்லத்தரசிகள் மற்றும் அழகுக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்குத் தேவையான சகலவித அழகுக்கலை சேவைகளை ஒரே இடத்தில் நியாயமான கட்டணங்களில் வழங்குகிறார்கள்

எமது சேவைகள்



- முழுமையான அழகுக்கலைப்பயிற்சி வகுப்புக்கள் (பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்)
- சகல சமயத்தினருக்குமான மணப்பெண் அலங்காரங்கள்
- புருவ பராமரிப்பு
- முகம் மற்றும் சரும பராமரிப்பு
- தலைமுடி பராமரிப்பு மற்றும் அலங்காரங்கள்
- நகப்பராமரிப்பு மற்றும் அலங்காரங்கள்
- மலர்ச்செண்டுகள் விற்பனை ( Flower Boaqud )
- உலகின் முதல் தர அழகு சாதனப் பொருள்களின் விற்பனை

எப்சிபா அழகுக்கலையகம்
23, கண்டி வீதி, சாவகச்சேரி
தொ.பே.இல : 021 7200919

ஒரு முறை வருகை தந்து மகிழ்ச்சிகரமான வித்தியாசத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

(14738)(6-8-9)


## கணிதபாட மதிப்பீட்டுப் பரீட்சை

சாவகச்சேரி சீ.எஸ்.சீ கணினிப்பயிற்சி நிறுவனத்துடன் தென்மராட்சி கல்வி வலயம் இணைந்து பாடசாலைகளில் க.பொ.த.சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நடத்தும் கணித பாட மதிப்பீட்டுப் பரீட்சை இல.5 (பகுதி-1) மற்றும் மீள் வலியுறுத்தல் வழிகாட்டல் செயற்பாடு ஆகியவை நாளை மறுதினம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலைகளில் நடைபெறும்.

பரீட்சைக்கான வினாத்தாள்களை நாளை வியாழக்கிழமை பி.ப 12.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


## தவறிவிட்டது

இளையதம்பி சிவகுமாரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(472270290V), முதியோர் அட்டை ஆகிய இரண்டும் வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

76/1, திருவையாறு,
கிளிநொச்சி.

தொடர்பு: 077 656 6481

(19260)



THE HALO TRUST

## கண்ணிவெடி அகற்றுனருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்புரவற்றதும், தேக வலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்வதுடன் முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களைக் கீழ் உள்ள முகவரிக்குச் சமர்ப்பிக்கவும்.


**ஹெலோ ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

அனைத்து விண்ணப்பங்களும் 21 ஆனி 2012 வியாழக்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(19262)(2-6-9)


## ஈர விழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லன் சின்னராசா (கிப்பி)**
(வினோ பல்பொருள் உரிமையாளர்)



மலர்வு
22.07.1960

உதிர்வு
10.06.2011

ஒரு நிமிடம் பிரியாத
உந்தன் மனைவி
ஒன்றுமே தெரியாத
உந்தன் பிள்ளைகள்
ஒன்றாகக் கதறி அழுகின்றோம்.
அப்பா.......
ஓராண்டு என்ன... ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும், எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவில் வாழும்......

மருதங்கேணி தெற்கு,
வடமராட்சி கிழக்கு.

மனைவி- சி. ஈஸ்வரி
பிள்ளைகள் - அனு,சிந்து,வினோ.

(14737)(6-9)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### நேர்முகப் பரீட்சையைப் பிற்போடல்

14.06.2012 அன்று யாழ்.பல்கலைக்கழக சபை அறையில் நடைபெறவிருந்த ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் ஒப்பந்த அடிப்படையிலான அலுவலக உதவியாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சகல பரீட்சார்த்திகளும் இதனைக் கருத்திற் கொள்ளவும்.

பதிவாளர்.
12.06.2012

(C/583)(2-6-9)


# The specialist in nurturing your IT potential

## MICROSOFT OFFICE COURSES



### ICDL ImageMaker

A new certification designed to give candidates the fundamental skills required to use and manipulate digital images. provieds candidates the practical skills they need to get the most out of digital imaging software and hardware.

ICDL WebStarter

### e-type

Can learn at your own pace without any pressure. It's great for beginners as an introduction to a computer and also for those who have been using a computer for yours but have developed a habit of beging a 'two finger typist'. If you are an employer, specially in the BPO sector, it is a fantastic way to achieve efficiency and cost saving certified by the British computer Society (BCS), e-type is the only recognised touch-typing qualification on the NQF in the UK.

e type from BCS

### Internationl Computer Driving Licence [ICDL]

Module 1: Concepts of Information Technology
Module 2: Using the Computer and Managing the Files
Module 3: Word Processing
Module 4: Spreadsheets
Module 5: Database
Module 6: Presentation
Module 7: Infromation and Communication

ICDL

### e - Citizen

Block 1: Foundation Skills
Block 2: Infromation Search
Block 3: e-Participation

e-Citizen

### Advance ICDL

Advanced Word Processing
Advanced Spreadsheets
Advanced Database
Advanced Presentation

ICDL Advanced

### ICDL CAD

The Leading independent international standard for core skills in 2D computer - aided design. It is in line with current industry treads in 2D CAD to offer the most comprehensive, current and streamlined 2D CAD core skills certification.

ICDL CAD

### ICDL WebStarter

A Certification that offers candidates the opportunity to acquire the core skills required to design, create and maintain a web site, without having to commit to the time and expense of a professional - level web design programme.

ICDL WebStarter



## DIPLOMA COURSES

### Diploma in Computing — 6 Month

FICT
End - User Application for ICT
Personal Skills Development
Programming Concepts
Introduction of Programming Language
Web Design & Web Development
Programme Design Methodologies
Software Development Assignment
English for Academic Purpose (Optional)

### Diploma in Business Management — 6 Month

Business Organizational and Behavior
End - User Application for ICT
Personal Skills Development
Marketing Management
Business Mathematics and statistics
Information Systems
Strategic Management
Business Law
English for Academic Purpose (Optional)

### Diploma in Desktop Publishing — 4 Month

Adobe Photoshop CS5
Adobe PageMaker 7.0
Adobe Illustrator
Corel Draw 13

### Diploma in Software Development — 6 Month

Introduction of Software Engineering
Programming Concepts
OOP
Introduction to Project Management
Database Concepts
Introduction to Programming with VB.Net
Personal Skill Development
Software Testing and Quality Management
English for Academic Purposes (Optional)

### Diploma in Hardware and Networking — 4 Month

History of the Computer
Study about Function of the System
Identyfy the Errors and Solve the problem
System Asssembling and Dissembling
Installing OS, Application and Utility
Basic Networking

### Diploma in Multimedia — 6 Month

Adobe Photoshop
Adone Photoshop Elements
Adobe Premiere
Adobe AfterEffects
Macromedia Flash
Macromedia Director

## Certificate Courses

### Certificate in Office Application [2010] — 3 Month

Word Processing | Spreadsheets
Presentations | Database
Cards & Addvetisement Design
Page Setup and Printing

### Certificate in Web & Communication — 1 Month

Creating E-Mail
Outlook Express
Basic Web Design
Using Search Engines
Downloading & Uploading
Communication Tools

### Languages

English
Sinhala

### Other Certificate Courses

Certificate in C++
Certificate in C#
Certificate in Java Programming
Certificate in VB.Net
Certificate in 3D Max
Certificate in Macromedia Flash
Certificate in Oracel
Certificate in AutoCAD 2D, 3D

Java · Microsoft .net · AutoCAD · 3ds Max · ORACLE

### Academic Students

ICT Classess for A/L Students
GIT Classess for O/L Students

Batches are available | Week Days | Week Ends

GATEWAY CfICT · GATEWAY Language Centre · GATEWAY KIDS SCHOOL of COMPUTING · IPICT · ICDL International Computer Driving Licence · e-Citizen

**GATEWAY CFICT & LANGUAGE CENTRE**
# 347, Kasthuriyar Road, Jaffna.
Tel/Fax : 021 567 5555
E-mail: gatewayjfn@sltnet.lk

**GATEWAY CFICT BRANCHES:**
#347, Kasthuriar Road, Jaffna. TP : 021 222 7967
#28, 2/1 Point Pedro Road, Nellady. TP : 021 226 2395
#3/1, New Market, Chavakachcheri. TP : 021 227 0323

**IT & English at Gateway for a Promising Future**

(C/581) (6,9,10)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 33°c | 28°c | |
| மன் | | 30°c | 28°c | |
| வவு | | 34°c | 25°c | |
| முல் | | 32°c | 26°c | |
| கிளி | | 32°c | 26°c | |

பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## கோபுர வாசலுக்கு துவாரபாலகர்கள்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி சுவாமிகள் ஆலய முன்கோபுர வாசலில் இரு பக்கமும் துவாரபாலகர் புதிய விக்கிரகப் பாவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விக்கிரக பாவைகளை அமைப்பதற்கு தனி இரு அடியவர்கள் இதற்கு நிதியுதவியை வழங்கியுள்ளனர். (ந-28)

# பெற்றோரைப் பராமரிக்காதவர்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

பெற்றோரை உரிய முறையில் பராமரிக்காத பிள்ளைகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

011 282 4082 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என சிரேஷ்ட பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகின்றார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோரைப் பராமரிக்காத பிள்ளைகள் தொடர்பில், முறைப்பாடுகளை முன்வைக்க அனைத்து பிரதேச செயலகங்களிலும் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகளும் பிரதேச செயலக மட்டத்தில் ஆராயப்படும்.

**முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அவர்களின் பிள்ளைகள் வரவழைக்கப்பட்டு, உரிமைகள் அடிப்படையில் மாதாந்தம் ஒருதொகை பணத்தை வயோதிபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.**

முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அவர்களின் பிள்ளைகள் வரவழைக்கப்பட்டு, உரிமைகள் அடிப்படையில் மாதாந்தம் ஒரு தொகை பணத்தை வயோதிபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த முறைப்பாடுகளை வயோதிபர்கள் தவிர்ந்த ஏனையவர்களும் முன்வைக்க முடியும் - என்றார்.

இதேவேளை இதுவரையில் பெற்றோர் உள்ளிட்ட வயதானவர்களைப் பராமரிக்காத 15 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ந)

# இலங்கையிலும் போலி இந்திய நாணயத் தாள்கள்

பாகிஸ்தானில் அச்சிடப்பட்ட சுமார் 16 ஆயிரம் கோடி இந்திய ரூபாய்கள் பெறுமதியான போலி இந்திய நாணயத் தாள்கள், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

'த இந்தியன் எக்ஸ்பிரஸ்' இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்திய போலி நாணயங்கள் குறித்த தேசிய விசாரணைகள் குழுவை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் போலி நாணய அச்சிடும் முகவர்களால் அச்சிடப்பட்ட இவ்வாறான நாணயத் தாள்கள், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஹொலண்ட் போன்ற நாடுகளில் பரவியுள்ளன. இது தொடர்பில் தொடர்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ந)

## ஆலய வாகனங்கள் திருட்டு

யாழ்.வண்வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயத்தின் மரத்திலான குதிரை, இடம் ஆகிய இரண்டு வாகனங்கள் களவாடப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)




யாழ்ப்பாணம், ஜூன் 13

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ)

***

தென்மராட்சி,ஜூன் 13

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது தொடர்ச்சியாகப் பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 21 ஆம் திகதி பகல் விசேட சங்காபிஷேகம் நடைபெற்று இரவு அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் சுவாமி சாவகச்சேரி நகர் வீதியுலா வருவதுடன் திருவிழா நிறைவு பெறும். (ந-9)

## வர்த்தலைவிளான் அந்தியகால சகாயநிதிச் சங்கக் கூட்டம்

மயிலிட்டி, ஜூன் 13

மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் அந்தியகால சகாயநிதிச் சங்கத்தின் 56 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த முன்பள்ளியில், சங்கத் தலைவர் க.தர்மநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

பிரேரணைகளை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

Eed கல்வியியல் முதுமானி கற்கை

ஆசிரியர்களே, அதிபர்களே, கல்விப்பணிப்பாளரே, கல்வியியலாளர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு கல்வியில் முதுமானி கற்கை நெறியை எமது மண்ணில்
ASIA e UNIVERSITY-MALAYSIA
பல்கலைகழக பதிவுகளினூடாக ஆரம்பமாகவுள்ளது
30.06.2012 வரையில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

MEd
MASTER OF EDUCATION
தகமை BEd or PG Dip
BEd BACHELOR OF EDUCATION

APSC
49, Palaly road, Urumpirai
apscpro@hotmail.com
077 795 98 56 - 077 376 89 59
AeU asiaeuniversity
(19196)

அறை வாடகைக்கு உண்டு

யாழ் நகருக்கு அண்மையில் சகல வசதியுடனும் அறை வாடகைக்கு உண்டு. (பெண்கள் விரும்பத்தக்கது)
(19192)(6-9) தொடர்பு: 077 923 8376

சிறுநீரகம் தேவை

13 வயதுடைய சிறுவனுக்கு B+ பொசிட்டிவ் சிறுநீரகம் தேவை.
(30 வயதுக்குள்) தகுந்த சன்மானம் வழங்கப்படும். உடனடியாகத் தேவை.
தொடர்பு: 077 4474847,
077 5243254 (சி/695)(6-9-8)

வீடு, காணி விற்பனைக்கு

யாழ்.பழைய பூங்கா வீதியில் உள்ள 4 அறை வீடும், காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 0777719392
(19142)(2-6-9)

வயறிங், AC வேலைகள் செய்து கொடுக்கப்படும்

உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் AC திருத்த வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 1970395, 021 3006140
(19166)(6-9-8)

நீங்கள்
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா
இதோ உடன் நிவாரணி

"கொத்தல கிம்பட்டுவ"
KOTHALA HIMBATU PANAYA

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளலாம். உங்கள் அருகில் உள்ள சித்த ஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவியுங்கள்
சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021 2222 567
(இ/296) (45.6.7)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(18965)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் அறிவித்தல்

வதிரி கரவெட்டி எனும் முகவரியில் இயங்கி வரும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்திற்கு வதிரிச் சந்தியை அண்டிய பகுதியில் சகல வசதி களுடனான வீடு தேவைப்படுகின்றது. வீடு வாடகைக்குக் கொடுக்க விரும்புவோர் கழகத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது கழகத்தில் தற்போது ஆரம்பித்துள்ள 3 மாத கால இலவச தட்டச்சுப் பயிற்சி நெறியில் பயில விரும்பும் மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(19043)(6-9) தலைவர்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
06.05.1916

விண்ணில்
05.06.2002

**திருமதி கந்தையா அன்னம்மா**


பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் முன் வாழ்ந்த அன்னத்தாயே!
பத்து ஆண்டுகள் என்ன பல நூறு ஆண்டுகள் சென்றாலும்
மறக்க முடியுமா உங்களை

கொக்கன்
இணுவில் கிழக்கு.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

(19150) (45.9.6)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
03 ★ 10 ★ 1948

உதிர்வு
05 ★ 06 ★ 2002

அமரர் **இராசலிங்கம் அமரசோதி**

திதி : 13.06.2012 நவமி

ஆறாத்துயரில் ஆண்டுகள்
பத்து ஆன போதும்
ஆறவில்லை பிரிவின் துயரம்

H7 A, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (19173)(6-8-9)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாஷையூ
# ஆலயப்



## பதியார் புனித அந்தோனியார் வ

திருச்சபையின் புனிதர்களில் அதிகம் பிரபலமடைந்தவரும், நன்கு கௌர
பாராட்டப் பெறுபவரும், வரங்கேட்டு வருபவர்களுக்கு வரங்கள் பல அளிப்பவரும
அருளாளர் வெகு சிலரே எனின் அது மிகையாகாது. "புனிதர் அந்தோனியார் பதுவை
அகில உலகத்தின் புனிதராகவும் இருக்கின்றார்" என்ற 13 ஆம் சிங்கராயர் பாப்
போர்த்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15
மாடின் புய்யோன் தாய் தெரசா த திவேரா என்ற அழகிய தேவாம்சம் பொருந்தி
திருமுழுக்கின் போது பெற்ற திருப்பெயர் பெர்டினன்ட், சிறுவயதிலேயே தே
துறவிகள் (Friars Minor) சபையில் சேர்ந்து தேவ தொண்டாற்ற முடிவு செய்த
பெயரை அந்தோனி என மாற்றிக் கொண்டார். தமது பதினைந்தாம் வயதில் அ
கேள்விகளிலும், வேதாகம அறிவிலும் விற்பன்னராக விளங்கினார். இக்கால
கெதிராகக் கிளம்பிய கலவரத்தில் பிரான்சிஸ்கு சபைத் துறவி கள் பலர் வேத சா
நிகழ்ச்சி நம் புனிதர் உள்ளத்தில், தானும் இறைவனுக்காக மரிக்க வேண்டும் என்ற ஆ
தீர்மானித்தார். இறைவன் சித்தமோ வேறு விதமாக இருந்தது. உடல் நோயுற்ற நிலை
வீசிய கடும்புயல் காற்று நம் இளம் புனிதரை தென் இத்தாலியில் சிசிலி தீவுக்குக் கொ
அண்மை யில் உள்ள அசிசி நகரில் நடந்து கொண்டிருந்த பிரான்சிஸ்கு பொதுக்கூ
கடின தவத்தாலும், செபத்தாலும், கடின உபவாசத்தாலும் நாளொரு வண்ண
குப் பாத்திரமானார். நம்புனிதர் எவ்வளவுதான் அறிவுத்திறனை அ மறைத்
ஆண்டவர் சித்தம் கொண்டதன் காரணமாக அழகிய பிரசங்க்ம் ஒன்றை அவர் நி
பக்தியும் இவ்வாறு வெளியானதும் புனித பிரான்சிஸ்கு அவர்களே நம் புனித
பிரான்சு தேசத்தில் ஆர்ன்ஸ் மொத்த மொலிபா பூர்ஜெசிலும், இத்தாலியில்
களிலும், புனித அந்தோனியார் ஆற்றிய பணி சிறப்பு வாய்ந்தது. செல்லுமிடமெ
னர். பாவிகள் திருந்தினர். தென் பிரான்சில் இக்காலத்தில்அல்பிஜென்சர் என்ப
தவறான வழியில் விளங்கியும் விமர்சித்தும் வந்தார். அத்தவறான போதகத்தில்
மந்தைக்கு மீட்டுத்தந்த பெருமை நம் புனிதருக்குண்டு. இதனாலேயே அவரை

### அற்புத வரந்தார

தம்முடைய அடியானுடைய சேவையையும், போதகத்தையும், பற்பல அரி
யிட்டார் ஆண்டவர். பன்மொழி பேசும் வரமும்,ஒரே வேளையில் இரு இடங்
அந்தோனியார் நோய்களை க்குணமாக்கினார்,பேய்களை விரட்டினார், மாண்டவ
பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தியிருப்பினும் நற்கருணையில் ஆண்டவர் உண்
எடுத்துக்காட்டிய போது கழுதைகள் கூட வந்து மண்டியிட்டமையும் மனிதருக்
மீன்களும் கூட தண்ணீருக்கு வெளியே வந்து போதனையைக் கேட்டமையும் ச
ஒரு சமயம் இவரை முற்றாக வெறுத்த சில தீயவர்கள் நஞ்சு உணவை இ
அடையாளம் இட்டு உண்டதினால் இவருக்குத் தீங்கேதும் ஏற்படவில்லை. பெ
ஏற்கவிருந்த தம் தந்தையைக் காப்பாற்ற இறந்தவனையே மீண்டும் உயிர் பெற்றச்
செய்த புதுமைகள் எண்ணில் அடங்காத படியினாலேயே இவரை "கோடி அற்பு
அற்புதம் செய்ததினால் அவர் புனிதராகவில்லை. தன் தாழ்மை, நேர்மை, அ
ஆனமையினாலேயே புனிதரானார். இத்தகைய சிறப்பும், மேன்மை கொண்
அழைத்துக்கொண்டார். ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ திருவிழாச் சிறப்புற பிரார்


பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்
**குமார் பேக் ஹவுஸ்**
செள். பொஸ்தியான் வீதி, பாஷையூர்.

**நெல்சன் வீடியோ டிஜிற்றல் அன் போட்டோ**
அல்பங்கள் வடிவமைப்பாளர், அரங்கேற்றம், மேடை நேரடித் தொகுப்பு அஞ்சல் அனைத்து வேலைகளுக்கும்
பாழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 678 8207

**சொருபா கொம்பி**
ஒரே கூரையின்
★ சொருபா கூல்பா
★ கிருஸ்ணா எலக்ரிக்கல் &
★ ஜனவி ஸ்ருடியோ & வ
★ டோனிக்கா நகைத் தொ
★ பெனா மல்ரி மா
★ காவியா சுப்பர் மாக்
★ மிக்கேல் பார்மசி
இல. 82, ஈச்சமோட்டை வீதி, ய

**சோனியா ஜூவல்லறி**
360/5, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
360/5, Main Street, Jaffna.
**Peninsula Super Mall**
super market services
**PSM**
No. 127, Kandy Road,Kachchri, Jaffna.
077 355 2231. penijaffna@gmail.com

**ஆகாஸ் பான்சி குட்ஸ் தையல் தொழிலகம்**
ஆண்,பெண்களுக்கான ஆடைகள் குறித்த நேர காலத்தில் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

**ஜீவா பேச**
பாண், பணிஸ் வகைகள், கே
பிஸ்கற் வகைகள், ஓட
குறித்த நேரத்தில் செய்து
173, 189, கொழும்புத்து
பாண்டியன் தாழ்வு, யாழ்
T.P. 077 711 053

**லிங்கம் கூல்பார்**
சுவையான ஐஸ்கிறீம், ஐஸ்பழ வகைகள், பழரசங்கள் சுவையான உணவு வகைகள் ஓடருக்குக் குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**செல்வம் நகைத் தொழிலகம்**
22கரட் தங்க நகைகள் ஓடருக்குக் குறித்த காலத்துக்குள் செய்து தரப்படும்.
12, சென். அன்ரனிஸ், பாஷையூர் வீதி, யாழ்ப்பாணம்.

**ஐஸ்கட்டி** உற்பத்தித் தொழிற்சாலை
143, கடற்கரை வீதி, பாஷையூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 772 6874

அ
ச
(இல.3

**வெள்ளைப் பிள்ளையார்**
பல்பொருள் வாணிபம்
ஈச்சமோட்டை சந்தி, யாழ்ப்பாணம்.

**DEVIN PHARMACY**
V.Piratheepan
360/4, Main Street, Jaffna.

வெளிநாட்டில் இருந்து ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ள...
Luxon Communication
L.D.D, Local, E.mail, Fax, liminating, Scanning, CD Writing, Printing, Browsing.
60, Eachchamoddai Road, Jaffna.
T.P. 021 222 9897,Fax : 021 222 6169
E.mail: luxoncom@yahoo.com
WESTERN UNION

SIN
DEAL


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...யூர் புனித அந்தோனியார் ...் பெருவிழா 13.06.2012

## ...யார் வாழ்க்கைச் சுருக்கம்

...ன்கு கௌரவிக்கப்பட்ட வரும், உலகெங்கணும் போற்றிப் ...அளிப்பவருமான பதுவைப் புனிதர் அந்தோனி யாரைப் போன்ற ...யார் பதுவையின் பாதுகாவலர் மாத்திர மன்றி உண்மையாகவே ...கராயர் பாப்பரசரின் கூற்றில் தான் எவ்வளவு உண்மை.

...ணி மாதம் 15ஆம் நாள் பிறந்தார். புனிதரின் தந்தையார் பெயர் ... பொருந்திய அம்மணி. பிரபுக்கள் வம்சத்தில் பிறந்த புனிதர் ...திலேயே தேவ சிநேகத்தினால் உந்தப்பட்ட நம்புனிதர் சிறு ...டிவு செய்தமையில் வியப்பேதும் இல்லை. அவ் வமயம் தன் ... வயதில் அகுஸ்தீன் துறவற சபையில் சேர்ந்து சகல கல்வி, ...ர். இக்காலத்தில் மொராக்கோ தேசத்தில் கிறிஸ்தவர்களுக் ...லர் வேத சாட்சிகளாக உயிர்த்தியாகம் பண்ண நேரிட்டது. இந்த ...ம் என்ற ஆசையாக உருவெடுத்தது. தானும் மொராக்கோ செல்லத் ...யுற்ற நிலையில் இவர் ஸ்பானியா திரும்ப நேர்ந்தது. அவ்வேளை ...வுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. உடல் சற்றுத் தெளிந்ததும் அவர் ... பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது. ... வண்ணமும் பொழுதொரு மேனியுமாக ஆண்டவரின் அன்புக் ... மறைத்...ந்தாலும், அவரது மேன்மையை வெளிப்படுத்த ...றை அவர் நிகழ்த்த நேர்ந்தது. அவரது அறிவும் ஆழ்ந்த இறை ...நம் புனிதரை முக்கிய போதகராக தம் சபையில் நியமித்தார். ...தாலியில் வேர்செல்லி இறமினி, பதுவை ஆகிய பட்டணங் ...ல்லுமிடமெல்லாம் மக்கள் அவர் பேச்சைக் கேட்கத் திரண்ட ...ஹன்சர் என்பவர் கிறிஸ்தவ திருமறையின் போதனைகளைத் ...பாதகத்தில் மயங்கிய எத்தனையோ பேர்களை இறைவனின் ...யே அவரை பதிதரின் சுத்தியல் எனவும் அழைத்தனர்.

...ற்தார்

...ற்பல அரிய பெரிய அற்புதங்களைச் செய்வித்து முத்திரை ...இரு இடங்களில் காணப்படும் வரமும் பெற்றவரான புனித ...ர், மாண்டவர் மீண்டார், தொலைந்தவை கிடைத்தன. இப்படி ...வர் உண்மையாகவே பிரசன்னமாகி இருக்கிறார் என்பதை ... மனிதருக்கு புனிதர் தேவவார்த்தையைப் போதித்த போது ...டமையும் சுவையான நிகழ்ச்சிகள்.

...உணவை இவரை உண்ணச் செய்தனர். எனினும் சிலுவை ...ில்லை. பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனையை ...யிர் பெற்றச் செய்து நீதிமன்றில் தோன்றச் செய்தார். இப்படிச் ...கோடி அற்புத வரத்தார்" என பக்தர்கள் போற்றுவர்.

...நேர்மை, அன்பு முதலியவற்றால் இறைவனின் நேச தோழர் ... கொண்...புனிதரை ஆண்டவர் தமதண்டை விரைவிலேயே

## அருளாசி நிறைவாகப் பெருக ஆசிக்கின்றேன்

நான் உங்களோடு இணைந்திருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள் (யோவா 15:4)



புனிதர்களுடனான சமூக உறவை விசுவாசித்து சுமுகமான உறவை வளர்க்க விரும்பும் எவரும் இறைவனோடு இணைந்து இறை விருப்பத்தின் படி வாழ விரும்புகிறான் என்பது மகத்துவமான உண்மை.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க மதம் பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த காலத்தில் 1775ஆம் ஆண்டு புனிதருக்கு ஒரு சிற்றாலயம் பாஷையூரில் அமைக்கப்பட்டது. இந்த மண்ணின் ஆழமான விசுவாசத்தைக் காட்டுகின்றது. விசுவாசம் வளர்த்து கத்தோலிக்க மறைகாத்த கத்தோலிக்கர் எந்த மிரட்டல் களுக்கும் தண்டனைகளுக்கும் அஞ்சாமல் விசுவாசத்தைப் பகிரங்கமாக கடைப்பிடிக்கத் துணிந்தனர். அதன் அடிப்படையில் தமக்கென ஒரு சிற்றாலயத்தை அமைத்த பெருமை எம் பாஷையூர் மண்ணின் மைந்தர்களுக்கும் உரியது. மக்களும் இறை உறவுக்குள் நிலைக்க விரும்பினர். அதனால் புனிதர்களின் உறவுக்குள் நிலைத்த புனித வாழ்வை சாட்சிய வாழ்வை வாழ ஆரம்பித்தனர். ஆனி மாதம் பிறந்துவிட்டது. நாடி வந்தோர் துயர் துடைக்கும் கோடி அற்புதராம் புனித பதுவை அந்தோனியாரின் கொடி பாஷையூர் பதியில் வழமைபோல் ஏற்றப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது. இன மத வேறுபாடின்றி பக்தர் வெள்ளம் கூடிவருகின்றது. தேடி வரும் அனைவரும் தூயவரின் பரிந்துரையால் கேட்ட வரமும் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

நம் பாதுகாவலராம் தூய அந்தோனியாரின் பரிந்துரையும் இறைவனின் நல்லாசியும் நிலைத்திருக்க வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

- அருட்பணி. செ. றோய் பேர்டினன்ட், பங்குத் தந்தை பாஷையூர்.

பொங்கியெழும் கடலலைகள் வந்து கொஞ்சும்
பாஷையூரில் கோயில் கொண்ட
பதுவை முத்தே! அந்தோனி! அழகா! வணங்கி
ஐயாவுன் அடியில் வீழ்ந்தோம்!
செங்கதிரோன் காணாத வானம் போல
சூழமைவால் இருளில் கிடந்து
சொல்லிமாளா வேதனையால் பிழியப் பட்டு
சுமை சுமந்து வாழ்கின் றோமே!
அங்கலாய்ப்பும் அழுகுரலும் இங்கு விலக
எளியவர்மேல் கருணை இலையோ!
அன்னைமடி மீதுதலை வைத்துக் கலங்கி
அழும் குழந்தை நாங்கள் அப்பா!
தங்கமணித் தேரமர்ந்து வலமே வந்து
திருமுகத்தை நோக்கும் அன்பர்
துயரகற்றிப் பெருவாழ்வு காண யேசு
தேவனிடம் பரிந்து அருள்வாய்!

- மு. சிங்கராயர்




... பிரார்த்திப்போர் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

...ம்பிளக்ஸில்
...ரயின் கீழ்
...ா கூல்பார்
...ரிக்கல் & வைண்டிங்
...யோ & வீடியோ
...கைத் தொழிலகம்
... மல்ரி மால்
...ப்பர் மாக்கட்
...ல் பார்மசி
...ட வீதி, யாழ்ப்பாணம்.

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்), குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ், வடை, கட்லட், சமோஷா) என்பவற்றை சுவையாக உண்டு மகிழ
ஹொட்டல் றொலெக்ஸ்




ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2808
360, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே: 2360462

SHANTHAN GUEST HOUSE
T.P 0214920506 0771983080 0770489380
173.Colombuthurai Road Pandiyanthalvu jaffna



சாந்தன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை.

...பேக்கரி
...கைகள், கேக் வகைகள்,
...கைகள், ஓடருக்குக்
... செய்து தரப்படும்.
...ழும்புத்துறை வீதி,
...ழ்வு, யாழ்ப்பாணம்.
...7 711 0531



கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
கட்டடப் பொருள்கள் பெயின்ற் வகைகள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இல. 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான வலைகள், பொலித்தீன் நூல், கயிறு வகைகள், இயந்திரங்களுக்கான ஒயில் வகைகள், விநியோகம் செய்வதுடன் பிறிண்டிங், லெமனேற்றிங் போன்றவை யாவும் குறைந்த கட்டணத்துடன் செய்து தரப்படும்.
புனித அந்தோனியார் கோயிலடி, பாஷையூர். யாழ்ப்பாணம். T.P. 021 300 6982

அனைவரது அபிமானத்தைப் பெற்ற
OMEX HOTEL
சுத்தம், சுவை, தரம், நியாய விலை
OMEX HOTEL
(இல.372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9926.

பிருந்தா ஜூவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகள் விரும்பியபடி டிசைன்களில் ஓடருக்குச் செய்து தரப்படும்.
301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணியம் கபே
Maniam Cafe
சைவ உணவகம்
309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SINTHU ELECTRICAL
DEALERS IN ELECTRICAL, ELECTRONIC AND HARDWARE ITEMS
360/7, Main Street, Jaffna.
T.P. 021 221 9059

TEMEY STORES
2nd CROSS STREET,
PASAIYOUR.

தேவி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

சரவணபவன்
அரைக்கும் ஆலை
31, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திவிநெகும திட்டத்தின் கீழ் கைவினைப் பொருள் பயிற்சி

நவாலி,ஜூன் 13

திவிநெகும திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கைவினைப் பொருள்கள் பயிற்சிநெறி கடந்த 7 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பயிற்சிநெறியில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.


கணினி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம் **Diploma in Computer Courses**

**மீண்டும் மாபெரும் அதிரடிக் கட்டணக்கழிவு**

Duration 3months,4months
Batch I 13-06-2012
Batch II 15-06-2012
Batch III 16-06-2012
Batch IV 17-06-2012
(Time:-9am or 3pm)

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail .

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

**பாடநெறிக்கான கட்டணம் 1000/= மட்டுமே**

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun) 11.30 am or (Tue+Thu) 9.30 am
பதிவுகளுக்கு முந்துங்கள்


## கண்ணீர்க் காணிக்கை



எமது நிறுவன களஞ்சியக் காப்பாளர் இ.முரளிராஜ் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்
**சி.இரத்தினசபாபதி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

S-Lon, PE+, Kevilton அலுவலர்கள்.
Lukshmee Agency,
Lukshmee Organization,
முகாமையாளர், ஊழியர்கள்.

(சி/000)(2-7-6)

## வணிகப் போட்டி

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் வணிகத் துறைப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கிடையே வணிகப் போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

வணிகத் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவென நடத்தப்படும் இந்தப் போட்டியில் பேச்சு, கட்டுரை, குறுவினாவிடைப் போட்டிகள் நடத்தப்படும்.

தரம் 10 தொடக்கம், க.பொ.த உயர்தர வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கே மூன்று பிரிவாக இந்தப் போட்டி நடத்தப்பட ஏற்பாடகியுள்ளது. (வ-8)

## யோகா பயிற்சி நெறி

வேதாத்திரி மகரிஷியினால் வடிவமைக்கப்பட்ட மனவளக்கலை யோகா பயிற்சிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின.

தொடர்ந்து எதிர் வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை வரை இந்தப் பயிற்சி பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள சத்துணவுக் கூடத்தில் நடைபெறவுள்ளது. (வ-8)


# வெல்லுங்கள் பரிசு

சண்மைக்ரோ சிஸ்ரம் நிறுவனத்தை வாங்கிய நிறுவனம்?
a.மைக்ரோசொப்ற் b.ஓராக்கிள் c.எச்.பி d.ஐ.பி.எம்.

உங்கள் விடைகளை MCAI12 a/b/c/d _<your Full name>, <address>,<E mail> என்பவற்றை type செய்து 0775520940 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி வைக்கவும்.

**பரிசு விவரங்கள்**

1ம் பரிசு : Computer (Without Monitor) 2ம் பரிசு : 17" LCD Monitor
3ம் பரிசு : 20 பேருக்கு தலா ஒவ்வொருவருக்கும் ருபா 1,000 கணினி பொருட்கள்.
ஆறுதல் பரிசுகள்.

1. 200 பேருக்கு Computer Engineering-USA கற்கைநெறியை கற்பதற்கான Rs.20,000 பெறுமதியான Vouchers
2. 200 பேருக்கு CIMA-UK கற்கைநெறியை கற்பதற்கான Rs.10,000 பெறுமதியான Vouchers.
3. 100 பேருக்கு BIT DEGREE( University of Colombo) Full Semester 2 கற்கைநெறி கட்டண Vouchers.
4. 500 பேருக்கு 5 Diploma கற்கைநெறிகளை கற்கைநெறிக் கட்டணம் இன்றி கற்பதற்கான Vouchers

**பரிசு விபரங்கள் SMS, Email மூலமாக அறிவிக்கப்படும்**

வெல்லுங்கள் பரிசு போட்டிக்கு யாரும் பங்குபற்றலாம், சேர்த்துக்கொள்ளப்படுவோர் 31.07 2012 க்கு முன்னர் கல்வியங்காட்டில் உள்ள MCAI CAMPUS ல் ஏதாவது கற்கைநெறிக்கு பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

பரிசுகளை வழங்குவோர் கல்வியங்காட்டில் **MCAI CAMPUS** Supported by Jaffna Computer Society
243,Adiyapatham Road Bus Route 750 / 751
Qualified Lectures panel, 12 Years Experience


# மரண அறிவித்தல்

## Dr. சிவப்பிரகாசம் சிறீகரன் (M.D.அமெரிக்கா)



தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சிறீகரன் கடந்த (08.06.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் -இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், Dr. கலாவல்லியின் (M.D.அமெரிக்கா) அன்புக் கணவரும், Dr. அரவிந்தன் (M.D. அமெரிக்கா), யசோதா (ஆங்கில இலக்கிய விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கு. மனோன்மணிதேவி, ம.அரியமலர் (கனடா), ந. சுதமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், க.குமாரசாமி, C.மகேசரட்ணம் (கனடா), M. நந்தபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வி குமாரசாமி கீதாஞ்சலியின் (அமெரிக்கா) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2012) வியாழக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. (Mrs) K. Sriharan
3007 went worlh Court.
Mur frusporo
Tennesse 37127
USA
T.P. 0016 1590 46428

தகவல்:
குமாரசாமி
குடும்பத்தினர்

(சி/582) (45.6.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் தஞ்சமடைய புதிய வழி கண்டுபிடித்தனர் இலங்கையர்கள்

**கிறிஸ்மஸ் தீவு, அஸ்மோர், ஜாவா மற்றும் கிழக்கு திமோர் போன்ற பகுதிகளின் ஊடாகவே இதுவரையில் அகதிகள் அனுப்பப்பட்டு வந்தனர்.**

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் ஆஸ்திரேலியா செல்லும் இலங்கையர்கள் தற்போது ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவுகளை தமது புதிய மார்க்கமாக பயன்படுத்துகின்றனர் என்று ஆஸ்திரேலிய பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த இரண்டு வார காலப்பகுதியில் படகுகள் மூலம் 135 இலங்கை அகதிகள் கொக்கோஸ் தீவு வழியூடாக ஆஸ்திரேலியா சென்றுள்ளனர். மூன்று படகுகள் மூலம் அவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இதுவரையில் கொக்கோஸ் தீவுக்கு ஆள்கடத்தல் காரர்களால் அகதிகள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக கிறிஸ்மஸ் தீவு, அஸ்மோர், ஜாவா மற்றும் கிழக்கு திமோர் போன்ற பகுதிகளின் ஊடாகவே இதுவரையில் அகதிகள் அனுப்பப்பட்டு வந்தனர்.

இந்தநிலையில் தற்போது கொக்கோஸ் தீவை ஆள் கடத்தலின் இறுதித் தளமாக பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சிப்பட்டறை

தென்மராட்சி, ஜூன் 13

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் கிராம அலுவலர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினரால் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

மாவட்டத்தைச் சேர்ந்த 435 கிராம அலுவலர்களும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அனைத்து வெளிக்கள உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

(வ-9)



வலி தென்.மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நீண்டகாலம் சேவைபுரிந்து வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றலாகிச் சென்றவர்களுக்கும் ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கும் பிரியாவிடை நிகழ்வும் பாராட்டு நிகழ்வும் கடந்த 8 ஆம் திகதி செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. (வ-100)

## தென்மராட்சி மாணவர்களின் கவனத்துக்கு

தென்மராட்சி, ஜூன் 13

வவுனியாவில் நடைபெற்று வரும் விளையாட்டு விழா மற்றும் மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றும் தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள், உரிய ஆவணங்களுடன் பாடசாலை கடிதத் தலைப்பில் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தையும் கொண்டு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-9)

## பலவந்தமாக அரச அலுவலர்கள் விவசாயச் செய்கைக்கு

வடமாகாண காணித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விவசாயச் செய்கை நடவடிக்கைக்கு காணித் திணைக்கள அரச ஊழியர்கள் பலவந்தமாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்று ஊழியர்களினால் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரியாலை நாகபடுவான் குடியேற்றப் பகுதியில் சுமார் 20 ஏக்கர் காணியில் மிளகாய் செய்கை மேற்கொள்ளும் முகமாக அரச ஊழியர்களை (அலுவலர்கள்) பயன்படுத்தி காடுகள் அழிக்கப்படுவதாகவும் காடுகள் அழிப்புப் பணிக்கு குடியேற்ற அலுவல்கள் நில அளவை உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், காணி அபிவிருத்தி அலுவலர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

குறிப்பிட்ட ஊழியர்கள் தங்குவதற்கு உரிய இடமில்லாமலும் உணவு வசதிகள் இல்லாமலும் மலசல கூட வசதிகள் கூட இல்லாமல் பெரும் துன்பங்களை எதிர் நோக்கி வருகின்றனர். அத்துடன் தாம் அரச அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களா அன்றி கூலித்தொழிலாளிகளாக நியமனம் செய்யப்பட்டவர்களா என்ற கேள்வியையும் பலரும் எழுப்புகின்றனர்.

காடுகள் வெட்டித்திருத்தும் பணிகளுக்கு உரிய கூலித் தொழிலாளர்களை நியமனம் செய்யாது அரச ஊழியர்களை உயர் அதிகாரிகள் அடாத்தான முறையில் மனித உரிமையை மீறி அதிகாரத்துடன் இத்தகைய தேவைகளைச் செய்விக்க முன் நிற்பது தமது மீள் நியமனத்தை அரசிடம் பெற்றுக் கொள்ளவே என்றும் பாதிக்கப்படும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ-86)

## கொழும்பிலிருந்து சென்னைக்கு தங்கத்தைக் கடத்தியவர் கைது

கொழும்பில் இருந்து சென்னைக்கு 200 கிராம் தங்க நகை கடத்திவந்த திருச்சி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து புறப்பட்ட விமானம் நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தைச் சென்றடைந்தது.

இதில் வந்த பயணிகளை விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது திருச்சியைச் சேர்ந்த தியாகராஜன் (வயது 35) என்பவரைச் சந்தேகத்தின் பேரில் அழைத்து விசாரித்தனர்.

விசாரணையின்போது தியாகராஜன் சுங்க வரி செலுத்தும் வகையில் எந்த வித பொருள்களும் இல்லை என்று குறிப்பிட்டார்.

அதிகாரிகளிடம் அவர் முன்னுக்கு பின் முரணாகப் பேசியதால் அதிகாரிகள் அவரிடம் சோதனை போட்டனர். அப்போது அவரிடம் ரூ.6 லட்சம் மதிப்புள்ள 200 கிராம் நகைகள் இருந்தன. அவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(வ)

# புதுமைகள் புரியும் புனித அந்தோனியார்

■ டாக்டர்.அ. பிறிற்ரோ டக்ளஸ்

போர்த்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு புதுமைகள் பல புரியும் அருள் பெற்ற புனித அந்தோனியார் இப்பூவுலகில் பிறந்தார். இவரின் தாயார் தெரசா, தந்தை மடுத்தீன் ஆவர். இவர்கள் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தோர்.

இவர் சிறுவயது முதல் இறை பக்தியும் விசுவாசமும் கொண்டவராக விளங்கினார். தான் வேத சாட்சியாக வேண்டும் எனும் எண்ணத்தினால், பிரான்சிஸ்கன் துறவற சபையில் துறவியாகச் சேர்ந்தார், இதனால் திருமுழுக்கினால் பெற்ற பேர்டினன் என்ற பெயரை மாற்றி அந்தோனி என அமைத்து அந்தோனியாரானார்.

அந்தோனியார் இறைவனை நோக்கிய செபத்தாலும் கடின தவத்தின் வல்லமையாலும் இறை அன்புக்குப் பாத்திரமானார். இதனால் புதுமைகள் பல புரியும் அருள்களையே இறைவனிடமிருந்து அதிகமாகப் பெற்றுக் கொண்டார்.

புனிதரின் ஆன்மிக சொற்பொழிவுகள் அக்கால மக்கள் தவறான வாழ்க்கை முறைகளை விட்டு உள்ளார்ந்த ஆனந்தத்தையும் அற்புதத்தையும் அடைய வழி செய்ததால் மக்கள் பாவ வாழ்க்கையை விட்டு இறைவனை நாடியதனால் புனிதர் தலைசிறந்த போதகரானார்.

வேத நூல்களை வாசிப்பதிலும் அதில் பிரசங்கம் நிகழ்த்துவதிலும் விற்பன்னராக விளங்கிய வேளை அற்புதரின் கரங்களிலுள்ள வேதாகம புத்தகத்தின் மீது யேசு குழந்தை வடிவில் அமர பாக்கியம் பெற்றார்.

இறைவனின் பிரசன்னம் தேவ நற்கருணையில் எழுந்தருள்வதை கழுதை மண்டியிடுவதன் மூலம் மக்களுக்கு உணர்த்தினார். காணாமற்போய் தொலைந்தவைகளை கண்டு அடையச் செய்வதில் வல்லமை பெற்றவர். சாத்தான்களை விரட்டிக் கலைப்பவர். நோயாளரில் அன்பு கொண்டவர். தீராத உடல், உள நோய்களைக் குணமாக்கி வந்தார்.

இப்புனிதர் தனது 36 ஆவது வயதில் 1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி இப்பூவுலகை விட்டு விண்ணுலகு சென்றார். புனிதரின் திரு உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட நாள் செவ்வாய்க் கிழமையாகும். இதனால் இந்நாளே புனிதருக்கு உரித்தானது.

தனது வாழ்நாளிலே புதுமைகள் பல புரிந்த புனிதர் தனது மரணத்தின் பின்னரும் புதுமைகள் புரிந்தமை கண்டு வியப்படைந்தவர்கள் 31 ஆண்டுகளின் பின் அவருடைய கல்லறையைத் திறந்து பார்த்தபொழுது அவருடைய 'நாக்கு' அழியாமல் காணப்பட்டது. இதனால் 'நா' அழியா வரம் பெற்றவராக விளங்கினார்.

பாஷையூர், புனித அந்தோனியார் ஆலயம் கரையோரப் பகுதியில் அமைந்திருப்பதுடன் கத்தோலிக்க மக்களை செறிவாகவும் கொண்டுள்ளது. தமது பாதுகாவலராக புனித அந்தோனியாரை கொண்ட இம்மக்கள் தமது கடற்றொழிலை பாதுகாக்கும் முகமாக கடல் நடுவே அந்தோனியின் திருஉருவத்தினை அமைத்து தமது தொழில் துறைகளையும் பாதுகாத்து வருகின்றனர்.

இவர்கள் வருடந்தோறும் நவநாள் திருப்பலிகளுடன் புனிதரின் திருவிழாவை ஜூன் 13 ஆம் திகதி கொண்டாடி வருகின்றனர் அன்றைய தினம் தேர்ப்பவனியும் வலம் வருவதைக் காணலாம்.



இறை வழிபாடுகளில் புனிதர்களின் பரிந்துரைகளை பக்தர்கள் நாடிவருவது திருச்சபையில் நிலவி வரும் கத்தோலிக்கப் பாரம்பரியமாகும்.

போருக்குப் பின்னரான சமூக கலாசார மாற்றங்களினால் குடும்பப்பிரிவுகள், களவு, கொலை, கொள்ளை, கருச்சிதைவுகள், தற்கொலைகள், புகைபிடித்தல், மதுபோதைப் பொருள் பாவனைகளின் தீவிரம், குழுச் சண்டைகள் என அதிகரித்து உள சமூக ஆதரவு அற்ற நிலைகள் தோன்றியுள்ளன ஆன்மிகம் சார்ந்த சமூகத்தின் கட்டுக்கோப்பு ஒழுக்கமும் சிதைவடைந்து விட்டன.

அளவுக்கு அதிகமான சுகங்கள் இன்று உலகத்தில் கிடைக்கின்றது அதனால் அளவிற்கு அதிகமான துக்கத்தையும் அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ இல்லையோ, பொருள் சேர்ப்பதில் முக்கியத்துவம் கொடுக்கிறோம். பொருளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இறை அருளுக்குக் கொடுக்காமல் போய் விட்டமையாலே துக்கத்தை அடைகின்றோம்.

வாழ்க்கையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மறை அறிவுரைகளைக் கேட்க மறுப்பதும் அதனைச் சொல்பவர்களை விலக்கி விடுபவர்களாகவும் உள்ளோம். வாழ்க்கையை அர்த்தமானதாக மாற்றி வாழ வேண்டுமாயின் மறை உரைகளை சிறிதளவேனும் சிந்தித்து அதன் உண்மைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

போதனைகள், மறை, அறிவு முறைகளினூடாக நல்ல மன அமைப்பை உருவாக்கிக் கொள்ள முடியும். இதனால் தவறான வாழ்க்கை முறைகளை மறந்து விடுவதுடன் எம் புனிதரை பின்பற்றி அந்த ஆனந்தமான அற்புதமான வாழ்வை அமைத்து கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 பேருடன் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற மேலும் இரு படகுகள் இடைமறிப்பு

**இந்த மாதத்தில் மட்டும் ஆஸ்திரேலியாவுக்கு வந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை 717 ஆக அதிகரித்திருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.**

சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் 150 பேருடன் பயணித்த மேலும் இரு படகுகள் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் இடைமறிக்கப்பட்டுள்ளன. இவை இந்த மாதத்தில் இடைமறிக்கப்பட்ட 10 ஆவது மற்றும் 11 ஆவது படகுகள் என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதலாவது படகு 112 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் கடந்த சனிக்கிழமை ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினரால் இடைமறிக்கப்பட்டது. மற்றைய படகு 38 பேருடன் நேற்று முன்தினம் இடைமறிக்கப்பட்டது என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இரண்டு படகுகளும் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தப் படகுகளின் வருகையுடன் இந்த மாதத்தில் மட்டும் ஆஸ்திரேலியாவுக்கு வந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை 717 ஆக அதிகரித்திருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு வரும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் முகாமைத்துவத்துக்கென அந்த நாட்டு அரசு வரவு-செலவுத் திட்டத்தில் 425 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் 450 பேர் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டும் ஆஸ்திரேலிய ஊடகங்கள், எனினும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது என்று தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் மட்டும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் 55 படகுகள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்துள்ளனர். இதில் 50 படகுகள் ஆஸ்திரேலிய அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்திருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை ஆஸ்திரேலியாவின் கொக்கோ தீவுக்கு அண்மையில் பாறையுடன் மோதி விபத்துக்குள்ளான படகிலிருந்து மீட்கப்பட்ட 32 பேரும் இலங்கையர்கள் என்று ஆஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1976ஆம் ஆண்டு முதல் கடந்த 36 வருடங்களில் 35 ஆயிரத்துக்கும் அதிகமான புகலிடக்கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர் என்று அந்நாட்டின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந)

## ஆண்டுக்கு 18, 600 பவுண்ஸ் சம்பாதித்தால் விரும்பிய வெளிநாட்டவரை கைபிடிக்கலாம்

### பிரிட்டனில் புதிய குடிவரவுச் சட்டம்

ஐரோப்பியர் அல்லாத வெளிநாட்டவரைத் திருமணம் செய்யும் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டுக்கு 18,600 பவுண்ஸ்களைச் சம்பாதிக்க வேண்டும். அப்போதுதான் மனைவி அல்லது கணவனை பிரிட்டனுக்கு அழைத்துவர அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஜூலை 9ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது என்று பிரிட்டிஷ் உள்துறைச் செயலர் தெரசா தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டிஷ்காரர்கள் பலர் இந்தியா உட்படப் பல வெளிநாட்டவரைத் திருமணம் செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. அவர்கள் தங்கள் மனைவி அல்லது கணவனை பிரிட்டனுக்கு அழைத்துவந்து குடியுரிமை பெறுகின்றனர். ஆனால், பிரிட்டன் குடியுரிமை பெறுவதற்காகப் பெண்களைக் கடத்துவதும், போலி திருமணங்களும், குடும்ப விசா பெறுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரிட்டனுக்கு வரும் வெளிநாட்டவருக்கு ஆங்கில மொழியும் தெரியவில்லை. இதனால் சமுதாயத்தில் மற்றவர்களுடன் சகஜமாகப் பழக முடிவதில்லை. மேலும், சரியான வருமானம் இல்லாமல் பிரிட்டனுக்கு வந்து பலர் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் நாட்டுக்குப் பாரமாக இருக்கின்றனர். இது போன்ற பல பிரச்சினைகளைச் சமாளிக்க குடியுரிமை வழங்கும் நடைமுறையைப் பிரிட்டிஷ் அரசு கடுமையாக்கி உள்ளது.

அதன்படி, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளைத் தவிர்த்து ஏனைய வெளிநாட்டுபெண்அல்லது ஆணைத் திருமணம் செய்யும் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 18,600 பவுண்ஸ்களைச் சம்பாதிக்க வேண்டும். 3குழந்தைகள் இருந்தால், 27,200 பவுண்ஸ்கள் வருமானம் இருக்க வேண்டும். அப்போதுதான் வெளிநாட்டு மனைவிஅல்லது கணவனுக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது-என்றார். (ந)

## கர்நாடக சங்கீத பாட ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வடமராட்சி கல்விப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கர்நாடக சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை புலோலி மெ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (ந-8)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கல்வி அமைச்சினால் யாழ். வலயத்தில் குறிப்பிட்ட சில பாடசாலைகளில் விசேட கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பாடசாலைகளில் 5-14 வயது வரையான விசேட தேவை உடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அந்தப் பாடசாலைகளாவன:-

யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலயம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி, யா/ திருக்குடும்ப கன்னியர்மடம், ஊரெழு கணேச வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு குறித்த பாடசாலை அதிபர்களுடனோ அல்லது யாழ் வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகருடனோ அல்லது முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருடனோ பெற்றோர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)


# தேவை

வீடியோ எடிட்டிங் தெரிந்த ஆள் தேவை (ஆண்)

தொடர்பு:- 0779515187

(19214)(2-6-9)



### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2012 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் ஆட்டிறைச்சிக்கடையை 2012ஆம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 20.06.2012 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணி வரை சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தலைவர், சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) இணைப் பிரதியை பிராந்திய உள்ராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி நகரசபை அலுவலகத்தில் 19.06.2012 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியை 25.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**2012 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடைக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை இல.02 | 300,000.00 | 3000.00 | 1,000.00 |

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி
13.06.2012.

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

(சி/9324) (2-6-9)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 28.02.1937



இறப்பு 14.05.2012

திருமதி

# இராசமணி செல்வராசா

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டம், இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட இராசமணி செல்வராசா கடந்த (14.05.2012) திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடுத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.06.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கொய்யாத் தோட்டம்,
இருபாலை.

(19210) (45.9.6)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

அலுவலக எழுதுநர், அலுவலக உதவியாளர்
தரம் 01-05 -கணித ஆசிரியர்
தரம் 6,7,8 - சமய ஆசிரியர்
**மதுரம் இன்ஸ்ரிரியூட்**
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.
தொடர்பு:- 0779122918

(19226)

## காணி விற்பனைக்கு

பூநகரி பிரதான வீதியில் 13 ஏக்கர் 38 பேர்ச் காணி விற்பனைக் குண்டு. பகுதி பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்புக்கு:- 0779689043

(19225)



Computer Engineer-USA



## கொழும்பு பல்கலைக்கழக BIT முதலாம் வருட பெறுபேறுகள்

சென்ற வாரம் வெளியான கொழும்பு பல்கலைக்கழக **BIT-Degree** 1ம் ஆண்டு பெறுபேறுகளில் **MCS** நிறுவன மாணவர்கள் தொடர்ந்தும் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர். R.சிதம்பரநாதன்(A,3B) T.பகீரதன்(A,2B,C) ஆகிய மாணவர்கள் **FIT** கற்கை நெறிமூலம் தகைமை பெற்றோர் ஆவர்.

நீங்கள் A/L 3 பாடங்களில் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா? அல்லது A/L பாடங்களில் சித்தியடையவில்லையா? **MCS** நிறுவனத்தில் **BIT + Computer Engineering-USA** இல் இணைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆகுங்கள். மேலதிக விபரங்களிற்கு 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCSITCAMPUS** ஐ நாடவும்.தொலைபேசி இலக்கம் 772395895

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Mr.R.Chithamparanathan | A 3B | Mr.N.Senthuran | 4B | Mr.T.Hapeerathan | B 3C | Miss JegathaB | 3C |
| Mr.T.Bakeerathan | A 2BC | R.Asvini | 3BC | Miss.J.Sabaratnam | 2B C D | Miss.D.Singarajah | B3C |
| Miss.P.Kaitheki | A2BC | Miss.S.Kavitha | 3B C | Miss.J.Thayalini | 2B 2C | Mr.M.Janahan | B3C |
| Mr.S.Theivamainthan | 4B | Mr.S.Sanijivkumar | 2B 2C | Miss.V.Sakthidevi | B 3C | Mr.R.Raguraam | 4C |
| Miss.T.Sayanthini | 4B | Miss Y.Nadarajah | 2B 2C | Mr.G. S Jeyadevan | B 3C | MissB.Priyanka | 4C |



MTA-USA



## மரண அறிவித்தல்

### கோவிந்தி கந்தையா பொன்னம்பலம்
(ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர்)



விளானை, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தி கந்தையா பொன்னம்பலம் நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி சி.கலாநிதி (ஆசிரியை, யா/யாழ்ற்ரன் கல்லூரி), பொ.காந்தரூபன் (லண்டன்), திருமதி ர.மாதுமை (விவசாய போதனாசிரியர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வே.சிவநேசன் (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), திருமதி கா.திரிபுரசுந்தரி (லண்டன்), ந.ரதீஸ்வரன் (விவசாய அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற டிலானி மற்றும் சங்கவி, கஜானி, வைஷ்ணவி, சயந்தவி, கிஷானி, கஜரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசம்மா (இளைப்பாறிய அதிபர்), சுந்தரம்மா, பரமேஸ்வரி (இளைப்பாறிய மருந்தாளர்) ஆகியோரின் சகோதரனும், பூரணம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இராசம்மா, காலஞ்சென்றவர்களான இராசையா, சண்முகம் மற்றும் தில்லையம்பலம் (இளைப்பாறிய அதிபர்), கொய்சா (இளைப்பாறிய மருந்தாளர்), தம்பிராசா, சுந்தரலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2012) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை,
களபூமி, காரைநகர். (19222)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெயர் மாற்றம்

கந்தசாமி நாகலெட்சுமி ஆகிய எனது பெயரை மாற்றியமைத்து, இன்றுமுதல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கந்தசாமி நவரெத்தினலீலா என்றே பயன்படுத்துவேன் என்று இத்தால் அறியத்தருகிறேன்.

இல.141, 1ஆவது பிரதான வீதி, லட்சுமி நகர் (விரிவு), போரூர், சென்னை 600 116.

(19233)

## வாகனம் விற்பனைக்கு

1. WP-GN XXXX
   Model: Hiace Crew Cab
   Colour: White
   டீசல் வாகனம்
2. WP-JI XXXX
   Model: KG-LH 172V
   Toyata Hiace
   Colour: White
   டீசல் வாகனம்

விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0776116054**

(19229)

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் அகமகிழ் வாழ்த்து



செல்வன் செந்தில்நாதன் பிரசாந்தன்
2 ஆம் இடம் - தனி நடனம்
யாழ்ற்றன் கல்லூரி



செல்வி பேரின்பராசா கவிதா
4 ஆம் இடம் - தனிநடனம்
யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம்

எமது கலாமன்ற நடனத்துறை மாணவர்கள் மாகாணமட்ட தமிழ்த்தின தனிநடனப் போட்டியில் 2ஆம், 4 ஆம் இடங்களைப் பெற்றமையையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல வெற்றிகளைப் பெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.

கிழவன் காடு கலா மன்றம்,
காரைநகர். (19224)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது அலுவலக குடும்பநல சேவையாளர் செல்வி வ.பத்மநந்தினி அவர்களின் அன்புச் சகோதரி

**செல்வி வ. பாக்கியவதனி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
(சீ/2343) (6,10) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்

## சிவசம்பு இரத்தினசபாபதி (இணுவில்)



யாழ்ப்பாணம், இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு இரத்தினசபாபதி நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - இரத்தினம் தம்பதியரின் மூத்தபுதல்வனும், யோகராணியின் அன்புக்கணவரும், செல்வராணி, பத்மராணி (லண்டன்), தணிகாசலம் (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கார்த்திகேசு, ஞானரத்தினம் (லண்டன்), கலைச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும், வசந்தராஜ் (லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி, ஆண்டிறுதி மாணவன்), மதனராஜ் (பிரான்ஸ்), முரளிராஜ் (S.K. Lukshmee Agency), காயத்திரி, தனராஜ், சிந்துஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், வைத்தியர் பாமினி (தெல்லிப்பழை CMO), செல்லக்குமார் (V.K.S.அரிசி ஆலை) ஆகியோரின் அன்புமாமனும், கேதாரன், தனாதனன், கவிநயா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2012) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் தெற்கு,**
**பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி.**

(சி/587)(6-8-14)

**தகவல்: இ. முரளிராஜ் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ் சர்வதேசப் பாடசாலைகள் அணியைச் சேர்ந்த 19 வயதுப் பெண்கள் பிரிவினருக்கும், மன்னார் மாவட்ட 19 வயதுப் பெண்கள் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட இரு அணி வீராங்கனைகளும் போட்டியின் பின்னர் ஒன்றாக இணைந்து மகிழ்ந்த காட்சி. (23)

# ஜொலித்தார் மணிவண்ணன் ஜொலிஸ்ராருக்கு வெற்றி

பண்டத்தரிப்பு, ஜூன் 13

மணிவண்ணனின் அதிரடி கை கொடுக்க ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம், வட்டுக் கோட்டை ஓல்ட்கோட்ஸ் விளையாட்டுக்கழகத்தை இலகுவாக வீழ்த்தி "டொனால்ட் கணேசகுமார்" ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுத்தொடரின் அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்று வட்டுக்கோட்டை ஓல்ட்கோட்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஓல்ட் கோட்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள், ஜொலிஸ்ராரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஆரம்பம் முதலே தடுமாறத் தொடங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் புருசோபனன் மூன்று பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடித்து அதிரடியாக ஆட்டத்தை தொடக்கியிருந்தாலும் 19 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோட்ஸ் அணியினரின் இலக்குகள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின. எனினும் நிதானமான ஆட்டத்தை வெளிப் படுத்திய நிரோஜன் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஏனைய வீரர்கள் யாரும் சோபிக்காத நிலையில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோட்ஸ் அணி 31.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 120 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ஜொலிஸ்ரார் அணி சார்பில் பந்து வீசிய உமாதரன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சஞ்சீவ், பிரியதர்சன், ஜனார்த்தனன், ஆகியோர் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

**ஓல்ட்கோட்ஸ் அணியினர் வீசிய பந்துகள் அடிக்கடி எல்லைக்கோட்டை கடந்த வண்ணம் இருந்தன. மணி வண்ணன் 10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.**

121 என்ற இலகுவான ஓட்ட இலக்கை நோக்கி பதிலுக்கு ஆடத்தொடங்கிய ஜொலிஸ்ரார் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மணிவண்ணன் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஓல்ட்கோட்ஸ் அணியினர் வீசிய பந்துகள் அடிக்கடி எல்லைக்கோட்டை கடந்த வண்ணம் இருந்தன. மணி வண்ணன் 10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நவயுகன் 26 ஓட்டங்களையும், சஜிகன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 12.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஜொலிஸ்ரார் அணி இலக்கினை அடைந்து 7 இலக்குகளால் அபார வெற்றியினைப் பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக மணி வண்ணன் தெரிவு செய்யப் பட்டார். (ங-130)

## மின்னொளியில் கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 13

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு ஆகியவற்றை முன்னிட்டு நடத்தப்படும் வட மாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர் வரும் சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 30 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

## இன்றைய ஆட்டம்

பண்டத்தரிப்பு, ஜூன்13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே. குமாரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட் டச் சுற்றுத்தொடரின் மூன்றாம் சுற்றில் இன்று புதன் கிழமை பி.ப 4 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ங-130)

## வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டி

# இரண்டாம் கட்டம் மன்னாரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான பெரு விளையாட்டுப் போட்டிகள் மூன்று கட்டங்களாக நடை பெற்று வருகின்றன. அதன் இரண்டாம் கட்டப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவு மற்றும் பெண்களுக்கான 19 வயதுப் பிரிவு ஆகியோருக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியிலும், 15 வயதுப் பிரிவு ஆண்கள், 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் 15 ஆம் , 16 ஆம், 17 ஆம் திகதிகளில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியிலும், 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாருக்குமான எல்லே போட்டிகள் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மன்னார் முருங்கன் வித்தியாலயத்திலும் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் 18 ஆம், 19ஆம், 20 ஆம் திகதிகளில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலும், 15 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ங-23)

# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மீண்டும் ஹொக்கி சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 13

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி நடப்பாண்டுக்கான மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வவுனியா தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

வடமாகாணப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் ஹொக்கியில் 2010 ஆம் ஆண்டு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் 2011 ஆம் ஆண்டு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மாகாணச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதனால் இரு அணிகளும் உத் வேகத்துடன் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் தமது ஆற்றல்களை வெளிப் படுத்தி விளையாடிய போதிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு அபாரமான கோல் ஒன்றை அடித்தனர்

ஆட்டம் இதனால் சூடு பிடித்துக் கொண்டது. பதிலுக்கு கோல் அடிக்கும் முயற்சியில் யூனியன் கல்லூரி வீரர்கள் தீவிரமாக இறங்கினர். ஆனால் அவர்களின் முயற்சிகளை தமது திறமையான எதிர்ப்பாட்டத்தின் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரியினர் தடுத்து நிறுத்தினர்.

போட்டி நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி 1 :0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரியை வெற்றி கொண்டு இரண்டாவது தடவையாகவும் மாகாண சம்பியனாகத் தெரிவானது. (ங-86)

## குமாரையா ஞாபகார்த்தக் கிண்ண இரண்டாம் சுற்று ஆட்டத்தில்

# பல்கலை அணி வென்றது

பண்டத்தரிப்பு, ஜூன் 13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட உதைபந் தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே.குமாரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இரண்டாம் சுற்றின் இரு போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆகிய தினங்களில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

முதல் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதிக்கொண்டன. இந்தப்போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது. எனினும் பல்கலைக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. அதில் பல்கலைக்கழக சார்பாக ஞானரூபன் 2 கோல்களையும், சிறின் 1 கோலினையும் அடித்தனர். பதிலுக்குக் குருநகர் பாடும்மீன் அணி சார்பில் ரஜீவ்தரன், ஜெயரட்ணம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

மற்றைய ஆட்டத்தில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியும், ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சரிசமமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தன. போட்டி நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களை அடித்திருந்ததால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் போட்டியின் முடிவு தீர்மானிக்கப்பட்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ங-130)

# புனித ஹென்றியரசர் கல்லூரி இறுதியாட்டத்துக்குத் தகுதி

பண்டத்தரிப்பு, ஜூன் 13

புனித ஹென்றியரசர் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி பாடசாலைகளுக்கிடையிலான மகாண மட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. முன்னதாக காலிறுதிப் போட்டியில் மன்னார் அரிப்புத்துறை றோ.க.த.க. பாடசாலை அணியை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்த ஹென்றியரசர் கல்லூரி அணி அரையிறுதியில் மன்னார்முருங்கன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணியினர் முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றனர். எனினும் இதனால் துவண்டு போகாமல் வீறுகொண்டு எழுந்த புனித ஹென்றியரசர் வீரர்கள் துடிப்புடன் விளையாடத் தொடங்கி 3 கோல்களைத் தொடர்ச்சியாக அடித்து 3 : 1 என்ற கணக்கில் முருங்கன் மகாவித்தியாலய அணியை வென்று மாகாண மட்ட இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றனர். ஹென்றியரசர் கல்லூரி சார்பில் சுகந்தன் 2 கோல்களையும், சுமன் 1 கோலினையும் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்திருந்தனர். இன்று நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(ங-130)

# யாழ்.மாவட்ட தாச்சிப் போட்டி காளியம்பாள் இறுதிக்கு தகுதி

வலி.வடக்கு, ஜூன் 13

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று,தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கைதடி குமாரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் உடுவில் சுப்பர்கிங் விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் முதல் பாதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 3:2 பழங்கள் என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் களத்தில் கடும் ஆக்ரோசத்துடன் களமிறங்கிய போதிலும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மீண்டும் அபாரமாக அடி 4:1 பழங்கள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது. போட்டி நிறைவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 7:4 பழங்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.(ங-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலக்கியது குரோஷியா



ஆக்ரோஷமாய் மோதும் குரோஷியா - அயர்லாந்து வீரர்கள்.



போஸ்னான் நகரில் நடந்த இந்த ஆட்டத்தை காண 40 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

ஐரோப்பிய கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் 'சி' பிரிவில் நடந்த ஆட்டத்தில் குரோஷியா, அயர்லாந்து அணிகள் மோதிக் கொண்டன. போஸ்னான் நகரில் நடந்த இந்த ஆட்டத்தைக் காண 40 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

தொடக்கத்தில் இருந்தே குரோஷியா அதிரடியாக விளையாடியது. இதனால் 3 ஆவது நிமிடத்தில் டேரிஜோ அடித்துக் கொடுத்த பந்தை, தலையால் முட்டி கோலாக மாற்றினார் குரோஷியாவின் மரியோ மான்ட்சூகிக். இந்தத் தொடரில் மிக குறுகிய நேரத்தில் அடிக்கப்பட்ட கோல் இது தான்.

இந்த கோலுக்கு 19 ஆவது நிமிடத்தில் அயர்லாந்து வீரர் சீயன் செயின்ட் லெட்ஜர் பதிலடி கொடுத்தார். இதையடுத்து குரோஷியா அலை அலையாக தாக்குதல் ஆட்டத்தை நடத்தியது.பெரும்பாலும் அயர்லாந்து கோல்கம்பத்தை சுற்றி சுற்றியே பந்து வந்தது. இதன் பயனாக 43 ஆவது நிமிடத்தில் குரோஷியாவுக்கான 2 ஆவது கோலை ஜெலோவிக் அடித்தார். தொடர்ந்து 48 ஆவது நிமிடத்தில் மீண்டும் மரியோ மான்டிசூகிக் கோல் அடிக்க அயர்லாந்து 3-1 என்று முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் கடைசி வரை அயர்லாந்து வீரர்கள் போராடினாலும் குரோஷியாவின் பின்கள வீரர்கள் அனைத்து வாய்ப்புகளையும் தவிடுபொடியாக்கி விட்டனர். இறுதி வரை அயர்லாந்து வீரர்களால் மேற்கொண்டு கோல் அடிக்க முடியவில்லை. ஆட்ட நேர இறுதியில் குரோஷியா 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 'சி' பிரிவில் குரோஷியா 3 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஸ்பெயின் மற்றும் இத்தாலி தலா ஒரு புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும் அயர்லாந்து புள்ளி எதுவும் இல்லாமல் கடைசி இடத்திலும் உள்ளன. [5]

**ஆட்டத்தின் போக்கு**

**கோல்கள்:**
குரோஷியா– 3
அயர்லாந்து–1
**பந்தை வசப்படுத்தி ஆடுதல்:**
குரோஷியா– 55.2 சதவீதம்
அயர்லாந்து– 44.8 சதவீதம்
**'கோர்னர்கள்':**
குரோஷியா–7
அயர்லாந்து–
**மஞ்சள் அட்டை:**
குரோஷியா–2
அயர்லாந்து– 1

இங்கிலாந்து அணியில் 18 வயது சம்பர்லைன் களம் இறங்கியது வியப்பை ஏற்படுத்தியது. மற்றப்படி இரு அணியிலுமே முன்னணி வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். ஆட்டத்தின் முதல் 5 நிமிடங்கள் பிரான்ஸ் வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இங்கிலாந்து வீரர்கள் படிப்படியாக தாக்குதலை தொடர்ந்தனர்.



## விறுவிறுப்பான ஆட்டம் சமனிலையில் முடிந்தது

டொனாஸ்க் நகரில் நடந்த இங்கிலாந்து, பிரான்ஸ் அணிகளுக்கிடையேயான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.லெஸ்காட் அடித்த இங்கிலாந்துக்கான கோலுக்கு பிரான்சின் சமீர் நஸ்ரி பதில் கோல் அடித்தார்.

யூரோவில் 'டி' பிரிவில் இடம் பெற்றுள்ள இங்கிலாந்து-பிரான்ஸ் அணிகள் டொனாஸ்க்கில் உள்ள டான்பாஸ் ஏரானா அரங்கில் நேற்று முன்தினம் மோதின. இந்த யூரோவில் முதல் சுற்றில் மிகுந்த எதிர்பார்ப்புக்குள்ளான ஆட்டம் இது.

இங்கிலாந்து அணியில் 18 வயது சம்பர்லைன் களம் இறங்கியது வியப்பை ஏற்படுத்தியது. மற்றப்படி இரு அணியிலுமே முன்னணி வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். ஆட்டத்தின் முதல் 5 நிமிடங்கள் பிரான்ஸ் வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இங்கிலாந்து வீரர்கள் படிப்படியாக தாக்குதலை தொடர்ந்தனர்.

ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் மில்னருக்கு ஒரு அருமையான வாய்ப்பு கிடைத்தது. பிரான்ஸ் கோல் காப்பாளர் லாரிசையும் தாண்டி கோல்கம்பத்தின் இடதுபக்கமாக பந்தை கடத்தி சென்ற மில்னர் அதனை வெளியே அடித்து வீணடித்தார். இங்கிலாந்து ரசிகர்களின் ஆர்ப்பரிப்பு எழுந்து அடங்கியது. ஆனாலும் இங்கிலாந்து சளைக்காமல் தாக்குதல் ஆட்டத்தை தொடர்ந்தது.

தொடர்ந்து 30 ஆவது நிமிடத்தில் அணித்தலைவர் ஸ்டீவன் ஜெரார்டு அடித்த '' ப்ரீகிக்கை '' தலையால் முட்டி ஜோலன் லெஸ்காட் கோல் அடித்தார். இந்தக் கோல் மூலம் இங்கிலாந்து 1-0 என்று முன்னிலை பெற்றது. இந்த முன்னிலை நீண்ட நேரம் நீடிக்கவில்லை. 39 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ், இங்கிலாந்துக்கு பதிலடி கொடுத்தது. பிராங்க் ரிபெரி கொடுத்த ''பாஸை'' மிக அழகாக வாங்கிய சமீர் நஸ்ரி சுமார் 25 அடி தொலைவில் இருந்து கோல் கம்பத்தை நோக்கி அடிக்க, இங்கிலாந்து கோல்காப்பாளர் ஜோ ஹார்ட் பந்தை விழுந்து தடுக்க முயன்றார். ஆனால் பந்து கையில் சிக்காமல் வலைக்குள் பாய்ந்தது. முதல் பாதி ஆட்டம் 1-1 என்று சமநிலை கண்டது. முதல்பாதியில் இங்கிலாந்து கோல் காப்பாளர் ஜோ ஹார்ட் சிறப்பாக செயல்பட்டு பிரான்சின் பல கோல் வாய்ப்புகளை தடுத்துவிட்டார்.

**ஆட்டத்தின் போக்கு**

**கோல்கள்:**
இங்கிலாந்து– 1,
பிரான்ஸ்–1
**பந்தை வசப்படுத்தி ஆடுதல்:**
இங்கிலாந்து 35.1 சதவீதம்
பிரான்ஸ் 69.1 சதவீதம்
**'கோர்னர்கள்':**
இங்கிலாந்து– 4
பிரான்ஸ்– 11
**மஞ்சள் அட்டை:**
இங்கிலாந்து– 2
பிரான்ஸ்–0

பிற்பாதியிலும் அனல் வேக ஆட்டம் தொடர்ந்தது. 64 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கரீம் பென்சமா கோல் கம்பத்தை நோக்கி மின்னல்வேகத்தில் அடித்த பந்தை ஜோ ஹார்ட் மிக அழகாக பாய்ந்து பிடித்துவிட்டார்.பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரியல்மாட்ரிட்டின் பென்சமா சோபிக்காததும் பிரான்சுக்கு ஒரு பின்னடைவுதான். இந்த ஆட்டத்தில் பென்சமா அடித்த ஒரே நல்ல 'ஷொர்ட்' இது மட்டும்தான்.

தொடர்ந்து ஒவ்வொரு வினாடியும் பிரான்சின் அதிரடி தொடரத்தான் செய்தது. மிகவும் சோர்வாக காணப்பட்ட இங்கிலாந்து அணியினர், ஆட்டத்தை சமநிலையில் முடித்தாலே போதும் என்ற நோக்கில் விளையாடினர். கடைசிக் கட்டத்தில் பிரான்ஸ் அணியினர் கோல் அடிக்க போராடினர். 'பெனால்டி ஏரியாவை' பல முறை நெருங்கிய இவர்களிடம், முடிக்கும் திறன் இல்லாததால் கோல் அடிக்க முடியவில்லை.

மேலும் இங்கிலாந்தின் 8 வீரர்கள் பின்களத்தில் படுத்து கிடந்து பிரான்சின் அத்தனை வாய்ப்புகளையும் தடுத்து விட்டனர். ஆட்டத்தின் 77 ஆவது நிமிடத்தில் ஹேன்டர்சன்,ஜெர்மைன் டீபோ ஆகியோர் இங்கிலாந்துக்கான மாற்று வீரர்களாக களம் இறங்கினர். ஆயினும் இங்கிலாந்து அணியில் எந்த மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. பிற்பாதி 45 நிமிட ஆட்டத்திலும் பிரான்ஸ் கோல் அடிக்க போராடிக்கொண்டே இருந்தது. இங்கிலாந்து போராடி போராடி தடுத்துக் கொண்டே இருந்தது. முதல்பாதி ஆட்டத்தில் அடித்த கோல்களுடன் ஆட்டம் நிறைவுக்கு வர,தலா ஒரு புள்ளியுடன் முன்னாள் உலக சம்பியன்கள் களத்தை விட்டு வெளியேறின. எனினும் பிரான்சின் கையே இந்த ஆட்டத்தில் மேலோங்கியிருந்தது என்பதை இங்கிலாந்து பயிற்சியாளர் ராஸ் ஹாட்சனால் கூட மறுக்க முடியாது. [5]




இங்கிலாந்து - பிரான்ஸ் வீரர்கள்.

## உலகுக்கு சாதாரண வெற்றி; உக்ரேனுக்கு முதல் வெற்றி

ஐரோப்பிய கிண்ண கால்பந்து ஆட்டத்தில் நேற்று நடந்த ஆட்டத்தில் உக்ரேன் 2-1 என்ற கோல் கணக்கில் சுவீடன் அணியை தோற்கடித்தது. உக்ரேன் தலைவர் அன்ட்ரே செவான்கோ இரு கோல்கள் அடித்தார். இந்த வெற்றியின் மூலம் 3 புள்ளிகளுடன் 'டி' பிரிவில் உக்ரேன் முதலிடம் வகிக்கிறது. சுவீடனுடன் ஒப்பிடும் போது, உக்ரேன் கத்துக்குட்டி அணிதான். முன்னாள் ஏ.சி.மிலான் நட்சத்திர வீரர் 35 வயது அன்ட்ரே செவான்கோ, முன்னாள் லிவர்பூல் சூப்பர்ஸ்டார் வெரோனின் இரு வரும்தான் உக்ரேனை வழிநடத்த வேண்டும். மற்றவர்கள் அனைவருமே இளம் வீரர்கள். சுவீடன் அணியில், தற்போதைய ஏ-.சி.மிலான் சூப்பர்ஸ்டார் ஸ்லாட்டன் இப்ராஹிம்விச் மற்றும் லார்சன், ரோசன் பர்க், மார்ட்டின் ஹேறல்சன், மெல்பர்க், செவன்சன் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் அடங்கியிருந்தனர்.

இருப்பினும் முதல்பாதியில் உக்ரேன் அணி சுவீடனுக்கு கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியது. இரு அணிகளுமே பல வாய்ப்புகளை உருவாக்கி வீணடித்தன. உக்ரேன் தலைவர் அன்ட்ரே செவான்கோ ஒரு 'ஓபன் நெட்' வாய்ப்பை கோட்டை விட, சுவீடன் தலைவர் இப்ராஹிம்விச் தலையால் முட்டிய பந்தும் கோல்கம்பத்தில் பட்டு வெளியேறியது. முதல்பாதியில் மட்டும் உக்ரேன் 67 சதவீத நேரம் பந்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது குறிப்பிடத்தக்க விடயம்.

பிற்பாதியில் 52 ஆவது நிமிடத்தில் சுவீடன் வீரர் ஸ்லாட்டன் இப்ராஹிம்விச் ஒரு கோல் அடித்தார்.கிம் கிளாஸ்ட்ராம் கொடுத்த கிராஸ் பந்தை மிக அழகாக வலைக்குள் தள்ளினார் ஸ்லாட்டன். இதன் மூலம் சுவீடன் 1-0 என்று முன்னிலை பெற்றது.கோல் வாங்கிய உக்ரேன் வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடினர். ஆக்ரோஷ ஆட்டத்திற்கு 55 ஆவது நிமிடத்திலேயே பலன் கிடைத்தது. எர்மாலன்கோ கிராஸ் செய்த பந்தை தலையால் முட்டி கோலாக மாற்றினார் உக்ரேன் தலைவர் அன்ட்ரே செவான்கோ. இந்த அதிர்ச்சியில் இருந்து சுவீடன் மீள்வதற்குள் உக்ரேன் அடுத்த கோலை அடித்தது. இதையும் செவான்கோதான் 61 ஆவது நிமிடத்தில் தலையால் முட்டி அடித்தார். யாவ்கீன் கோன்பலயன்கா அடித்த 'கோர்னர்கிக்' செவன்கோ 2 ஆவது கோலை அடிக்க உதவிகரமாக இருந்தது. உக்ரேன் 2-1 என்று முன்னிலை பெற்றது. ஆட்ட நேர இறுதி வரை சுவீடன் கோல் அடிக்க போராடினாலும் பலன் கிடைக்கவில்லை. இறுதியில் உக்ரேன் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 3 புள்ளிகளை ஈட்டியதுடன் 'டி' பிரிவில் முதலிடத்திலும் உள்ளது. இதற்கு முன் எந்த ஐரோப்பிய கிண்ண தொடரிலும் உக்ரேன் கலந்து கொண்டது இல்லை. இந்த யூரோவுக்கு கூட தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில்தான் உக்ரேன் தகுதி பெற்றது. பங்கேற்ற முதல் ஐரோப்பிய கிண்ண தொடரில், முதல் ஆட்டத்திலேயே அபாரமாக விளையாடி உக்ரேன் வெற்றி பெற்றுள்ளது. உலக தரவரிசையில் 17 ஆவது இடத்தில் உள்ள சுவீடனை 52 ஆவது இடத்தில் உள்ள உக்ரேன் வீழ்த்தியதன் மூலம் தரமான அணி என்பதையும் நிரூபித்துள்ளது. இந்த வெற்றியை உக்ரேன் மக்கள் விடிய விடிய கொண்டாடி மகிழ்ந்தனர். [5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிற் பயிற்சிகள்**



* Mobile Phone Repairing
* Electronics
* Air conditioning

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் தொழில்பெற்றுக்கொடுக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்:- 12.05.2012 9A.m

விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE

NO 7,பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0718561654, 0778249949

கிளை NEW ASIAN CENTER 56/15 ஸ்ரான்லி வீதி, 0779254078


# ஆக்ரோஷத்தை அளவுடன் வைத்திரு



இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரராக இருக்கும் விராத் ஹோக்லிக்கு இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி அறிவுரை கூறியுள்ளார்.

இளம் வீரரான ஹோக்லியின் சிறப்பான ஆட்டத்தால் ஆசியக் கிண்ணத் தொடரில் துணைத்தலைவர் பதவி அவருக்கு கிடைத்தது. ஆனால், ஹோக்லி ஆடுகளத்தில் அதிகமாக ஆக்ரோஷம் அடைபவர்.

துடுப்பெடுத்தாடும் போதும் மட்டுமல்லாது களத்தடுப்பில் ஈடுபடும் போதும் அவர் உணர்ச்சி மிகுதியால் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்துவார். கிரிக்கெட் வட்டாரத்தில் அவரது இந்த செயல் தொடர்பாக அதிகம் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக அணித் தலைவர் டோனி அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஆடுகளத்தில் ஆக்ரோஷத்தை கட்டுப்படுத்துங்கள். எல்லை தாண்ட வேண்டாம் என்று அவருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இது குறித்து ஹோக்லி கூறுகையில், டோனி எனக்கு பல முறை ஆலோசனை வழங்கியுள்ளார். ஆடுகளத்தில் அமைதியாக இருக்க வேண்டும். ஆக்ரோஷத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறுவார். அவரது அறிவுரையால் இப்போது நான் மிகவும் மேம்பட்டு இருக்கிறேன்.

தற்போது எனக்கு துணைத் தலைவர் பதவி கிடைத்துள்ளதால் ரசிகர்கள் என்னைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள் எனவே, எனது நடவடிக்கையில் மாற்றம் தேவை தான் என்றார். மேலும், நான் மூத்த துடுப்பாட்ட வீரர் இல்லை. இளம் வீரர் என்பதால் அதிகமான ஆக்ரோஷம் இருக்கலாம் என்றும் ஆனால், இதை கட்டுப்படுத்துவது அவசியமானது எனவும் தெரிவித்தார். (5)


**திசைகாட்டியில்........**

**பதவி வெற்றிடம்**
**பொது முகாமையாளர்**
**(ஒப்பந்த அடிப்படை)**

எமது நிறுவனத்தில் மேற்படி பதவி வெற்றிடத்திற்கு பின்வரும் தகைமைகள் கொண்ட பொருத்தமான தேர்வு நாடி தேர்வு செய்யப்படவுள்ளார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்-பெண் வயது 40 இற்கு மேல்
தகைமை: அரச துறையில் நிர்வாகத்தில் முன்னனுபவம்-தனியார் துறையில் முகாமையாளர் தரத்தில் அல்லது கணக்காளர் தரத்தில் பணியாற்றியவர்கள் மாத்திரம் (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

ஆங்கிலத்தில் உரையாடும் திறன் கட்டாயமாக இருப்பதுடன் சிங்களம் அவசியமாகும்.

நேர்முகத் தேர்வு 13.06.2012- 14.06.2012 பி.ப 5மணி (தொலைபேசி மூலம் தொடர்புகொண்டால் விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

எமது யாழ்ப்பாண காரியாலயம் பணியிடமாக அமைவதுடன் ஏனைய கிளைகளான கிளிநொச்சி, கொழும்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து முகாமை செய்வதுடன் விற்பனை மேம்படுத்தல் புரிதல் அவசி யம். (எமது ஆஸ்திரேலியாக்கிளை நேரடியாக பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆளுகைக்குட்பட்ட தாகும்.)

எழுது வினைஞர், அமைய அடிப்படை (Clerk)

பெண்கள் க.பொ.த.உயர்தரம் 3 பாடங்கள் சித்தி. யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் மாத்திரம். நேர்முகப்பரீட்சை 13.06.2012 - 14.06.2012 மு.ப 11 மணி தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும்.

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வேதனம் நேரில்

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (pv 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
021 221 9016

எ.பிரவீனா
பிரதம நிறைவேற்று அதிகாரி
தலைமைக்காரியாலயம்

115எ இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி,
021 228 5544.

22A, FRANK FORT PLACE,
BAMBALAPITTY.
011 250 8443

504, HAMPTON STREET,
MALBORNE, AUSTRALIA
0061 3904 37100

(19191)



**HRM வகுப்புக்கள்**

Human Resource Management (HRM) வகுப்புக்கள் CLTP Unit இல் 16/06/2012 அன்று ஆரம்பமாகின்றன. பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.

HND அல்லது ABE டிப்ளோமா மாணவர்களிற்கு 20% கட்டண சலுகை வழங்கப்படும்.

204,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0774504746, 0772517223



**மாபெரும் கருத்தரங்கு**

**அரசியல் விஞ்ஞானம்**

**எஸ். கோகுலன்**

இடம்: பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

கையேடுகள் வழங்கப்படும்

காலம்: 19.06.2012 செவ்வாய் / 20.06.2012 புதன் } 8.30 - 12.30

குறிப்பு: வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். உங்கள் பதிவுகளை முன்கூட்டியே அலுவலகத்தில் பதிவு செய்யவும்

(சி/579)(8-14)



**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

Sponsor / Settlement Visa க்கு UK Border Agency ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட

**A1-Exam** (திருமணம் செய்து UK செல்வதற்கான)

DMI COMPUTER EDUCATION — City & Guilds Approved Centre

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

இலவச ஆலோசனைகளுக்கு. 0777577333

**B1-Exam** (Student Visa மூலம் UK செல்வதற்கான)

A1, B1 கற்கைநெறிகளை எமது நிறுவனத்திலேயே கற்று ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி. | சாவகச்சேரி. |
|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. Tel.:021-227 0243 |



**நேற்றுவரை**
**21 குடும்பங்கள்**
**ஆஸ்திரேலியா பறந்தன**

கடந்த ஒருவருடத்தில் எமது சட்ட ஆலோசனையைப் பெற்று இது வரை 21 குடும்பங்கள் ஆஸ்திரேலியா சென்றமை எமது தன்னிகரில்லா சாதனையாகும்.

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட் (PV82703)**
(முன்மாதிரியான விசா ஆலோசனை நிலையம்)

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016.

115 A, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544.

22 A FRANK FORT PLACE,
BAMBALAPITTY
0112508443

504, HAMPTON STREET,
MALBORNE, AUSTRALIA
0061390437100

(19213)(14-10)



**வாகனம் விற்பனைக்கு**

நிஷான் பிக்கப் 250-XXX, லேடன் டிப்பர் 48-XXX, லோடர் ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:
0779451290, 0719301624

(19215)



**G.C.E O/L உடன் STUDY IN UK**

UK Student Visa நடைமுறையில் பெரிதாக எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை 20hours வேலை வாய்ப்புடன் 4 வருட விசாக்களை பெற எம்மை நாடுங்கள்

விசா கிடைத்து பயணமான மாணவர்கள் சிலர்



Alhkaran, Ajanthan, Archana, Issaipriya, Karteekaran, krishanth, Pirajeeth

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நிறுவனத்தின் தலைவர் தற்போது யாழ்ப்பாண கிளை காரியாலயத்தில் இருப்பதால் இன்றும் நாளையும் நேரில் சென்று மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

Jul/Aug Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறன

பதிவுகளுக்கு

Colombo-011 7 555511/14 Fax-011 7 555517
Jaffna-021 7538395 / 021 2227230

EXPONET Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna. (Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

(சி/593)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நூல்களே இல்லாத இல்லம் பலகணிகள் இல்லாத ஓர் அறையைப்போன்றது.
-ஆசிரியர் மேன்-

# புதன் பொய்கை A

உதயன் 13 ஜூன் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# மொழியும் ஊடகமும்

**மனிதன் தனது கருத்துக்களையும், உணர்வுகளையும் பல்வேறு வகையில் வெளிப்படுத்துவதற்கான முறைமைகள் காலகாலமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டு, அதன் பெறுபேறாக இன்றைய தொடர்பூடக மொழியைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. ஒலிவடிவம் பேச்சு மொழியாகி பின்னர் எழுத்து மொழியாகி, எழுத்துரு வடிவம் நீண்ட காலம் மாற்றத்துக்குள்ளாகி இன்றும் நின்று விடாமல் புதிய புதிய அறிமுகங்களை கொண்டு இருக்கின்றன.**

**■ பா.இராஜேஸ்வரன்**

ஊடக கருமங்களின் வினைத்திறனான, செயற்பாடுகளுக்கு மொழி முதன்மைக் கருவியாக அறிமுகம் செய்யப்பட்டதை தொடர்பாடல் வகையின் முக்கிய பரிமாணமான பத்திரிகைக் கலை அறிமுகப்படுத்தப்பட்ட வரலாற்று நிகழ்வுடன் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாகவுள்ளது.

அச்சுக்கலை கண்டுபிடிப்பு, கடதாசி அறிமுகங்கள், வெகுசன ஊடக பரிமாணத்திற்கு வித்தாக அமைந்தன. தொடர்பாடல் செயற்கூறுகளின் முக்கிய பகுதியாக ஊடகம் (Channel) இடம்பெறுகின்றது. ஊடகம் என்பதற்கு செல்வழி, ஊடுகடத்தி என்ற வேறுபெயர்களும் சுட்டப்படுகின்றன. ஊடகம் என்ற எண்ணக்கருவில் சைகை, குறியீடுகள், ஒலிகள், வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி என்பவற்றுடன் மொழியும் உள்ளடக்கப்படுகின்றது. தொடர்பாடல் ஊடகமாக மொழிப் பயன்பாடு முக்கியத்துவம் பெறுவதையும் அதே வேளை ஊடகங்களில் மொழிப் பயன்பாடு முதன்மை பெறுவதையும் உணரக்கூடியதாக உள்ளது. மொழியின் புதிய பரிமாணமாக ஊடகமொழி பற்றிய சிந்தனை முன்னிலைப்படுத்தப்படுகின்றது.



**மொழி எண்ணக்கரு**

மொழி மனித வரலாற்றுடன் தொடர்புடைய மிக உன்னத தொடர்புக் கருவியாகும். மொழி என்பதற்கு குறித்த ஒரு மனிதன் அல்லது நபர் தனது கருத்துக்களையும், உணர்வுகளையும், எண்ணங்களையும் பகிர்தலும், புரிதலும் என அர்த்தப்படுத்தப்படுகின்றது. கருத்தை வெளியிட பயன்படுத்தப்படுகின்ற அதி சக்தி வாய்ந்த கருவியாகவும் சுட்டப்படுகின்றது. இருப்பினும் மொழிக்கான இறுதி வரையறையை திட்டமாக குறிப்பிட முடியாது. ஏனெனில் காலத்துக்கு காலம் அது மாற்றங்களுக்குட்பட்டு, புதிய விடயங்களை உள்வாங்கிக் கொள்கின்ற இயல்பினை கொண்டமைவதனாலாகும். உலகில் ஒவ்வொரு நாகரிகங்களுக்கும் ஒவ்வொரு விதமான மொழிகள் உருவாகியுள்ளன. மொழியின் வடிவத்திற்கு ஏற்ப உருவ எழுத்துக்கள், குறியீட்டு எழுத்துக்கள் என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

மனிதன் தனது கருத்துக்களையும், உணர்வுகளையும் பல்வேறு வகையில் வெளிப்படுத்துவதற்கான முறைமைகள் காலகாலமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டு, அதன் பெறுபேறாக இன்றைய தொடர்பூடக மொழியைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. ஒலிவடிவம் பேச்சு மொழியாகி பின்னர் எழுத்து மொழியாகி, எழுத்துரு வடிவம் நீண்ட கால மாற்றத்துக்குள்ளாகி இன்றும் நின்று விடாமல் புதிய புதிய அறிமுகங்களை கொண்டு இருக்கின்றன. மொழிக்கான அரிச்சுவடி அறிமுகம் அதன் முக்கிய நிகழ்வாகக்கூட அமைகின்றது.

சமகாலத்தில், இன்றும் பயன்பாட்டில் அதாவது வழக்கில் உள்ள தொடர்பாடல் மொழி உயிர்ப்பு மொழி எனக் குறிப்பிடப்படுகிறது. மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதனால் ஊட்டம் பெறுவதுடன் மாற்றத்திற்கு உள்ளாகி நின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது. பிரதான மொழியில் இருந்து பிரிந்து சென்றுள்ள துணை மொழி தொடர்பாடல் நிலைமைகளை அந்தச் சமூகம் சார் அளவிலும், இனக் குழும அளவிலும் மேற்கொள்கின்றன.

மொழி விருத்தியடைகின்றது. ஏற்புடையாமை என்பது மொழி விருத்தி அன்று ஏற்புடமை மொழி விருத்திக்கான தரங்காட்டியாக அமைகிறது. மொழியை ஊடகங்கள் ஏற்புடமையற்ற விதத்தில் பயன்படுத்தவோ, மட்டுப்படுத்தவோ முடியாத நிலைமைகளை மொழி உரிமை அடிப்படையிலும், ஊடக ஒழுக்க நெறி தத்துவார்த்த அடிப்படையிலும் உணரக்கூடியதாகவுள்ளது.

**ஊடக மொழி எண்ணக்கரு**

தொடர்பாடல் ஊடகமாக மொழி பற்றியும், தொடர்பூடக ஊடகமாக மொழி பற்றிய வகிபங்கு சிந்தனை முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. ஊடகமொழி என்பது கருத்து பரிமாற்றம், அல்லது புரிதலுக்கான வழியாக மொழி பயன்படுத்தப்படுவதை குறித்து நிற்கின்றது. தொடர்பாடல் சந்தர்ப்ப சூழமைவுகளுக்கு ஏற்ப மொழியை கையாளுதல் அடிப்படை எண்ணக்கருவாக அமைகின்றது.

தொடர்பாடலுக்கான மொழி தொடர்பூடகத்துக்கான மொழி அல்லது வெகுசன ஊடக மொழி என்ற அர்த்தங்களில் ஊடக மொழி எண்ணக்கரு தொடர்புபட்டமைகின்றது. தொழில்நுட்ப அறிமுகங்கள் மொழிப் பயன்பாடுகள் தொடர்பில் புதிய அறிமுகங்களை உருவாக்கியுள்ளன. ஊடக மொழி என்பதில் மொழியை ஆக்க ரீதியாக பயன்படுத்தல் முதன்மைப்படுத்தப்படுகின்றது. தொடர்பாடல் வகை நிலைக்கு ஏற்பவும் ஊடகக் கருவிகளின் தன்மைக்கேற்பவும் மொழிப்பாவனை செல்வாக்குச் செலுத்துவதனால் ஊடக மொழி பற்றிய எண்ணக்கரு வலுப்பெறலாயின.

தொடர்பாடல் அடிப்படை கூறுகளில் ஊடகமாகிய செல்வழி அம்சங்களில் மொழியின் வகிபங்கு ஏனைய ஊடு கடத்திகளுக்கு ஆதாரமாகவும், வழி மூலமாகவும் அமைவதை உணரக் கூடியதாக உள்ளது. அதே வேளை வெகுசன ஊடக தோற்றத்திலும், அதன் பயன்பாட்டு நிலைகளான எழுத்துக் குறியீடு, பேச்சு மொழி, பேச்சும் எழுத்தும் இணைந்த மொழி என்ற அடிப்படையில் ஊடக மொழி எண்ணக்கரு விரிவுபட்டமைகின்றது.

**மொழியும் ஊடகப் பயன் நிலைகளும்**

வெகுசன ஊடகப்பயன் நிலைகள் என்ற அடிப்படையிலும், தொடர்பு ஊடகமான பயன்பாடு அடிப்படையிலும் மொழியின் ஊடகப் பயன் நிலைகளை தரம்பிரித்து நோக்க முடியும். தொடர்பாடுபவர், பெறுநரிடையே தகவலை பரிமாற்றுவதிலும், பகிர்தலிலும், தெரிதலிலும் மொழி பயன்பாட்டின் தர நிலைப்பாடுகள், பிரயோக வலுநிலைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆக்கபூர்வமானதும், வினைத்திறனுள்ள மற்றும் வினைதிறனுள்ள தாக்க நிலைகளுக்கும், வெளிப்பாடுகளுக்கும், பெறுபேறுகளுக்கும் மொழியின் உள்ளூட்டுத் தன்மை வலுச் சேர்ப்பதாக அமைகின்றது.


தொடர்பு செயன் முறைகளின் போதும், ஊடக தேவைகளுக்காகவும் மொழியை பயன்படுத்துவதில் முன் கூட்டிய ஆயத்த நிலைகள் அடிப்படையாகின்றது. தொடர்பு இலக்குப் பிரிவினரை முற்கூட்டியே தீர்மானித்து அதற்கு ஏற்ப மொழிப் பிரயோகங்களை தயார்படுத்தப் பயனுறுதிமிக்க ஊடக மொழி பயன்பாடாக அமைய வாய்ப்புக்களை அதிகரிக்கும்.

பேச்சு, ஆற்றுகை, விவரணம், உரை, பிரதியாக்கம் என்ற அடிப்படையில் மொழியின் பயன்நிலைகளை முதன்மைப்படுத்தி நோக்க முடியும். தொடர்பாடலுக்காகவும், வானொலி ஊடக செயற்பாடுகளுக்காகவும் பேச்சு என்ற வெளிப்பாட்டினை மொழியை ஒலிப்பதன் மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். அன்றாட கருமங்களின் போது கட்டளையிடல், அறிவித்தல், வேண்டுதல், தன்கூற்று போன்ற நிலைகளிலும், நபர்களிடையே இடைவினை உறவை பேணும் சூழ்நிலைகளை கட்டியெழுப்புவதற்குப் பேச்சு செயன்முறை உதவுகிறது.


பேச்சின் உச்சரிப்பு, நடிப்பு, கோலம், கொற்றிலைகள் இணைவு பெறுவதனால் ஆற்றுகை ரீதியிலான காட்சிகள் முன்வைக்கப்படுகின்றன. சமூகத் தொடர்பு நிலைகளின் போது கூடிய வீத தாக்கத்தை ஏற்படுத்தவும், எறிகைக்குட்படுத்தவும் ஆற்றுகை செயன்முறை வலுவுள்ளதாக உணரப்படுகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் செதுக்கப்பட்ட தத்ரூபமான சிலைகள்





# கடல் குகைகள்



பொதுவாக சிலர் கடலின் அழகினை ரசிப்பதற்கு அதிகமாக ஆசைப்படுவதுண்டு. ஆனால் அந்தக் கடலுடன் இணைந்து சிறுகுகையும் காணப்படும் அழகினைப் படத்தில் காணலாம்.

# தேனீரில் வரையப்படும் அற்புத ஓவியம்







# கண்ணைக் கவரும் முடி அலங்காரம்




பொதுவாக பெண்கள் தமது அழகினைப் பாதுகாப்பதில் அதிக முக்கியத்துவம் எடுத்துக்கொள்கின்றனர். அதுமட்டுமின்றி அதிகமான பணத்தினையும் செலவு செய்து பராமரிக்கின்றனர். [illegible]துக்கு மட்டும் இவ்வாறு செய்யாமல் முடிக்கும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

# உருகும் பனிக் கட்டியில் ஜொலிக்கும் கட்டடம்



# பறந்து செல்லும் பந்தயக் கார்



பந்தயத்தில் கலந்துகொள்ளும் கார்கள் அதிகமான வேகத்தினை மேற்கொண்டு பயணம் செய்வது வழக்கம். இங்கு காணப்படும் கார்கள் வேகமாக செயல்படுவதுடன், பந்தயத்தில் பறந்தும் பயணிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




**புத்திரேகைகள் குறித்த விவரங்கள் மேலும் தொடர்கின்றன.**

சில கைகளில் புத்திரேகை தோன்றாது. எல்லைக்குள் புலப்படவில்லையானால், மனோபாவம் எல்லா ரேகைகளிலும் கலந்திருக்கும்.

1.புத்திரேகை குருமேட்டின் அடிவாரத்தில் உற்பத்தியாகி ஒழுங்காய் அமைந்திருப்பதைப் படத்தில் பார்க்கவும். இது அபாரமான மனோதர்மத்தையும் தீர்ந்த புத்தியின் கூர்மையையும் காட்டுகிறது.





2.புத்திரேகை படத்திலுள்ளது போலச் சிறியதாக இருந்தால் மந்த புத்தியைக் காட்டும். மூளை விருத்திக்கான அமைப்பில் இல்லை. மேலும் அடிக்கடி நோய் உண்டாவதையும் புத்திரேகையில் இருந்து அறியலாம்.

3.புத்தி ரேகையும் ஆயுள் ரேகையும் ஒரே அளவில் சிறியதாய் இருக்குமானால், அந்தக்கால அளவில் ஆயுள் குறைவு எனக் கருதலாம்.

4.குறுகிய புத்திரேகையின் இறுதியில் ஒரு நட்சத்திரக் குறி இருந்தால் மரணம் திடீரென அந்தக் கால அளவில் ஏற்படும்.

புத்திரேகையின் இறுதியில் அணை போல் குறுக்கிட்ட சிறு ரேகை வெட்டுக் குறியிருந்தாலும் ஆயுள் முடிவைக் குறிப்பதாகும்.

5.புத்திரேகை உற்பத்தியிலிருந்து





நேரே சென்றிருக்கிறதா அல்லது அதில் வளைவு காணப்படுகிறதா என்று அறிய வேண்டும். உற்பத்தியில் புத்திரேகை ஆயுள்ரேகையோடு ஒன்று பட்டு கொஞ்சத்தூரம் இணைபிரியாதிருந்து பிறகு கிளைபோலச் செல்லும் ஒன்று பட்டுள்ள கால அளவு இளமையில் தன்னைப் பற்றி எவ்வித கவலையும் அற்றவராக இருப்பர் என்பதைக் குறிக்கும். எவ்வளவு காலம் புத்திரேகை ஆயுள் ரேகையோடு ஒன்றுபட்டிருக்கிறதோ, அதுவரை தன்னம்பிக்கை அற்றவர் ஆவார்.

விரல் கட்டீடயாகவும் கை சதுரமாய் அல்லது சங்கு போல் இருப்பின், புத்தி அவ்வளவு கூர்மையாக இராது.

6.புத்திரேகை உற்பத்தியில் ஆயுள் ரேகையுடன் சம்பந்தமின்றித் தனித்திருக்குமாயின், இளமையிலிருந்தே கூர்மையான புத்தியுடையவரென்பதைக் குறிக்கும். இன்னும் தன்னம்பிக்கை, தன் காரியத்தில் பிறர் ஆதரவு இன்றி நடத்தல் சுயமாய் யோசனை செய்தல், தைரியமாய் இருத்தல் முதலானவைகளையும் குறிக்கும்.

எவ்வளவுக்குப் புத்திரேகை ஆயுள் ரேகையில் நின்று விலகி உற்பத்தியாகிறதோ, அவ்வளவுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுக்கும். புத்திரேகை ஆயுள்ரேகையை விட்டு அகன்று உற்பத்தியாகி கைவிரல்களும் கூராய் அமைந்தும் கையும் ஒடுக்கமாய் இருந்தால் அசாத்தியமான தன்னம்பிக்கை கொண்டு புதிய யோசனைகள் செய்து பெரும் தவறுகளைச் செய்வர்.




7.சிலர் கையில் புத்தி ரேகை குரு மேட்டிலிருந்து உற்பத்தியாகிறது. அவ்விதமிருப்பின், அவர்கள் அரசியல் துறையில் இணைந்து செயற்படுவர். அடக்கம், சாந்தம், பொறுமை முதலானவைகளுடன் நடந்து கொள்வர்.

அதிகாரம், ஆடம்பரமின்றி அன்புடையவராய் நடப்பர். விவேகத்துடன் அதிக ஜாக்கிரதையாய் நடந்து கொள்வர். இத்தகையோர் எடுத்த காரியங்களி லெல்லாம் வெற்றியடைவர்.

8. புத்திரேகை உற்பத்தியில் ஒரு கிளை குருமேட்டை நோக்கியிருப்பதுமுண்டு. இது ஆட்சிபுரிவதில் இஷ்டமிருப்பதைக் காட்டும். எந்தக் கிரக ஆதிக்கம் வலுத்திருக்கிறதோ, அது உன்னத நிலையைக் கொடுக்கும். உலக வாழ்க்கையில் முன்னேற்றமடைவர்.


9.புத்திரேகை உற்பத்தியில் ஆயுள் ரேகையைத் தொட்டு, நேரே கையில் குறுக்கே சென்றிருந்தால், அனுபவ சித்திக்கான வழிகளில் யோசனை செய்து நடப்பர். மற்றவர்கள் தங்கள் செல்வாக்கினால் இவர் எண்ணத்தை மாற்றமுடியாது. எப்பொழுதும் அனுபவ வழியையே இத்தகையோர் நாடுவர்.

10. புத்திரேகை சனிமேட்டை நோக்கிச் சற்று வளைந்து போயிருக்குமானால், சனி பகவானின் ஆட்சிக்குட்பட்டு அதற்குரிய பலன்கள் அனுபவத்தில் புத்தி வழியே செல்லும். இத்தகையோருக்கு சனி ஆதிக்கத்தினால் பலனுண்டென்பதைத் திடப்படுத்தும். **(தொடரும்)**

# நாட்டாமை வருவாரா?

தமிழர்களைப் பொறுத்த வரையில் எந்த விடயமாயினும் நேரத்திற்கு செய்து முடிப்பது என்பது அரிதானது. பெரும்பாலும் விழாக்களுக்கு தமிழர்கள் பிரதம விருந்தினர்கள் என்றால் அந்த நிகழ்வுக்கு அரை மணி நேரம் தாமதித்தே போகலாம். நேரத்தை வீண்விரயம் செய்வதில் எங்களுக்கு நிகர் நாங்களேதான். ஆனால் பயிற்சிப் பட்டறைகள் என்று சொல்லி அரச அலுவலர்களை அழைத்து வைத்துக் கொண்டு நேரத்தை வீண் விரயம் செய்வது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் குறித்த அரச அலுவலர்கள் மக்களுக்கு ஆற்றும் பணிகளும் தாமதமடையும்.

அண்மையில் வடமாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்கு, அவர்களது திறமைகளை வளர்க்கும் முகமாக பயிற்சி வகுப்பு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. வடமாகாண சபையின் நிகழ்வுக்கு, நாட்டாமையில்லாமலா தொடங்க முடியும். நாட்டாமையும் வருவார், வருவார் என்று சொல்லி 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய பயிற்சி 11 மணியாகியும் ஆரம்பிக்கப்படவில்லை. இறுதியில் அவர் வரமாட்டாராம் என்ற பின்னரே ஆரம்பிக்கப்பட்டது.




அதேபோல குறித்த பயிற்சி வகுப்பின் இறுதி நாள் நிகழ்விலும் வடக்கின் நாட்டாமை வருவார் வருவார் என்று சொல்லி நேரத்தை வீணடித்த பின்னர் அவர் வரமாட்டாரம் என்று சொல்லி முடித்தனர். இந்தச் செயலமர்வில் பங்குபற்றாதவர்களுக்காக மீண்டும் இன்னுமொருநாள் செயலமர்வு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. இதில் 20 பேரே வருகை தந்திருந்தனர். இந்த நிகழ்வுக்கு நாட்டாமை வரப்போகிறாராம் என்ற தகவல் கிடைத்ததும், அவர் வருகையில் எவ்வாறு 20 பேரை வைத்திருப்பது என்று பதறிய அதிகாரிகள் பார்ப்பதற்காகவாவது, அரங்கு நிறைந்த மாதிரி இருக்க வேண்டாமா என்று சிந்தித்து, கடைசியில் அந்தத் திணைக்களத்தில் வேலை செய்கின்ற எல்லா ஊழியர்களையும் மண்டபத்தினுள் கொண்டு சென்று இருத்தினர். தமது அலுவலக கடமைகளை விட்டு விட்டு 9 மணிக்கு குந்திய அலுவலர்கள், நாட்டாமையின் வரவை எதிர்பார்த்திருந்தனர். கடைசியில் நாட்டாமை 11.30 மணியளவிலேயே தரிசனம் கொடுத்தார். அந்த அரச அலுவலர்களது அன்றைய அரைநாள் வேலை காலி. ஏற்கனவே எங்களது அரச ஊழியர்கள் மிகவும் திறமைசாலிகள். (?) இந்தவிறுத்தத்தில் இப்படி செய்தால் மாகாணசபை உருப்பட்டமாதிரித்தான் !

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு விடயங்களை அக்குவேறு ஆணி வேறாக உதயன் வெளிப்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களால் உதயனின் பணி என்றும் மறக்க முடியாது. 'உதயன்' தனக்கான பாணியில் துணிவுடன் செய்திகளை வெளியிட்டு வருவது எமக்கு ஆறுதலாக இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மை பாதுகாப்பவர்கள் என்ற நிலைமை வன்னிப் போருக்குப் பின்னர் இல்லாமல் போய் விட்டது. அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்தளவுக்கு எமது உரிமைகளுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் தளர்ந்து வருகிறது.

உதயனாவது ஓரளவு (எப்போதுமல்ல) குரல் கொடுப்பது நிம்மதி தருகிறது.

உதயன் பத்திரிகை இன்னமும் தமிழ் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு செய்திகளை வெளியிட்டு ஆட்சியாளர்களதும் அவர்களது அடிவருடிகளதும் முகத்திரையைக் கிழிக்க வேண்டும்.

சிவகௌரி,
யாழ்.மாவட்டம்

★ ★ ★

வன்னி இறுதிக்கட்ட போரில் சிங்களப் படைகளால் தமிழ் பெண்கள், இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட காட்சிகளை உதயன் வெளியிட்டமைக்கு பாராட்டுத் தெரிவிக்கின்றேன்.

இறுதிக்கட்ட போரில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்ற போதும் அந்தச் சம்பவங்கள் ஒளிப்படமாக வெளிவரும் போதும் இலங்கை அரசின் மீது சேறு பூசும் முகமாக தயாரிக்கப்பட்ட ஒளிப்பட ஆவணம் என்பது முற்று முழுதாக நிராகரித்து வருவது தான் தமிழர்கள் ஆகிய எமக்கு கவலையளிக்கும் விடயமாக உள்ளது.

மூன்று தசாப்த காலப் போர் எமக்கு தோல்வி அல்ல. அது வெற்றியை தரவுள்ளது என்று அதை சர்வதேச அணுகுமுறையில் இருந்து நன்கு தெரிகிறது.

இந்தப் பணியை உதயன் செய்து வருவது பாராட்டத்தக்கது. எவருக்கும் அடிபணியாது தமிழர்களுடைய பத்திரிகை ஒன்றே என்று சொல்லும் அளவுக்கு உதயன் வளர வேண்டும். எனவே பயம் கொள்ளாது துணிவுடன் செயற்பட்டு மேலும் வளர வேண்டி நிற்கிறேன்.

கிருபன்,
வதிரி.

★ ★ ★

பல்லாண்டு காலமாய்
பல விதமாய்
கவிதை எழுதியிருப்பேன்
பாரெங்கும் உலாவரும்
'உதயன்' நாளிதழின்
பண்பான பல பகுதிகள் கண்டு
பரவசமடைந்தவர்களுள் நானும்
பண்பாய் எழுதுகின்றேன்
இக்கவிதையினை
சேர்த்துக் கொள்
உன் இதழில்.

சிந்து சிவதாஸ்
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கனவு நனவாகும்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் தங்கியிருந்த வேளை அவரது லண்டன் வருகைக்கு எதிராகப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில் போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படைகளால் தமிழ் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டமை குறித்த புதிய காணொலி ஆதாரங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது லண்டனில் இருந்து வெளியாகும் "தி இன்டிப்பென்டன்ட்" ஊடகம். பிரிட்டன் மகாராணி எலிஸபெத் பதவியேற்று 60 ஆண்டுகள் நிறைவையொட்டி லண்டனில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்த நேரம் பார்த்து இந்தப் போர்க்குற்ற ஆதாரம் அம்பலப்படுத்தப்பட்டமை பெரும் பரபரப்பாக அமைந்தது.

பெண்களின் மேலாடைகள் களையப்பட்டு சிங்களப் படைகளால் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயிரற்றுக் கிடக்கும் காட்சிகளும், ஒரு பஸ்ஸில் பொலித்தீன் பையில் உயிரற்ற உடலங்கள் கட்டி அடுக்கிவைக்கப்பட்டு அந்த பஸ்ஸுலேயே சரணடைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை விலங்கிட்டு வைக்கப்பட்ட காட்சிகளும், தரையில் கையையும் கண்களையும் கட்டிவைத்து உட்கார வைக்கப்பட்டிருந்த காட்சிகளும் நெஞ்சைப் பிளக்கிறது.

சிங்களப் படைகள் இறுதிக்கட்டப் போரில் சரணடைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை மிகக்கொடூரமான முறையில் சித்திரவதை செய்து கொன்றுள்ள காட்சிகள் வெளிவந்தவண்ணம் உள்ளன. மஹிந்த அரசை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்கான ஆதாரங்களாக இது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் தமிழர்கள் விடுதலைப் புலிகளை தங்கள் இனத்தின் முற்று முழு முகவரியாகவும் ஏகப் பிரதிநிதிகளாகவும் மனங்களில் இருப்பிடம் கொள்ள வைத்திருந்தனர். உலகின் பல்வேறு நாடுகளில் புலிக்கொடி பறக்கிறபோது அது இன்னும் அப்படியே இருக்கிறது என்பது வெளிச்சத்துக்கு வந்தது. தமிழர் கொடி புலிக்கொடி என்று ஏந்திப் பிடித்தவாறு உலகத்தமிழர்கள் இன்றும் வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

மூன்று தசாப்த கால விடுதலைப் போராட்டம் சொல்லொணா இழப்புகள் எழுச்சியும், வீழ்ச்சியும் கலந்த பயணம். ஈழத்தில் தமிழர் போராட்டம் வீழ்ச்சி கண்ட போதிலும் புலம்பெயர் நாடுகளில் அதன் போராட்டம் தொடர்கிறது. இந்த மண்ணுக்காக ஆயுதம் ஏந்திப் போராடி மடிந்த மறவர்கள் தமது உயிரை இழக்கும்போது மனதில் தமிழீழக் கனவுதான் இருந்தது. அந்தக் கனவுக்கான பயணம் முள்ளிவாய்க்காலோடு முடியவில்லை தொடர்கிறது.

ஒடுக்கப்பட்ட இனத்தில் இருந்துதான் விடுதலைப் போராளிகள் பிறப்பார்கள் என்று மகாகவி பாரதி அன்று பாடினான். இன்று கவிஞன் காசி ஆனந்தன் பாடுகிறார். 1962 ஆம் ஆண்டு மருத்துவமனையில் இருந்த போது எழுதிய கவிதைகளை "தமிழன் கனவு" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தில் நடந்து முடிந்த போரினைப் பற்றியும் இனிமேல் ஈழத்தில் நடக்கப் போவதைப் பற்றியும் தெளிவாக இந்தப் புத்தகத்தில் முன் கூட்டியே எழுதிய வித்தகக் கவிஞர் என்றால் காசி ஆனந்தன் என்பதில் வியப்பேதும் இல்லை. கவிதைகளில் சில.

**அதிர்ந்தன திசைகள்! அசைந்தன மலைகள்!**
**அழிந்தன காடுகளெல்லாம்!**
**உதிர்ந்தன கரங்கள்! உடைந்தன தலைகள்!**
**உயர்ந்தன பிண மலைக் குவியல்!**

**பறவையின் நிரையென**
**வானிடை யெழுந்தன**
**பகைவர் ஊர்திகளே!**
**சிறகுகள் துகள்பட**
**அலைமிசை பறந்தன**
**தமிழர் கருவிகளே!**
**திறலுடை தமிழரின்**
**பொறிபல கணைகளை**

**அள்ளிச் சிதறினவே!**
**விறகுகள் என மதில்**
**விடுக வெரிந்தன!**
**ஊர்கள் வீழ்ந்தனவே!**

**ஆடின கழுகுகள்... வான்மிசை! அழுகின**
**பிணத்தின் இரைதேடி ஓடின நரிகளும்**
**தெருப்புற நாய்களும்! ஊரே காடாகி**
**மூடின பிணங்களின் விழிகளைக் கரடிகள்**
**மோந்து களந்தோறும் தேடின! பூமியின்**
**திசைகளும் நாறின! புழுக்கள் திரண்டனவே!**

**தெய்வ மாவீரர் தமிழ் வீரர்**
**திரண்டு களத்தின் கண்ணே**
**செய்யும் அறப்போரை என்னென்று**
**தமிழில் செப்புவேனோ?**
**பெய்யும் மழைத் துளிகளென்னப்**
**பெருக்கிக் கொட்டும் மாற்றார்**
**கையின் குண்டுகளிடையிலே**
**தமிழர் களித்தாரம்மா!**

**எட்டுத் திசைகளும் பட்டுத் தெறித்தன**
**எவர் குண்டுகளோ!? குண்டு**
**பட்டுத் தமதுடல் கெட்டுச் சிதறிடப்**
**பாய்ந்தார் தொண்டர்களே!**
**மானம் பெரிதென ஊன உடல்விழ**
**மாண்டார் தமிழ் வீரர்!- ஆவி**
**தானம் எனத்தந்த மானத் தமிழன் தோள்**
**தங்கம்! தங்கமடா!**

**பெண்களை மென்மைப் பிறவிகளென்று**
**பேச மனம் வருமோ? அங்கே**
**மன்னனி லுயிர்சிந்தும் இளைஞர்க்கு வாய்த்த**
**மகளிர் குலமல்லவோ?**
**பள்ளிச் சிறார்களும் நல்லறப் போரிலே**
**பாய்ந்து களிக்கின்றார்! - செந்நீர்**
**வெள்ளத்திலாடி மரணத்தின் முத்தம்**
**விரும்பித் துடிக்கின்றார்!**
**ஓவென்றிரைந்து நடக்குதடா எங்கும்**
**உரிமைப் போராட்டம்!- வாழ்வு**
**தாவென்று கேட்டு மடியுதடா எங்கள்**
**தமிழர் படைக்கூட்டம்.**

**தன்னை வருத்தியும் தன்னுயிர் தந்தும்.**
**தமிழன் மடிகின்றான்!- தங்கள்**
**பொன்னுயிர் சிந்தும் புறாக்களைக் கண்டு**
**புலவன் மலர்கின்றான்!**
**எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி**
**இனிய அறுமங்கை- கண்ணில்**
**பொங்கி வழியும் புனலின் நெருப்பிலே**
**பூமி அழியாதோ?**
**இவ்வளவும் நடந்தது.**

**இனிமேல் நடக்கப்போவது.**

**ஈழம் தமிழ்மண் இரண்டிலுஞ் செந்நீர்**
**எழுந்து பெருக்கெடுத்து- நின்ற**
**ஆழியுஞ் செங்கடலானது கண்டார்!**
**அதிர்ந்தார் புலிமாந்தர்!**

**புலிமாந்தர் அதிர்ச்சி! களத்தே புறத்தோடும்**
**பகைவர் வீழ்ச்சி!**
**இவைகண்டு சிரித்தான்**
**இனியான் தமிழச்சி மக்களெல்லாம்**
**குளிமகிழ் கொண்டார்!**
**ஊர்கள் திசைகளெல்லாம்**
**கொள்ளை மகிழ்ச்சி! கவலை காண் விடுதலை**
**எனுஞ்சொல் பூத்தடா தமிழன் ஆட்சி!**

தமிழ் உணர்வு விடுதலைப்புலிகளின் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. ஒவ்வொரு உணர்வுள்ள தமிழ் மறவனும் பேராளியாக மாறி போர்க்களத்தில் செத்துக் கிடக்கிறான். போராடி இருக்கிறான். இது எமக்குக் கிடைத்த பொற்காலம். இரத்தம் சிந்தாமல் துன்பங்களைச் சந்திக்காமல் கிடைப்பது அல்ல விடுதலை. இந்தப் பெரும் போராட்டங்களின் பின்னர் கிடைப்பதுவே உண்மையான விடுதலை.

இழப்புக்களின் வலியை உணராமல் விடுதலை பெறும் மக்கள் எத்தனை காலமாகினாலும் வாழ்வில் எந்தவித மாற்றத்தையும் காண முடியாது. இவர்கள் இருண்ட வாழ்க்கையையே நடத்திக்கொண்டிருப்பார்கள். பல போராட்டங்கள் செய்து விடுதலை பெறும் மக்கள் தாம் பட்ட துன்பங்கள் தமது எதிர்கால சந்ததிக்கு வந்துவிடக் கூடாதென்ற நோக் குடனும் துணிச்சலுடனும் செயலாற்றி தம்மையும் தமது தேசத்தையும் உயர்த்துவதற்காக கடுமையாக உழைப்பார்கள்.

■ பித்தன்

# அம்புலன்ஸ் படகு உயிர் பெறுமா?

கோடைவெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. வழமையாக நண்பகலில் காணப்படும் வெம்மை இப்போதெல்லாம் பகல் பத்து மணிக்கே வந்துவிடுகிறது. வியர்த்து விறுவிறுக்க வைத்து ஒரு வேலையை செய்யமுடியாதபடி உழைப்பாளர்களை பாடாய்ப்படுத்துகிறது. வேலைசெய்துவிட்டு, வீடுநோக்கி அந்த இளைஞன் அவசரத்தனமாக நடந்துகொண்டிருந்தான். வீதியெங்கும் துருத்திக்கொண்டிருந்த கற்கள் அவன் பாதங்களை நோகடிக்கமுயன்று தோற்றுப்போயின. வைரம்பாய்ந்ததாக அவனது கால்களை உருமாற வைத்ததற்கு காரணம் கடுமையான உழைப்புத்தான்.

வேகமாகச் சென்றுகொண்டிருந்தவனை சற்றுத் தடுத்து நிறுத்தின சில காவோலைகள். இரவடித்த காற்றுக்கு நாலைந்து காவோலைகள் ஒன்றாக வீதியை மறித்தபடி வீழ்ந்துகிடந்தன. எட்டிக்காலால் அவற்றை ஒதுக்கியபடி நகரமுனை கையில், 'சுரீர்' என்று பாதத்தில் திடீர் என ஒரு வலி. என்னவென்று குனிந்துபார்க்க, தன்வேலையை முடித்துவிட்ட திருப்தியோடு அருகில் இருந்த பற்றைக்குள் பரபரப்பாச் சென்று பதுங்கிக்கொண்டது ஒரு பாம்பு. அது கடித்த இடத்தில் இரண்டு புள்ளிகள். அவற்றில் இருந்து முத்துத் துளிபோல குருதி எட்டிப் பார்த்தது. இவனுக்கு பாம்பு கடித்து விட்டது என்ற நினைப்பே தலையைச் சுற்றவைத்தது. கைத்தொலைபேசிக்கு உயிரூட்டி, நண்பனுக்கு நிலைமையை எடுத்துரைத்தான்.

அதன்பின்னர் பத்து நிமிடங்களுக்குள் நண்பனின் மோட்டார் சைக்கிள் அவ்விடத்துக்கு வர அங்கிருந்து இருவரும் வைத்தியசாலைக்கு சென்றனர். பாம்புக்கடி என்றதுமே வைத்தியசாலையில் ஒரு பதற்றம் தொற்றிக்கொண்டது. ஆனாலும் என்ன செய்வது? அந்த வைத்தியசாலையில் இருந்த வசதிகள் ஆரம்ப சிகிச்சையை மேற்கொள்வதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தன. மேலதிக சிகிச்சைக்கு பெரியாஸ்பத்திரிக்குத்தான் போக வேண்டும்.

ஆனால் மற்றைய இடங்கள் போல யாழ்ப்பாணத்துக்கும் அந்தத்தீவுக்கும் இடையே எந்தவொரு தரைத் தொடர்பும் இல்லை. எல்லாப் போக்குவரத்துகளும் படகுகளை நம்பியே இருந்தன. அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு என கியூமெடிக்கா நிறுவனத்தின் ஆதரவுடன் ஒரு அம்புலன்ஸ் படகுச்சேவை நடைபெறுவதுண்டு.

"அம்புலன்ஸ் படகில் என்னையும் விரைவாகப் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றுவிடுவார்கள்" என்று நம்பிக்கொண்டிருந்தான் பாம்புக்கடிபட்டிருந்த இளைஞன். ஆனால் ஒரு சில மணித்தியாலயங்களாக இறங்குதுறையில் காத்திருந்தபோதுதான் அம்புலன்ஸ் படகு சில மாதங்களாக செயலிழந்துபோன விடயம் அவன் தலைக்குள் உறைத்தது. முற்பகல் பதினொருமணியளவில் பாம்பிடம் கடிவாங்கிய அந்த இளைஞன் பிற்பகல் இரண்டு மணியளவிலேயே பயணிகள் படகில் ஏற்றப்பட்டு இரண்டு மணிநேர பிரயாணத்தின் பின்னரே பெரியாஸ்பத்திரியை வந்தடைய முடிந்தது. இன்னும் சிறிது நேரம் தாமதித்திருந்தால் பாம்பால் கடியுண்ட இளைஞனின் நிலை அதோகதியாகியிருக்கும் என்று போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் தெரிவித்தனர். நல்லவேளையாக அந்த இளைஞன் காப்பாற்றப்பட்டு விட்டான்.

யாழ். குடாவுக்குச் சொந்தமான மிகப்பெரிய தீவான நெடுந்தீவில் இதுதான் நிலை. அங்கு அவசர நோயாளர்களை விரைவாக கொண்டுவந்து சேர்ப்பதற்கு சேவையில் ஈடுபட்டுவந்த அம்புலன்ஸ் படகு ஏப்ரல் மாதத்தோடு நோய்பிடித்து முடங்கிப்போய் விட்டது. எத்தனையோ பேருக்கு உரிய காலத்தில் சிகிச்சையளிக்க கடல் மேல் ஓடித்திரிந்த அந்தப் படகுக்கு சிகிச்சையளிப்பார் யாருமில்லை. அதனால் கைவிடப்பட்ட ஓர் அநாதைக் குழந்தை போல இறங்குதுறையில் ஓர் மூலையில் கட்டப்பட்டு கண்ணீர் வடித்தபடி இருக்கிறது அந்த அம்புலன்ஸ் படகு.

**ஓடுகாலி**

கியூமெடிக்கா அமைப்பினால் இந்தப் படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் ஏப்ரல் மாதமே இந்தப் படகு பழுதடைந்திருந்த போதும் அதனைத் திருத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கையையும் குறித்த நிறுவனமோ அல்லது சுகாதாரத் திணைக்களமோ எடுக்காது அலட்சியமாகவே இருந்துவருகின்றன. குறித்த படகினைத் திருத்தாததற்கு பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் தலையீடு எனப் பல்வேறு இடையூறுகள் இருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் உரியவர்கள் மூன்றுமாதங்கள் கடந்தும் தீர்க்கமுடியாமல் திண்டாடுகிறார்களா? அல்லது படகுச் சேவை நடத்துவது மட்டும்தான் எங்களது பணி; அதனைத் திருத்துவது அல்ல என்று வாளாவிருக்கிறார்களா? என்பது புரியாமல் நெடுந்தீவு மக்கள் அங்கலாய்க்கிறார்கள். பாம்புக்கடி, பிரசவம், டெங்கு, விபத்துக் காயங்கள் என்பவற்றுக்கு அவசரமான மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்கு அம்புலன்ஸ் படகு இல்லாததனால் நெடுந்தீவு நோயாளர்கள் உரிய காலத்துக்குள் போதனா வைத்தியசாலையை அடையமுடியாது இருக்கிறது. அத்தோடு நீண்டநேரம் காத்திருந்த பின்னரே பயணிகள் படகில் பயணிக்க முடிகிறது. இதனால் அவசர நோயாளர்கள் உயிராபத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று அந்தப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்துடனான தொப்புள்கொடி தரைத் தொடர்பு இல்லாத நிலையில் நெடுந்தீவைக் குடாநாட்டுடன் படகுச்சேவைகளே அரும்பொட்டாக இணைத்து வருகின்றன. அந்த இணைப்பில் அம்புலன்ஸ் படகுக்கு முக்கிய பங்குண்டு. நெடுந்தீவு நோயாளர்களின் கண்கண்ட தெய்வமாக அந்தப் படகே விளங்குகிறது. ஆனால் இப்போது அது முடங்கிப்போய் விட்டதால் மாற்று வழி என்ன என்பது குறித்து நெடுந்தீவு மக்கள் அங்கலாய்க்கிறார்கள். படகைத் திருத்தும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படாததைக் கண்டு, இனிமேல் அம்புலன்ஸ் படகுச்சேவை இடம் பெறாதோ என்ற ஐயமும் அவர்களிடம் தொற்றத் தொடங்கியுள்ளது. இதேவேளை குறித்த படகுச்சேவையை நடத்தி வந்த கியூமெடிக்கா நிறுவனம் படகு பழுதடைந்த பின்னர் வேறொரு படகினையாவது அம்புலன்ஸ் படகுச் சேவையில் தற்காலிகமாக இணைத்திருந்தால் மக்களின் அவலம் குறைந்திருக்கும் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

நெடுந்தீவு மக்களின் அடிப்படைத் தேவைகளில் அம்புலன்ஸ் படகும் ஒன்று. அதனை விரைவில் திருத்தி அமைக்கவோ அல்லது புதிய படகு ஒன்றை அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடுத்தவோ உரியவர்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் ஊசலாடிக்கொண்டிருக்கும் அவசர நோயாளர்களுக்கு உயிரூட்டமுடியும். நோயாளர்களுக்கும் அம்புலன்ஸ் படகுக்கும் உயிரூட்டுவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில்
# MITSUBISHI மற்றும் FUSO சேவை முகாம்

**இலவச வாகனப் பரிசோதனை, சிறிய திருத்தங்கள் மற்றும் பல!**



ஜப்பானில் பயிற்சி பெற்ற எமது தொழில்நுட்ப நிபுணர்கள் **ஜூன் 15ஆம் 16ஆம் திகதிகளில்** யாழ்ப்பாணத்தில் இருப்பார். உங்கள் வாகனத்தை இல. 29, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா கிளைக்குக் கொண்டு வந்து, பின்வரும் சேவைகளைப் பெறுங்கள்:

- இலவச வாகனப் பரிசோதனை
- இலவச வாகன நிலைமை அறிக்கை
- இலவச சிறிய திருத்த வேலைகள்
- சகல உதிரிப்பாகங்களுக்கும் 20% விலைக்கழிவு




முன்கூட்டியே பதிவுசெய்ய அழைக்கவும்:
நவரத்னம் 077 1361441
ஜனக 077 3556631
இஸ்மத் 077 3318815

**யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா PLC**
29, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 3678-9
www.unitedmotors.lk

Genuine Parts | Service

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயப் பூக்கள்





வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் சமிக்கை விளக்குகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. வாகனம் ஒடுவோரைத் திக்குமுக்காட வைக்கும் தெரு சமிக்கை விளக்கு ஒன்று சீனாவில் நிறுவப்பட்டுள்ளது. சீனாவின் Chongqing நகரில் உள்ள பல தெருக்கள் சந்திக்கும் சந்தி ஒன்றிலேயே இத் தெருசமிக்கை விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. உலகிலே உள்ள வீதி சமிக்கை விளக்குகளில் சீனாவில் தோன்றியுள்ள இந்த சிக்கலான வீதி சமிக்கை உலக ரீதியில் பேசப்படுகிறது.




# காலை உணவை தவிர்க்க கூடாது



இன்றைய அவசர உலகத்தில் பெரும்பாலானவர்கள் காலை உணவை ஒழுங்காக சாப்பிடாமல் தவிர்த்து வருகின்றனர். இதற்கு நேரமின்மையே காரணமென்று பலர் தெரிவிக்கின்றனர். இரவு சாப்பிட்டபின், 6 முதல்10 மணி நேரங்கள் வரை, எதுவும் சாப்பிடாமல் நீண்ட இடைவெளிக்கு பின் காலை உணவு சாப்படுவதால் உடல் ஆரோக்கிய நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே காலையில் நாம் சாப்பிடும் உணவுதான் நாள் முழுதும் சுறுசுறுப்பாகவும் புத்துணர்ச்சியுடன் செயல் பட மூளை மற்றும் தசைகளுக்கு தேவையான சக்தியை அளிக்கிறது. காலை உணவை சாப்பிடுவதால் குழந்தைகளின் நினைவுத்திறன், பிரச்சினைகளை தீர்க்கும் திறன் மற்றும் தசைகளுக்கு தேவையான சக்தியை அளிக்கிறது .

குறிப்பாக குளுக்கோஸை அளிக்கும் கார்போஹைட்ரேட் நிறைந்த உணவாக சாப்பிடுவது மூளைத்திறனை அதிகரிக்கும். சிலர் உணவுக் கட்டுபாட்டு மூலம் உடல் எடையை குறைக்கிறேன் என சாப்பாட்டை குறைப்பது அல்லது சில வேளை சாப்பிடாமல் இருப்பது போன்ற தவறுகளை செய்கின்றனர் . சாப்பிடாமல் இருந்தால் தான் உடல் எடை அதிகரிக்கும் அபாயம் உள்ளது . மூன்று வேலையும் முறையாக சாப்பிடுபவர்கள் இயல்பான எடையுடன் காணப்படுவர் .

ஏனென்றால் ,காலை உணவை தவிர்ப்பவர்கள் வேறு விதமான உணவுகள் மற்றும் நொறுக்கு தீனிகள் போன்றவற்றை சாப்பிடுவதால் அவர்களின் உடல் எடை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. காலை உணவை முறையாக உட்கொல்பவர்களுக்கு Blood Sugar அளவு இயல்பாக இருப்பதால் இடையில் பசி தோன்றாது.

★ காலை வேளையில் உணவை தவிர்க்காமல் சாப்பிடுவதால் இதயம் ஜீரண மண்டலம் மற்றும் எலும்பு ஆரோக்கியமாக இருக்கும். காலை உணவில் நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருள்கள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவற்றை சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. அது ஜீரண சக்தியை அதிகரிக்கும். காலையில் சாப்பிடும் போது அதிகம் கொழுப்பு நிறைந்த உணவுப் பொருளாக சாப்பிடாமல் சத்தான சரிவிகித உணவாக சாப்பிடுதல் நலம். அதிக கொழுப்பு நிறைந்த உணவாக சாப்பிடும்போது அவை உடலின் ஆற் றலை அதிகரிப்பதற்கு பதிலாக மந்தநிலையை உருவாக்கிவிடும்.

எனவே ஆரோகியமான வாழ்வு, சுறுசுறுப்பான செயல்பாடு, உடல்நலம் ஆகியவை கருத்தில் கொண்டு, காலை உணவை தவிர்க்காமல், சத்தான உணவைச் சாப்பிடு வோம்.



# தூக்கம் அவசியம்

பிறந்த குழந்தைக்கு 16-20 மணி நேரம், வளரும் குழந்தைகளுக்கு 10-12 மணி நேரம் ஆண்களுக்கு 6 மணி நேரமும் பெண்களுக்கு 7 மணி நேரமும் தூக்கம் தேவைப்படும். கருவுற்ற பெண்கள் முதல் மாதங்களில் சற்று அதிகம் தூங்குவர்.

ஒரு மணி நேரம் தூக்கம் கெட்டால் அதனை அடுத்த பகல் பொழுதிலோ அல்லது இரவிலோ அதிகமாக தூங்கி உடல் சரி செய்கிறது. இது போன்று முடியாத போது மற்ற வேலைகளை அது பாதிக்கிறது. வயது ஏற ஏற ஆழ்ந்த தூக்கம் வருவது இல்லையெனில் நீரிழிவு நோய், இதய நோய் என்பன ஏற்பட வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது. பகலில் உட்கார்ந்தவாறு தூங்கி விழுந்தால் சிறு சிறு இடைவெளிகளில் தூங்கினால் சரியாகத் தூங்கவில்லை என அர்த்தம்.

மூளையும், நரம்புகளும் சரியாக வேலை செய்யத் தூக்கம் அவசியம். தூக்கக் குறைவினால் வேலையின்மை, கவனக்குறைவு, ஞாபக மறதி, மன உளைச்சல் ஆகியன ஏற்படும். குழந்தைகள் ஆழ்ந்த தூக்கத்தில் தான் ஓமோன் வளர்ச்சி பெற்று வளர்கின்றனர். புரத உற்பத்தி தூக்கத்தில் தான் அதிகரிக்கும். தூங்குகிறவர்கள் தான் [illegible] முடியும்.

[illegible] கெடுவதால் ரத்தக்கொதிப்பு, இதய நோய், நீரிழிவு நோய், மன அழுத்தம் ஆகியன ஏற்படும். எனவே தூக்கம் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்



### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் த்டைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org